# இயல் - 1
# உயிரினும் ஓம்பப் படும்

## அ. இலக்கணத் தேர்ச்சிகொள்:

**1. பிழையான தொடரைக் கண்டறிக:**

அ. காளைகளைப் பூட்டி வயலை உழுதனர் ஆ). மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்

**இ). காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.** ஈ). நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின

**2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க:**

**அ). அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்** ஆ). புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ). வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. ஈ).மயில்கள் விறலியறைப் போல் ஆடுகின்றன.

**3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

- **முடிந்தால் - இயன்றால்**
  - ♠ ஏழைகளுக்கு முடிந்தால் பொருளுதவி தரலாம்.
- **முடித்தால் - முடித்துவிட்டால்**
  - ♠ வேலையை முடித்துவிட்டால் ஊதியம் தரலாம்.

**4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை,**

- எழுத்துகளைத் **தெளிவாக உச்சரித்துப்** பழக வேண்டும்.
- **வாய்விட்டு** அல்லது **மனதிற்குள்ளேயே சொல்லிப்** பழக வேண்டும்.
- வேகமாக எழுதாமல் **நிதானமாக எழுதிப் பழக** வேண்டும்.
- **குறில், நெடில்** வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

**நம்மை அளப்போம்**

## பலவுள் தெரிக:

**1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**

அ). யாப்பிருங்கலக்காரிகை ஆ). தண்டியலாங்காரம் **இ). தொல்காப்பியம்** ஈ). நன்னூல்

**2) மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்**

**க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளல்களைத் தந்தது**

அ) க மட்டும் சரி **ஆ) க, உ இரண்டும் சரி** இ) ங மட்டும் சரி ஈ) க,ங இரண்டும் சரி

**3. “மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்” - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**

அ). அடிமோனை, அடிஎதுகை ஆ). சீர்மோனை, சீர்எதுகை

**இ). அடிஎதுகை, சீர்மோனை** ஈ). சீர்எதுகை , அடிமோனை

**4. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு**
**கருத்து 2: தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.**

அ). கருத்து 1 சரி ஆ). கருத்து 2 சரி **இ). இரண்டு கருத்தும் சரி** ஈ). கருத்து 1 சரி 2 தவறு

**5. பொருத்துக:**

**அ). தமிழ் அழகியல் - 1).பரலி சு. நெல்லையப்பர்**
**ஆ). நிலவுப்பூ - 2). தி.சு.நடராஜன்**
**இ). கிடை - 3). சிற்பி பாலசுப்பிரமணியம்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஈ). உய்யும் வழி - 4). கி.ராஜநாரயணன்

அ). 4, 3, 2, 1 ஆ). 1, 4, 2, 3 இ). 2, 4, 1, 3 **ஈ). 2, 3, 4, 1**

## குறுவினா:

1. **நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

- **நடைப்பெற்றியலும்** என்றும்
- **நடை நவின்றொழுகும்** என்றும்
- சில சொற்றொடர்களை **தொல்காப்பியம்** கூறுகிறது

2. **படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக - இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிக்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக**

படாஅம், கெடாஅ, கடாஅ – **செய்யுளிசை அளபெடை**

3. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

- கதிரவன் மாலை நேரத்தில் மறையும் பொழுது **வானம் செந்நிறமாய்** காட்சியளிக்கும்.
- அவ்வாறு உழைக்கும் **தொழிலாளர்களின் கைகள்** சிவப்பாய் காணப்படும்.
- இதை வியந்து பாட **தமிழின் துணை வேண்டும்.**

4. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்து தொடர் அமைக்க.**

விடியல் வானம் வனப்பு நிறைந்தது.

## சிறுவினா:

1. **சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

- ♣ **இசையோடும் இசைக்கருவியோடும்** தான் கவிதை பிறக்கிறது.
- ♣ **ஓசையும் பொருளும்** இணைந்த கவிதை கலைவடிவம் கொள்கிறது.
- ♣ இதனையே அந்தக் கவிதையின் **ஒலிப்பின்னல்** என்கிறோம்.
- ♣ இப்பண்பைச் **சங்கப் பாடல்கள்** பலவற்றில் காணலாம்.
- ♣ **"கடுந்தடு தானை மூவிருங்கூடி"** என்ற புறநானூற்றுப் பாடலில் வன்மையான உணர்ச்சியை காட்ட **க, த, ட, ற** என்ற எழுத்து அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ♣ சில ஒலிகள் மற்றும் சில சொற்கள் திரும்ப வரல் தன்மை பெற்றிருக்கிறது

2. **செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம் தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- ♣ சிவந்த கதிர்களை உடைய சூரியன், மாலை நேரத்தில் **மலைகளுக்குப் பின்னால்** தன் தலையைச் சாய்த்து மறைவான்.
- ♣ அவ்வேளையில் **சூரிய கதிர்கள் பட்டு வானம்** எங்கும் செந்நிறமாய்க் காட்சியளிக்கும்.
- ♣ அக்காட்சியினை கற்பனை நயத்தோடு கூற எண்ணிய கவிஞர் **"சிவந்த வானத்தை –செந்நிறத்துப் பூக்கள் நிறைந்த காடு"** என்று வருணிக்கிறார்.

3. **"ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடஞ்சுட்டி பொருள் விளக்கு.**

**இடம்: தண்டியலங்காரப்** பாடலில் இடம் பெற்றுள்ளது

**பொருள்:** உலகத்தின் **புற இருளை** அகற்றுவது

**விளக்கம்:** உலகத்தின் புற இருளை அகற்றுவது **சூரியன்.** மக்களின் அறியாமை என்னும் இருளை அகற்றுவது **தன்னிகரில்லாத தமிழ்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

Scanned with OKEN Scanner

4. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே.<br>- நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே கூவி வா! வா!<br>- சிற்பி பாலசுப்பிரமணியம் |

**பழையன கழிதலும் புதியன புகுதலும்:**

- ♣ வழக்கொலிந்த **பழமையைப் புறந்தள்ளி**, **புதுமைக்கு புத்துயிர்** ஊட்ட வேண்டும் என்கிறது நன்னூல்.
- ♣ இது அனைவராலும் **ஏற்றுக்கொள்ளக்கூடிய** ஒன்று.

**மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு**

- ♣ புதுமை என்ற பெயரால் வழக்கொலிந்த தமிழே! மீண்டும் பழமை நலம் பெற்று மெய்சிலிர்க்க, **குயில்போல் கூவி வா! வா!** என்கிறார் சிற்பி.
- ♣ இது சிந்திக்க வேண்டிய ஒன்று.

**இரு பாக்களின் வேற்றுமை:**

- ♣ முன்னது பழமை அழித்து புதுமை வேண்டும் என்கிறது.
- ♣ பின்னது எவற்றையும் **பழமையென தள்ளிவிடாதே**! பழமையிலும் சில சிறப்புகள் உண்டு என்கிறது.
- ♣ நல்ல உயிர்ப்பு உண்டு என்கிறது

## நெடுவினா:

1. **கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

- ❖ முன்னுரை
- ❖ நடை அழகியல்
- ❖ மொழிசார் கலை
- ❖ ஒலிப்பின்னல்-ஒலிக்கோலம்
- ❖ சொற்புலம்
- ❖ தொடரியல் போக்கு
- ❖ முடிவுரை

**முன்னுரை:**

கவிதை நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நடை அழகியல்:**

- ♠ இதன் உருவாக்கத்திற்கு **தொல்காப்பியம் தான்** தளம் அமைத்து தருகிறது.
- ♠ நடை என்பது **தொல்காப்பியத்தின் அடிப்படை** கருத்து.

**மொழிசார் கலை:**

- ♠ **உவமை, உருவகம்** போன்றவை மொழியின் வழக்குகளை கலையின் வழக்காக கவிதை வளர்க்கிறது.

**ஒலிப்பின்னல்-ஒளிக்கோலம்:**

- ♠ தொன்மையான மொழிகள் **சைகை மற்றும் இசையில்** இருந்து தொடங்குகிறது.
- ♠ **மொழிசார்ந்த கவிதைகள்** இசை மற்றும் இசைக் கருவிகளோடு பிறக்கின்றன.
- ♠ ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
- ♠ எ.கா: **"நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை".**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- சில சொற்கள் மற்றும் சில ஒலிகள் திரும்ப வரல் தன்மை பெற்று அமைவது **ஒலிக்கோலம்.**

**சொற்புலம்:**

- ஒரு பொருளை குறிக்கும் பல சொல்லாகவும், பல பொருளை குறிக்கும் **ஒரு சொல்லாகவும் மீண்டும் மீண்டும்** வந்து பாடலை சிறப்பிப்பது.

**தொடரியல் போக்கு:**

- உரைநடை வழக்குகளையும் பேச்சு வழக்குகளையும் **செய்திகள் மற்றும் உணர்வுகளின்** அடிப்படையில் எடுத்து கூறுவது.

**முடிவுரை:**

- நடை அழகியல், மொழிசார் கலை, ஒலிப்பின்னல்-ஒலிக்கோலம், சொற்புலம், தொடரியல் போக்கு ஆகியவைகள் தான் **கவிதை நடையைக் கட்டமைக்கும் அழகியல்** கூறுகள் என்பதை இக்கட்டுரையில் காண்டோம்.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

- **முன்னுரை**
- **மொழிப்பற்று**
- **சமூகப்பற்று**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- தமிழ் இன்பத்தை மீட்டவும் உணர்த்தவும் பிறந்த **புலவன் பாரதி**.
- அவரின் **மொழிப்பற்றையும், சமுகப்பற்றையும்** அவர் எழுதிய கடிதம் வாயிலாக காண்போம்.

**மொழிப்பற்று:**

- **தமிழ், தமிழ், தமிழ்** என்று தமிழை வளர்ப்பதே கடமையாக கொள்.
- ஆனால் **புதிய செய்தி, புதிய யோசனை** என தமிழில் ஏறிக் கொண்டே போக வேண்டும்.
- தமிழ் கல்வி கூடங்களில் **நவீன கலைகள்** எல்லாம் பயிற்சி பெற்று விளங்கட்டும்.

**சமூகப்பற்று:**

- **"தமிழ்நாடு வாழ்க, தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க"** என சமூகத்தின் மீது அக்கறை கொள்கிறார்.
- ஆணும் பெண்ணும் ஒரு உயிரின் **இரு தலைகள்.**
- அவை ஒன்றோடு ஒன்று தாழ்ந்ததில்லை.
- **பெண்ணை அடிமை செய்தவன்** தன் கண்ணைக் குத்திக் கொண்டவன் ஆவான்.
- இவ்வாறு அவரின் சமூகப்பற்றை விளக்குகிறார்.

**முடிவுரை:**

- தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை **"வேரில்லாத மரம் கூடில்லாத பறவை"**.
- அதைத்தான் **பாரதியும் தம் இலக்கியங்கள்** மூலம் செய்திருக்கிறார் என இக்கட்டுரை மூலம் விளக்கியுள்ளார்.

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

- **முன்னுரை**
- **ஏற்றதுணை**
- **கூண்டதனை உடைத்து எழுந்த சிங்கம்**
- **முடிவுரை**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

Scanned with OKEN Scanner

**முன்னுரை:**

- ♣ தமிழ்மொழி **நம் அடையாளம்**, நம் **பண்பாட்டின் நீளம்**.
- ♣ **தோன்றிய காலம்** முதல் பேசப்பட்டு எழுதப்பட்டு வருகிறது.

**ஏற்ற துணை:**

- ♠ சூரியன் **மாலை நேரத்தில் மலை முகடுகளில்** மறைவான்.
- ♠ அப்போது வானம் **செந்நிறக்கடாய்** காட்சியளிக்கும்.
- ♠ அதுபோல உழைக்கும் தொழிலாளர்கள் **கைகள் சிவந்து தோளின் மீது வியர்வை துளிகள்** வீற்றிருக்கும்.
- ♠ இக்காட்சியை வியந்து பாட **"ஏற்ற துணை"** தமிழ்மொழி மட்டுமே என்கிறார் கவிஞர் சிற்பி.

**கூண்டதனை உடைத்து எழுந்த சிங்கம்:**

- ♠ கவிஞர்களின் கவிதை வெறிக்கு பொருத்தமான உணவாக விளங்கக் கூடியது தமிழ்மொழி.
- ♠ பாண்டிய நாட்டில் **முச்சங்கத்தில் கொலுவிருந்தது தமிழ்**.
- ♠ **பாரி முதலான கடையெழு வள்ளல்களை** ஈன்றவள் தமிழ்.
- ♠ அதற்கு தமிழே! மெய் சிலிர்க்கும்படியாக **கூண்டை உடைத்து வெளிவரும் சிங்கம் போல்** சீறிக் கொண்டு வா.
- ♠ **உன் சீரிளமை திறம் தான்** என்ன என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

**முடிவுரை:**

- ♠ பழமையான மொழி என்றாலும் **அதன் சீரிளமை போற்றுதலுக்குரியது**.
- ♠ அதை என்றும் **அழியாமல் புதுப்பித்துக்** கொள்கிறது.

**4. "சொல்லோவியங்கள்" என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி நன்றியுரை எழுதுக.**

<u>**சொல்லோவியங்கள்**</u>

<u>**(கவிதை)**</u>

<u>**நூல் வெளியீட்டு விழா**</u>

**நாள்:** 05-11-2020 5.00 (பி.ப)

**இடம்:** அரசு மேல்நிலைப்பள்ளி, சென்னை.

**நிகழ்ச்சி நிரல்:**

- தமிழ்த்தாய் வாழ்த்து **(மாணவர்கள்)**
- குத்து விளக்கேற்றல் **(திருமதி. கவிதா)**
- வரவேற்புரை **(தலைமை ஆசிரியர்)**
- நூலை வெளியிடுபவர் **(கவிஞர் வைரமுத்து)**
- வாழ்த்துரை **(கவிஞர் யுகபாரதி)**
- கருத்துரை **(பா. விஜய்)**
- நன்றியுரை **(திரு.விக்னேஷ்)**
- நாட்டுப்பண் **(மாணவர்கள்)**



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**நன்றியுரை:**

- அனைவருக்கும் கவி வணக்கம்.
- இந்நூல் வெளியிட்டு விழாவிற்கு வருகைதந்து நூலினை வெளியீட்டு பேருரை ஆற்றிய **கவிஞர் வைரமுத்து** அவர்களுக்கும்,
- வாழ்த்துரை நல்கிய கவிஞர் **யுகபாரதி** அவர்களுக்கும்,
- கருத்துரை நல்கிய கவிஞர் **பா.விஜய்** அவர்களுக்கும்,
- எம்பள்ளியின் **தலைமையாசிரியர்** மற்றும் அனைத்து **ஆசிரியர்களுக்கும்,**
- மேலும் எம்பள்ளி **மாணவ மாணவியர்களுக்கும்** மிக்க நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி!! வணக்கம்!!!.**

*******

## இலக்கணக் குறிப்பு:

1. **செந்தமிழ், செந்நிறம், செம்பரிதி** – பண்புத்தொகைகள்
2. **சிவந்து** – வினையெச்சம்
3. **வியர்வை வெள்ளம்** - உருவகம்
4. **முத்துமுத்தாய்** - அடுக்குத்தொடர்
5. **உயர்ந்தோர்** - விணையாலணையும் பெயர்
6. **வெங்கதிர்** - பண்புத்தொகை
7. **இலாத** - இடைக்குறை

## உறுப்பிலக்கணம் :

1. **சாய்ப்பான் = சாய் + ப் + ப் +ஆன்**

   சாய் - பகுதி, ப்-சந்தி, ப்-எதிர்கால இடைநிலை, ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

2. **விம்முகின்ற = விம்மு + கின்று + அ**

   விம்மு – பகுதி, கின்று – நிகழ்கால இடைநிலை, அ-பெயரெச்ச விகுதி.

3. **வியந்து = விய + த் (ந்) + த் +உ**

   விய – பகுதி, த் -சந்தி, ந்-ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ-வினையெச்ச விகுதி.

4. **இருந்தாய் = இரு + த் (ந்) + த் +ஆய்**

   இரு – பகுதி, த்-சந்தி, (ந்-ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, ஆய்-முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

5. **வந்து = வா(வ) + த் (ந்) + த் + உ**

   வா – பகுதி, வ எனக் குறுகியது விகாரம், த் - சந்தி, ந் ஆவது விகாரம்,

   த் -இறந்த கால இடைநிலை, உ-வினையெச்ச விகுதி

6. **உயர்ந்தோர் = உயர் + த் (ந்) + த் + ஓர்**

   உயர் - பகுதி, த்-சந்தி, ந் - ஆனது விகாரம், த்-இறந்த கால இடைநிலை,

   ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி, ஆர் என்பதன் ஈற்றயலெழுத்தான "ஆ" "ஓ" ஆகத் தெரியும்

## புணர்ச்சி விதி:

1. **செம்பரிதி = செம்மை + பரிதி**

   **விதி:** ஈறுபோதல் - செம் + பரிதி – செம்பரிதி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2. வானமெல்லாம் = வானம் + எல்லாம்**

**விதி:** உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – வானமெல்லாம்.

**3. உன்னையல்லால் = உன்னை + அல்லால்**

**விதி:** இஈஐ வழி யவ்வும் - உன்னை + ய் + அல்லால்

**விதி:** உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – உன்னையல்லால்.

**4. செந்தமிழே = செம்மை + தமிழே**

**விதி:** ஈறு போதல் - செம் + தமிழே

**விதி:** முன்னின்ற மெய் திரிதல் - செந்தமிழே

**5. ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்**

**விதி:** உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - ஆங்க் + அவற்றுள்

**விதி:** உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – ஆங்கவற்றுள்.

**6. தனியாழி = தனி + ஆழி**

**விதி:** இ ஈ ஐ வழி யவ்வும் - தனி + ய் + ஆழி

**விதி:** உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – தனியாழி

**7. வெங்கதிர் = வெம்மை + கதிர்**

**விதி:** ஈறு போதல் - வெம் + கதிர்

**விதி:** முன்னின்ற மெய் திரிதல் – வெங்கதிர்

## தமிழாக்கம் தருக:

1. Learning is a treasure that will follow its owner everywhere.

**கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு**

2. A new language is a new life.

**ஒரு புதிய மொழி என்பது ஒரு புதிய வாழ்க்கை போன்றது**

3. If you want people to understand you, speak their language.

**மக்கள் உன்னை புரிந்துகொள்ள வேண்டுமானால் அவர்களின் மொழியில் நீ பேசு**

4. Knowledge of languages is the doorway to wisdom.

**மொழிகளின் அறிவே ஞானத்தின் வழித்தடம்**

5. The limits of my language are the limits of my world

**என் மொழியின் எல்லையே என் உலகத்தின் எல்லை**

## இலக்கிய நயம் பாராட்டுக:

**முச்சங்கங் கூட்டி**
**முதுபுலவர் தமைக் கூட்டி**
**அச்சங்கத் துள்ளே**
**அளப்பரிய பொருள் கூட்டி**
**சொற்சங்க மாகச்**
**சுவைமிகுந்த கவிகூட்டி**
**அற்புதங்க ளெல்லாம்**
**அமைந்த பெருமாட்டி!**

**- கண்ணதாசன்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

## இலக்கிய நயம் பாராட்டுதல்

**மையக்கருத்து:**

❖ பொருள் நிறைந்த இலக்கியங்களைப் படைத்துக் கொண்டு புதுப்பொலிவுடன் திகழ்கிறாள் தமிழ் பெருமகள் என கண்ணதாசன் தமிழ் மொழியை போற்றி பாடியுள்ளார்.

**மோனை நயம்:** "முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை"

| | | | | |
|---|---|---|---|---|
| மு | : | **மு**ச்சங்கங் | - | **மு**துபுலவர் |
| அ | : | **அ**ச்சங்கங் | - | **அ**ளப்பரிய |

**எதுகை நயம்:** "இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை"

| | | | | |
|---|---|---|---|---|
| ச் | : | மு**ச்**சங்கங | - | அ**ச்**சங்கங் |
| ற் | : | சொ**ற்**சங்க | - | அ**ற்**புதங்க |

**இயைபு நயம்:** "கடைசி எழுத்து ஒன்றி வருவது இயைபு"

| | | | | |
|---|---|---|---|---|
| டி | : | தமைக் கூட்**டி** | - | பொருள் கூட்**டி** |
| டி | : | கவிகூட்**டி** | - | பெருமாட்**டி!** |

**அணி நயம்:**

இப்பாடலை அணிநயத்துடன் கவிஞர் கண்ணதாசன் இயற்றியுள்ளார்.

**சந்த நயம்:**

இப்பாடலை சந்த நயத்துடன் பாடப்பட்டுள்ளது.

**உவமைத் தொடர்களைச் சொற்சொடர்களில் அமைத்து எழுதுக:**

1. **தாமரை இலை நீர்போல**

   சாதுக்கள் **'தாமரை இலை நீர்போல'** இல்லற வாழ்வில் பற்றற்றுக் கிடந்தனர்

2. **கிணற்றுத் தவளை போல**

   நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ளாமல் **'கிணற்றுத் தவளை போல'** வாழ்வது அறிவுக்கு அழகல்ல.

3. **எலியும் பூனையும் போல**

   நானும் என் தங்கையும் **'எலியும் பூனையும் போல'** எப்பொழுதும் சண்டையிட்டுக் கொள்வோம்.

4. **அச்சாணி இல்லாத தேர் போல**

   போதிய ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வியானது **"அச்சாணி இல்லாத தேர்போல"** தள்ளாடுகிறது.

5. **உள்ளங்கை நெல்லிக்கனி போல:**

   மரம் வளர்த்தால் மழை வரும் என்பது **"உள்ளங்கை நெல்லிக்கனி போல"** யாவரும் அறிந்த ஒன்றே.

************



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

Scanned with OKEN Scanner

## படிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| **Subscription** | உறுப்பினர் கட்டணம் | **Archive** | காப்பகம் |
| **Fiction** | புனைவு | **Manuscript** | கையெழுத்துப் பிரதி |
| **Biography** | வாழ்க்கை வரலாறு | **Bibliography** | நூல் நிரல் |

## அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| **பாரதியின் கடிதங்கள்** | ரா.அ. பத்மநாபன் |
| **இலக்கண உலகில் புதிய பார்வை** | டாக்டர் பொற்கோ |
| **தமிழ் அழகியல்** | தி.சு. நடராஜன் |
| **காட்டு வாத்து** | ந. பிச்சமூர்த்தி |
| **நெல்லூர் அரிசி** | அகிலன் |
| **சுவரொட்டிகள்** | ந. முத்துசாமி |
| **இளந்தமிழே** | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| **தமிழ் மொழியின் நடை அழகியல்** | தி.சு. நடராஜன் |
| **தம்பி நெல்லையப்பருக்கு** | பாரதியார் |

VVMS-PV www.Padasalai.Net

***************



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் - 2
# பெய்யெனப் பெய்யும் மழை

## இலக்கணத் தேர்ச்சிகொள்:

**1. தமிழில் திணைப்பாகுபாடு ………… அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**

**அ). பொருட்குறிப்பு** ஆ). சொற்குறிப்பு இ). தொடர்க்குறிப்பு ஈ). எழுத்துக்குறிப்பு

**2. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம் பெற்ற இலக்கண நூல் ……….**

அ). நன்னூல் ஆ). அகத்தியம் **இ). தொல்காப்பியம்** ஈ). இலக்கண விளக்கம்

**3. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே………**

அ). அஃறிணை, உயர்திணை **ஆ). உயர்திணை, அஃறிணை**
இ). விரவுத்திணை, அஃறிணை ஈ). விரவுத்திணை, உயர்திணை

**4. பொருத்தி விடைத் தேர்க:**

**அ). அவன் அவள் அவர் - 1). உளப்படுத்தாத தன்மைப் பன்மை**
**ஆ). நாங்கள் முயற்சி செய்வோம் - 2). உளப்பாட்டுத் தன்மைப் பன்மை**
**இ). நாம் முயற்சி செய்வோம் - 3). தன்மைப் பன்மைப் பெயர்கள்**
**ஈ). நாங்கள், நாம் - 4). பதிலிடு பெயர்கள்**

**அ). 4, 1, 2, 3** ஆ). 2, 3, 4, 1 இ). 3, 4, 1, 2 ஈ). 4, 3, 1, 2

**5. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கி கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?**

♣ **திணை, பால், எண், இடம்** ஆகியன மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்க்கும் பயன்படுத்துவதற்கும் உதவுகின்றன.

**6. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

♣ மாணவர்கள் தேர்வு எழுதினர்.

♣ உறவினர்கள் திருமண விருந்தில் கலந்து கொண்டனர்.

## நம்மை அளப்போம்

## பலவுள் தெரிக:

**1. பொருத்துக:**

**அ). குரங்குகள் - 1). கன்றுகளைத் தவிர்த்தன**
**ஆ). விலங்குகள் - 2). மரங்களிலிருந்து வீழ்ந்தன**
**இ). பறவைகள் - 3). குளிரால் நடுங்கின**
**ஈ). பசுக்கள் - 4). மேய்ச்சலை மறந்தன**

அ). 1, 3, 4, 2 **ஆ). 3, 1, 4, 2**
இ). 3, 2, 1, 4 ஈ). 2, 1, 3, 4

**2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது**

அ). சூரிய ஒளிக்கதிர் ஆ). மழை மேகங்கள்
**இ). மழைத்துளிகள்** ஈ). நீர்நிலைகள்

**3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்**

அ). பருவநிலை மாற்றம் **ஆ). மணல் அள்ளுதல்**
இ). பாறைகள் இல்லாமை ஈ). நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**4. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென – தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு**

அ). வினைத் தொகை ஆ). உரிச்சொல்தொடர்

இ). இடைச்சொல் தொடர் **ஈ). ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

**5. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்தவது**

**அ). கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது** ஆ). பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ).காலநிலை மாறுபடுகிறது ஈ). புவியின் இயக்கம் வேறுபடுகிறது

## குறுவினா:

**1. ஆளுக்கொரு மரம் வளர்ப்போம். என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

- **மழையைப் பெற** மரம் வளர்க்க வேண்டும்.
- பூமியின் **பசுமையைப் பாதுகாப்பதில்** ஒவ்வொரு மனிதரும் பங்கெடுக்க வேண்டும் என்பனவற்றை வலியுறுத்துவேன்.

**2. இனநிரை – பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக?**

- **இனநிரை** = இனம் + நிரை
- **விதி:** மவ்வீறு ஒற்றழிந்து உயீரிறு ஒப்பவும்.

**3. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களை கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.**

- மனதின் பேராசை காரணமாக **இயற்கை வளங்களைக் கடுமையாக** சேதப்படுத்தினான்.
- **அதன் விளைவை** இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

**4. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது – விளக்கம் தருக.**

- பெய்த மழையால் **நகரத்தின் மாசுக்கள்** அகற்றப்பட்டன.
- மழைக்காலமாயினும் திடீரென வெளிப்பட்ட **சூரிய வெளிச்சத்தால்** நகரம் புதுப்பொலிவு பெறுகிறது.
- நகரம் பட்டை தீட்டிய **வெள்ளை வைரமாய்** காட்சியளிக்கிறது.

## சிறுவினா:

**1. நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள் - இக்கவிதையின் அடி, தூங்கும் பனிநீரை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்காளக்குக.**

- **பனித்துளிகளை கதிரவன் உறிஞ்சுவதாக** நாட்டுப்புறப் பாடல் பாடுகிறது.
- நீர்நிலைகளில் உள்ள நீரினை **கதிரவனின் ஒளிக்கதிர் உறிஞ்சுவதாக அய்யப்பமாதவன்** பாடியுள்ளார்.
- அய்யப்ப மாதவன் கவிதையில் இடம்பெறும் இதழ்குவித்து உறிஞ்சுகிறது என்பது **கதிரவனின் வெப்ப ஆற்றலின் வீரியத்தை உணர்த்துகிறது.**
- இது **கவிதை உருவான காலத்தின் வளர்ச்சியைக்** காட்டுகிறது.

**2. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

- வாடைக் காலத்தில் தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த கோவலர்கள், **தாம் பழகிய நிலத்தை விட்டுவிட்டு வேறொரு இடத்திற்கு** இடம் பெயர்ந்தனர்.
- **எருமை, பசு, ஆடு** ஆகிய அநிரைகள் மேடான நிலங்களில் மேயவிட்டனர்.
- அங்கு பலருடன் சேர்ந்து **கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றி** குளிரை போக்க முயற்சித்தனர்.
- இவ்வாறு **வாடைக் காலத்தில் கோவலர்கள்** பாதுகாப்பைத் தேடினர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**3. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

- **குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால் வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள்** போன்றவற்றை அழித்துக் கட்டிடங்களை கட்டக்கூடாது.
- ஆற்றில் **அளவுக்கு அதிகமாக மணல்** அள்ளக்கூடாது.
- அவ்வாறு மணல் அள்ளுவதால் **வெள்ளச் சமவெளிகள் அழிந்து** போகின்றன.
- **நீர்நிலைகளை தூர்வாரி** முறையாகப் பராமரிக்க வேண்டும்.
- **நீர்வழிப் பாதைகளை உருவாக்கி** அதை முறையாக பராமரிக்க வேண்டும்.
- **சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச்** செயல்படுத்த வேண்டும்.

**4. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.**

- **நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23-ம் நாள்** தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
- **புயல் வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து, சூறாவளி, பனிப்புயல்,** முதலான விபத்துக்கள் நிகழும் போது இந்த ஆணையம் உதவுகிறது.
- இதற்காகவே பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.
- **மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி** என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்து பேரிடர் காலங்களில் செயலாற்ற **பேரிடர் மேலாண்மை ஆணையம்** வழிவகை செய்கிறது.

## நெடுவினா:

**1. நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.**

**நான்** : வணக்கம் ஐயா

**பசுமைதாசனார்:** வணக்கம் வா….. வடிவேல்.. என்ன பணி செய்கிறாய்

**நான்** : நான் பத்திரிக்கையில் பணியாற்றுகிறேன். தங்களிடம் ஒரு விளக்கம் பெற வந்தேன்.

**பசுமைதாசனார்:** அப்படியா! கேள்.

**நான்** : நெகழி என்றால் என்ன? அதை பற்றி சொல்லுங்கள்.

**பசுமைதாசனார்:** பிளாஸ்டிக் தான் நெகழி. கிரேக்க சொல்லில் இருந்து வந்தது. இந்த உலகை அழித்து வரும் ராட்ஷசன் அது.

**நான்** : ஆனால் இதன் பயன்பாடு அதிகமாகி விட்டதே ஐயா!!

**பசுமைதாசனார்:** ஆம்! கேள்!! மண்வளம் அழிகிறது. நீர்மட்டம் குறைகிறது.

**நான்** : அப்படியா ஐயா!!

**பசுமைதாசனார்:** ஆமாம். மட்காது என எரித்தால் அது ஓசோன் படலத்தை பாழாக்குகிறது. இதனால் பல நோய்கள் வருகிறது.

**நான்** : இதற்கு தீர்வு என்ன ஐயா?

**பசுமைதாசனார்:** இதற்கு தீர்வு. நெகழி பயன்படுத்த கூடாது. நெகிழியை அறவே தவிர்க்க வேண்டும். அரசு கட்டாயம் தடை விதித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**நான்** : விழிப்புணர்வு பயன் தருமா ஐயா?

**பசுமைதாசனார்:** நிச்சயமாக! குழந்தைகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினால் நாளைய உலகம் நல்லதாய் அமையும்.

**நான்** : மிக்க நன்றி ஐயா!! நெகிழி பற்றிய விளக்கங்களை கொடுத்து புரிய வைத்தமைக்கு நன்றி ஐயா!!!

**பசுமைதாசனார்:** நன்றி மகனே!! பணி சிறக்கட்டும்!! வாழ்த்துக்கள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**2. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.**

- முன்னுரை
- மழைக்கால வருணனை
- முடிவுரை

**முன்னுரை:**

- **நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணையை** பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மழைக்கால வருணனை:**

- மலையை வலப்பக்கமாக சூழ்ந்து எழுந்த மேகமானது **உலகம் குளிருமாறு மழை பொழிந்தது**.
- தாழ்வான பகுதிகளில் பெருகிய **வெள்ளத்தை வெறுத்து நிரைகள் மேடான இடங்களுக்கு** சென்றன.
- **பழகிய இடத்தை விட்டு வேறு இடம் பெயர்ந்ததால்** வருத்தம் அடைந்தனர்.
- அவர்கள் தலையில் சூடியிருந்த **காந்தள் மலர்கள் கசங்கியது.**
- **விலங்குகள் குளிர் மிகுதியால்** மேய்ச்சலை மறந்தன.
- **குரங்குகள் நடுங்கின**.
- மரங்களில் தங்கி இருந்து **பறவைகள் நிலத்தில் விழுந்தன**.
- பசுக்கள் **பாலுண்ண வந்த கன்றுகளை** தவிர்த்தன.
- **மலையையே குளிரச் செய்வதாய்** இருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

**முடிவுரை:**

- **மழைக்காலத்தில் குளிர்கால நள்ளிரவு பற்றி** நெடுநல்வாடையில் நக்கீரர் வருணித்த நிகழ்வை பற்றி அறிந்து கொண்டோம்.

**3. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.**

**முதல் கல்**

**(உத்தம சோழன்)**

- முன்னுரை
- மருதனின் அச்சம்
- மருதனின் யோசனை
- மருதனின் வருத்தம்
- மருதனின் முயற்சி
- முடிவுரை

**முன்னுரை:**

- பயிர்களை வாழ வைப்பது **மழை.**
- அம்மழை **வெள்ளமாய் மாறுகையில்** பயிர்களையே இல்லாமல் ஆக்குகிறது.
- வெள்ளம் தேங்காமல் இருக்க வழி செய்யாதது **மனிதனின் குற்றம்.**
- பெரு வெள்ளத்தில் இருந்து பயிரையும் ஊரையும் தனிமனிதனால் காப்பற்ற முடியும் என்பதை சாதித்து காட்டிய **மருதனின் செயலை** இக்கதை விளக்குகிறது.

**மருதனின் அச்சம்:**

- வடகரையில் நின்று பார்த்த **மருதனுக்கு திக்கென்று இருந்தது**.
- கண்ணுக்கு எட்டிய தூரம் வரை **பச்சை பசேல் என்று இருந்த வயல்வெளி** எந்நேரத்திலும் **வெள்ளத்தில் மூழ்கும் நிலையில்** இருந்தது.
- ஒருநாள் மூழ்கினால் போதும் **அனைத்தும் அழுகிவிடுமே** என்று மருதன் அச்சப்பட்டான்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**மருதனின் யோசனை:**

- **காட்டமணக்கு செடிகளை அகற்றினால்** உபரிநீர் வெளியேறும் பயிர்களும், கிராமும் தப்பிக்கும் என்று நினைத்தான் மருதன்.
- **ஊரில் உள்ள அனைவரும் ஒன்றாக இணைந்து சுத்தம் செய்தால்** வாய்க்கால் சுத்தமாகி வெள்ளம் வடியும் என்று மருதன் கூறினான்.

**மருதனின் வருத்தம்:**

- மருதன் கூறிய யோசனையை **ஊரில் உள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.**
- **ஆயிரம் இரண்டாயிரம் செலவாகும்** என்று நினைத்து யாரும் இந்த யோசனைக்கு முன்வரவில்லை.
- இதனால் **மருதன் வருத்தமடைந்து வீடு திரும்பி** தன் மனைவியிடம் நடந்ததை கூறினான்.
- இந்த ஊர் இல்லையென்றால் வேறு ஊர். போய் வேலையை பார் என்று கத்தினாள் மனைவி.

**மருதனின் முயற்சி:**

- இரவு தூக்கத்தில் பயிர்கள் **'என்னை காப்பாத்து'** என்று கெஞ்சுவதை போல் இருந்தது.
- மறுநாள் காலை மருதன் **தனியாளாய் செடிகளை அறுத்து சுத்தம் செய்தான்.**
- அதை பார்த்து அவன் **மனைவியும் அவனுக்கு உதவினாள்.**
- வாய்க்காலில் மருதனையும் அவன் மனைவியையும் பார்த்த **ஊரார் ஒவ்வொருவராக வாய்க்காலில் இறங்கி சுத்தம் செய்தனர்.**
- மருதனின் **முதல் முயற்சி** மற்றவரின் **தொடர் முயற்சிக்கு** காரணமாய் அமைந்தது.

**முடிவுரை:**

- தனக்கென்று எதுவும் இல்லாத நிலையிலும் **பயிர்களையும் கிராமத்தையும் காப்பற்ற நினைத்த மருதனின் செயல்** பாரட்டுக்குரியது.
- இன்றைய **சமூக மேம்பாட்டிற்கு** அனைவரிடமும் இருக்க வேண்டிய **குணம் மருதனின் குணம்.**

**4. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புனர்:**

ஊர் பொதுமக்கள்,
பண்ணைக்காடு பிரிவு,
கொடைக்கானல்,
திண்டுக்கல்.

**பெறுநர்:**

மின்வாரிய பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகம்,
கொடைக்கானல்,
திண்டுக்கல்.

**மதிப்பிற்குரிய ஐயா,**

**பொருள்:** மின் இணைப்புக்களை சரிசெய்ய வேண்டுதல் சார்பாக.

வணக்கம். எங்கள் பகுதியில் சுமார் 500 குடியிருப்புகள் உள்ளன. சமீபத்தில் ஏற்பட்ட கஜா புயலால் நிறைய இடத்தில் மின் கம்பிகள் அறுந்து கிடக்கின்றன. எங்கள் ஊர் முழுவதும் இருளில் மூழ்கி கிடக்கிறது. இதனால் எங்கள் பகுதி மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றார்கள். எனவே தயவு செய்து மின் இணைப்புகளை சரிசெய்து கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**நன்றி**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

இப்படிக்கு
ஊர் பொதுமக்கள் சார்பாக
(அஅஅஅஅஅ)

**உறைமேல்முகவரி:**

**பெறுநர்:**
மின்வாரிய பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகம்,
கொடைக்கானல்,
திண்டுக்கல்.

**இலக்கணக்குறிப்பு:**

1. **வளைஇ** - சொல்லிசை அளபெடை
2. **பொய்யா** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
3. **புதுப்பெயல்** - பண்புத்தொகை
4. **கொடுங்கோல்** - பண்புத்தொகை

**உறுப்பிலக்கணம்:**

1. **கலங்கி** = **கலங்கு** + **இ**

**கலங்கு** – பகுதி, **இ** - வினையெச்ச விகுதி.

**புணர்ச்சி விதி:**

1. **இனநிரை** = **இனம்** + **நிரை**

**விதி:** மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்.

இன + நிரை - இனநிரை.

2. **புதுப்பெயல்** = **புதுமை** + **பெயல்**

**விதி:** ஈறுபோதல் = புது + பெயல்

**விதி:** இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும். புதுப்பெயல்

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. **தலை, தளை, தழை**

முருகன் **தழை**களைத் **தளை**த்துத் **தலை**யில் தூக்கி வந்தான்.

2. **கலை, களை, கழை**

**கழை**க்கூத்தாடி ஆடத் தொடங்கியதும் **கலை**நிகழ்ச்சி **களை**கட்டியது.

3. **அலை, அளை, அழை**

**அலை**கடல் ஓரம் கையை **அளை**ந்து கொண்டு நடந்தவனை அவன் நண்பன் **அழை**த்தான்.

4. **விலை, விளை, விழை**

முருகன் **விளை**ந்த நெல்லை நல்ல **விலை**க்கு விற்க **விழை**ந்தான்.

**இலக்கிய நயம் பாராட்டுக:**

**வெட்டி யடிக்குது மின்னல் - கடல்**
**வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது:**
**கொட்டி யிடிக்குது மேகம் - கூ**
**கூவென்று விண்ணைக் குடையுது காற்று**
**சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்**
**எட்டுத்திசையும் இடிய – மழை**
**எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!**
**- பாரதியார்**

## இலக்கிய நயம் பாராட்டுதல்

**மையக்கருத்து:**

- எட்டுத் திசையும் இடிந்து விழுவது போல் மழை வந்தது என இவ்வரிகளில் மழை பெய்யும் முறையை பாரதியார் விளக்கியுள்ளார்.

**மோனை நயம்:** "முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை"

| | | | |
|---|---|---|---|
| **வெ** | : | **வெ**ட்டி | - **வீ**ரத் |
| **எ** | : | **எ**ட்டு | - **எ**ங்ஙனம் |

**எதுகை நயம்:** "இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை"

| | | | |
|---|---|---|---|
| **ட்** | : | வெட்டி | - கொ**ட்**டி |
| **ட்** | : | சட்ட | - எட்டு |

**இயைபு நயம்:** "கடைசி எழுத்து ஒன்றி வருவது இயைபு"

இப்பாடலில் இயைபு நயம் இடம் பெறவில்லை.

**அணி நயம்:**

இப்பாடலை அணிநயத்துடன் கவிஞர் கண்ணதாசன் இயற்றியுள்ளார்.

**சந்த நயம்:**

இப்பாடலை சந்த நயத்துடன் பாடப்பட்டுள்ளது.

**கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக:**

**பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்:**

**நாள்: அக்டோபர் 2** **நேரம்: காலை 10 மணி**

**இடம்: கலைவாணர் அரங்கம், சென்னை.**

**நிகழ்ச்சி நிரல்**

**வரவேற்புரை :** திருமதி அரசி,
செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்

**முன்னிலை:** திரு அமுதன், இயற்கை வேளாண் உழவர்

**தலைமையுரை:** திரு. இமயவரமபன், பேரிடர் மேலாண்மை இயக்குநர்

**கருத்தரங்கத் தலைப்புகள்**

- **இயற்கைச் சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் - முனைவர் செங்குட்டுவன்**
- **பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் - திரு. முகிலன்**
- **நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் - திருமதி பாத்திமா**
- **பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும் - திரு. வின்செண்ட்**

**நன்றியுரை:** பர்வீன், பசுமைப்படை மாணவர் தலைவர்

**நாட்டுப்பண்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**அழைப்பிதழை பத்தியாக மாற்றுதல்:**

சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் கடந்த 2.10.2019 அன்று காலை 10 மணிக்கு பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்து பாடலுடன் தொடங்கப்பட்டு திருமதி.அரசி செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் அவர்கள் வரவேற்று பேசினார். இவ்விழாவிற்கு இயற்கை வேளாண் உழவர் திரு. அமுதன் முன்னிலை வகித்தார். பேரிடர் மேலாண்மை இயக்குநர் தலைமையுரை ஆற்றினார். முனைவர் செங்குட்டுவன் அவர்கள் இயற்கைச் சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் என்ற தலைப்பிலும், திரு. முகிலன் அவர்கள் பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் என்ற தலைப்பிலும், திருமதி பாத்திமா அவர்கள் நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் என்ற தலைப்பிலும், திரு. வின்சென்ட் அவர்கள் பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும் என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்கள். பசுமைப்படை மாணவர் தலைவர் பர்வீன் அவர்கள் நன்றியுரை நல்கினார். இறுதியில் நாட்டுப்பண் இசைக்க கருத்தரங்கம் இனிதே நிறைவு பெற்றது.

**புதிர்க்கேற்ற விடையை அறிக:**

**அ). அடைமழை பெய்த அடுத்த நாள்**
**படைபடையாய் வந்ததாம்**
**பரங்கி நாட்டு விமானம்**
**எதிரி சுடாமலேயே**
**இறகொடிந்து இறந்ததாம் - என்ன?** விடை: ஈசல்

**ஆ). தண்ணீரும் மழையும் இல்லாமல்**
**பயிர் பச்சையாய் இருக்கிறது**
**பாக்கு வெற்றிலை போடாமல்**
**வாய் சிவப்பாய் இருக்கிறது – என்ன?** விடை: கிளி

**கடிதம் எழுதுக:**

**மழை பெய்யும் போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு உங்கள் பள்ளி தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**கொடைக்கானல்**
**01.06.2023**

**அனுப்புநர்:**

தெ. சுதர்சன்
12-ம் வகுப்பு கலை பிரிவு
விவேகானந்த வித்யாலய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
பண்ணைக்காடு பிரிவு, கொடைக்கானல்.

**பெறுநர்:**

தலைமையாசிரியர் அவர்கள்,
விவேகானந்த வித்யாலய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
பண்ணைக்காடு பிரிவு, கொடைக்கானல்.

**மதிப்பிற்குரிய ஐயா,**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**பொருள்:** மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி விழிப்பணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு – தொடர்பாக.

**வணக்கம்.** அண்மையில் பெய்த மழை நம்மூரில் ஏற்படுத்திய சேதங்களை நீங்கள் அறிவீர்கள். இழந்த இழப்புகளை எண்ணி துடிக்கிறது எங்கள் மனம். இதற்கு காரணங்களை எண்ணிப் பார்த்தால் ஒன்று மட்டுமே, அது விழிப்புணர்வு இல்லாததே ஆகும். மழைக்காலங்களில் நாம் கடைபிடிக்கு வேண்டிய, கவனிக்க வேண்டிய, தவிர்க்க வேண்டிய செயல்கள் என்ன என்ற விழிப்புணர்வு நமக்கு தேவை. இந்த விழிப்பணர்வை பற்றி நம் பள்ளி மாணவர்களுக்கு தெரிவித்தல் அவசியம். எனவே விழிப்புணர்வை ஏற்ப்படுத்தும் நிகழ்ச்சி நம் பள்ளியில் நடைபெற ஏற்பாடுகள் செய்ய வேண்டுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நன்றி**

**இப்படிக்கு**
**தங்கள் கீழ்ப்படிந்துள்ள மாணவன்**
தெ. சுதர்ஷன்

**உறைமேல் முகவரி:**

**பெறுநர்:**

தலைமையாசிரியர் அவர்கள்,
விவேகானந்த வித்யாலய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
பண்ணைக்காடு பிரிவு – 624210,
கொடைக்கானல்.

## புடிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| Platform | நடைமேடை | Ticket Inspector | பயணச்சீட்டு அலுவலர் |
| Train task | இருப்புப் பாதை | Level Crossing | இருப்புப் பாதையை கடக்குமிடம் |
| Railway signal | தொடர்வண்டி வழிக்குறி | Metro Train | மாநகரத் தொடர்வண்டி |

## அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| **பத்துப்பாட்டு ஆராய்ச்சி** | மா. இராசமாணிக்கனார் |
| **இயற்கைக்கு திரும்பும் பாதை** | மசானா ∴புகோகா |
| **சுற்றுசூழல் கல்வி** | ப. ரவி |
| **கருப்பு மலர்கள்** | நா. காமராசன் |
| **வானம் வசப்படும்** | பிரபஞ்சன் |
| **பிறகொரு நாள் கோடை** | அய்யப்ப மாதவன் |
| **நெடுநல்வாடை** | நக்கீரர் |
| **முதல்கல்** | உத்தமசோழன் |

*************



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இயல் - 3
## சுற்றத்தார் கண்ணே உள

**இலக்கணத் தேர்ச்சிகொள்:**

**1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.**

அ). தேவையான இடங்களில் இடைவெளியில் விடாமல் எழுதுதல்

ஆ). தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

**இ). நிறுத்தக்குறியீடுகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்**

ஈ). வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

**2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ). பாலை பாடினான் | -- | 1). தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான் |
| ஆ). பாலைப் பாடினான் | - | 2). தேரினைப் பார்த்தான் |
| இ). தேரை பார்த்தான் | - | 3). பாலினைப் பாடினான் |
| ஈ). தேரைப் பார்த்தான் | - | 4). பாலைத் திணை பாடினான். |

அ). 4, 1, 3, 2 ஆ). 2, 3, 1, 4 **இ). 4, 3, 1, 2** ஈ). 2, 4, 1, 3

**3. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்து தொடரமைக்க.**

**மாணவர்களும் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.**

அறிவியல் கண்காட்சியை மாணவர்கள் வரிசையில் நின்று கண்டனர்.

**4. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

- **முன்** → அவன் முன்வந்து கூறினான் / அவன்முன் வந்து கூறினான்.
- **தானே** → அவன்தானே வந்து கொடுத்தான் / அவன் தானேவந்து கொடுத்தான்
- **கொண்டு** → எழுதிக்கொண்டு வந்தான் / எழுதிக் கொண்டு வந்தான்
- **விட்டான்** → பணத்தை சம்பாதித்துவிட்டான். / பணத்தை சம்பாதித்து விட்டான்.

**5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**

- அவன் அண்ணன் வீட்டுக்குச் சென்றான்
- அவன் அண்ணன், வீட்டுக்குச் சென்றான்.

**6.சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**

- இரட்டைக்கிளவித் தொடர்கள்: **சல சல, கல கல**
- இரட்டைக்கிளவித் தொடரைப் பிரித்து எழுதக்கூடாது. சேர்த்தே எழுத வேண்டும்.
- **எ.கா: சலசல, கலகல**

**7. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?**

- **திருவளர்செல்வன் என்பதே சரியான தொடர்**
- ஏனெனில் **வினைத்தொகையில்** வல்லினம் மிகாது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக:**

1. **சங்க இலக்கயத்தில் இல்லாத சொற்கள், சங்காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை..........**

அ). அறவோர், துறவோர் **ஆ). திருமணமும் குடும்பமும்**

இ). மன்றங்களும் அவைகளும் ஈ). நிதியமும் சுங்கமும்

2. **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க**

**அ). உரிமைத்தாகம் - 1. பாரசீகக் கவிஞர்**

**ஆ). அஞ்ஞாடி - 2. பூமணி**

**இ). ஜலாவுத்தின் ரூமி - 3. பகதவச்சல பாரதி**

**ஈ). தமிழர் குடும்ப முறை – 4. சாகித்திய அகாதெமி**

அ). 2, 4, 3, 1 ஆ). 3, 4, 1, 2 **இ). 2, 4, 1, 3** ஈ). 2, 3, 4, 1

3. **இவற்றை வாயிக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தின் ரூமி குறிப்பிடுவது**

அ). வக்கிரம் ஆ). அவமானம் இ). வஞ்சனை **ஈ). இவை அனைத்தும்**

4. **'உவா உறவ ந்து கூடும்**
**உடுபதி, இரவி ஒத்தார்' – யார்? யார்?**

அ). சடாயு, இராமன் ஆ). இராமன், குகன் **இ). இராமன், சுக்ரீவன்** ஈ). இராமன், சவரி

5. **'எங்கள் தந்தையார் நாடென்ற பேச்சினிலே – ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுவத்துவது**

அ). தனிக்குடும்பமுறை ஆ). விரிந்த குடும்ப முறை

இ). தாய்வழிச் சமூகமுறை **ஈ). தந்தைவழிச் சமூகமுறை**

**குறுவினா:**

1. **புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு எழுதுக?**
   - **தற்காலிகமாகத் தங்கும் இடம்** புக்கில்.
   - கணவனும் மனைவியும் **தனியாக வாழுமிடம் புக்கில்.**
2. **நிலையாமை குறித்து சவரி குரைக்கும் கருத்து யாது?**
   - ❖ அளவற்ற காலம் நான் மேற்க்கொண்டிருந்த **தவம் பலித்தது.**
   - ❖ என் **பொய்யான உலகப்பற்று** அழிந்தது.
   - ❖ என் **பிறவி ஒழிந்தது.**
3. **எதிர்பாரத நிகழ்வுகளை ஜலாலுத்தின் ரூமி எவ்வாறு உருவகப்டுத்துகிறார்?**
   - ஆனந்தம்
   - அற்பத்தனம்
   - மனச்சோர்வு
   - விழிப்புணர்வு
4. **துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது' என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?**

**அ). நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ). சிறு துரும்பும் பல்குத்த உதவும்**

அ). நிழலின் அருமை வெயிலில் தெரியும்

5. **சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?**
   - ❖ சங்க காலத்தில் கணச் சமூகத்திற்கு **தாயே தலைமை** தாங்கினாள்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ❖ குலத்தொடர்ச்சிக்கு **தாயே அச்சாரம் என்பதினால்**, பெண் குழந்தைகளின் பிறப்பு பெரிதும் விரும்பப்பட்டது.
- ❖ மேலும் **சொத்துரிமை வழங்கப்பட்டிருந்தது.**
- ❖ பெண்கள், திருமணத்திற்குபின்பும் தன் இல்லத்திலேயே தங்கி குடும்பத்தினை நடத்திடும் **தாயமுறை இருந்தது**.

## சிறுவினா:

**1. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக.**

- தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்று **பெற்றோருடன் வாழும் விரிந்த குடும்ப அமைப்பு முறை** உருவானது.
- **கணவன், மனைவி, மகன்** ஆகியோருடன் **தந்தையும் சேர்ந்து** வாழ்ந்த முறையை புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.
- விரிந்த குடும்பம் பற்றிய இக்கருத்தை **தொல்காப்பியமும்** விளக்குகிறது.
- தொன்மை மிக்க விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய **கூட்டுக்குடும்பம்**.

**2. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.**

இராமன் வீடணனிடம்,

- நாங்கள் **நால்வராக இருந்தோம்**. பின் **குகனோடு ஐவரானோம்.**
- பிறகு **சுக்கிரவனோடு** உறவு கொண்டு **அறுவர்களானோம்.**
- உள்ளத்தால் அன்பு கொண்டு என்னோடு சேர்ந்த **வீடணனாகிய உன்னோடு சேர்த்து எழுவரானோம்**

**3. வருபவர் எவராயினும் நன்றி செலுத்து - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:**

- ❖ **ஜலாலுத்தின் ரூமியின்** 'விருந்தினர் இல்லம்' கவிதையில் இடம் பெற்ற வரி இது.

**பொருள்:**

- ❖ உன் இல்லத்திற்கு வருபவர் எவராயினும் அவருக்கு **நன்றி செலுத்து.**

**விளக்கம்:**

- ❖ மனித இருப்பு **விருந்தினர் இல்லம்.**
- ❖ ஒவ்வொரு காலையும் **ஒரு புது வரவு**.
- ❖ எதிர்பாராத விருந்தாளிகளாக வந்த செல்லும் **ஆனந்தம், மனச்சோர்வு, விழிப்புணர்வு** ஆகியவற்றை வரவேற்று விருந்தோம்பு.
- ❖ ஒவ்வொரு விருந்தினரையும் **கௌரவமாக நடத்து.**
- ❖ **அவமானம், வஞ்சனை** ஆகியவற்றை வாயிலுக்கே சென்று வரவேற்பாயாக.
- ❖ ஒவ்வொருவரும் வழிகாட்டியாக அனுப்பப்படுவதால் **வருபவர் எவராயினும் நன்றி செலுத்து** என்கிறார் ரூமி.

**4. தாயும் தந்தையும் பணிக்கு செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?**

- குடும்பத்தின் பொருளாதார தேவைகளைச் சமாளிக்க **தாயும் தந்தையும் பணிக்கு செல்லும்** இன்றைய சூழலில் குடும்பப் பணிகளை அனைவரும் பகிர்ந்து கொள்வது அவசியமாகிறது.
- நானும், எனது வீட்டுப்பாடங்களை செய்வதோடு, **என் தம்பி –தங்கையர் வீட்டுப்பாடங்கள்** செய்வதற்கு உறுதுணையாக இருப்பேன்.



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- எனது **உடைகளை நானே துவைத்துச்** கொள்வேன்.
- நான் சாப்பிடப் பயன்படுத்தும் **தட்டு முதலான பொருட்களை நானே கழுவி சுத்தம்** செய்வேன்.
- **வீட்டை தூய்மையாக** வைத்திருப்பதில் அம்மாவுக்கு உதவி செய்வேன்.

**5. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.**

- ❖ **அகில் கட்டைகளையும், சந்தன கட்டைகளையும்** இராமன் கொண்டு வந்து வைத்தான்.
- ❖ **தருப்பை புற்களை** ஒழுங்குபட அடுக்கினான்.
- ❖ **பூக்களை** கொண்டு வந்து தூவினான்.
- ❖ **நன்னீரையும்** எடுத்து வந்தான்.
- ❖ தன் தந்தையாகிய **சடாயுவை தன் கைகளால் தூக்கி** கொண்டு வந்தான்.

## நெடுவினா:

**1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு விளக்குக.**

- ❖ **முன்னுரை**
- ❖ **குடும்பம்**
- ❖ **தாய் மற்றும் தந்தை வழிக் குடும்பம்**
- ❖ **தனிக் குடும்பம் - விரிந்த குடும்பம்**
- ❖ **முடிவுரை**

**முன்னுரை:**

- **குடும்பம்** என்ற சிறிய அமைப்பில் இருந்தே **மனித சமூகம்** என்னும் **பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது.**
- குடும்பமே மனித சமூகத்தின் **அடிப்படை அலகாக** உள்ளது.

**குடும்பம்:**

- குடும்பம் என்ற சொல் அமைப்பிற்கு **திருமணமே அடிப்படை.**
- குடும்பம் என்ற சொல் **திருக்குறளில் தான் வருகிறது.**
- **குடம்பை, குடும்பு, கடும்பு** ஆகியவை குடும்ப அமைப்போடு தொடர்புடையவை.
- குடும்பம் என்றால் **கூடிவாழுதல்** என்று பொருள்.

**தாய் மற்றும் தந்தைவழிக் குடும்பம்:**

- **பெண்** திருமணம் ஆன பின்னரும் **தன் இல்லத்திலேயே வாழும் முறை** இருந்துள்ளது.
- மனைவியின் இல்லத்துக்கு சென்று **கணவன் வாழ்ந்தான்.**
- ஆனால் **ஆண் சமுகத்தில் பெண் திருமணத்திற்கு** பிறகு **கணவன் வீட்டில் வாழ வேண்டும்.**

**தனிக்குடும்பம் - விரிந்த குடும்பம்:**

- **தாய், தந்தை, குழந்தை** மூவரும் உள்ள குடும்பம் நெருக்கமானது.
- இது **தனிக்குடும்ப முறை** ஆகும்.
- **இன்றைய சமூகத்தில்** அதிகமாக இக்குடும்பமுறை காணப்படுகிறது.
- **கணவன், மனைவி, மகன்** ஆகியோருடன் **தந்தையும் சேர்ந்து வாழும் முறை** விரிந்த குடும்பம் ஆகும்.
- இக்குடும்ப முறை பற்றிய கருத்தை **தொல்காப்பியம் விளக்குகிறது.**
- விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சி **கூட்டுக்குடும்பம்.**

**முடிவுரை:**

- **சங்க கால சமூகம், குடும்பம்** என்ற அமைப்பை அடிப்படையாக கொண்டதை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.
- இன்றைய சமூகமும், **கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம்** போன்றவற்றை கொண்டதாக உள்ளது.
- இம்முறை **தமிழ்ச்சமூகத்தின் அடையாளம்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**2. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.**

- ❖ முன்னுரை
- ❖ குகனுடன் உறவு
- ❖ சடாயுவின் உறவு
- ❖ சவரியிடம் உறவு
- ❖ சுக்ரிவனின் உறவு
- ❖ வீடணனிடம் உறவு
- ❖ முடிவுரை

**முன்னுரை:**

- **கம்பர்** தான் படைத்த காப்பியத்தின் தலைவனான **இராமனை பண்பின் பிறப்பிடமாக கருதுகிறார்.**
- **அன்பு கொண்டவனாய்** இராமன் விளங்குகிறான் என இக்கட்டுரை விளக்குகிறது.

**குகனுடன் உறவு:**

- காட்டிற்கு சென்ற இராமனுக்கு **கங்கை கரையை கடக்க உதவியவன் குகன்.**
- அந்த உதவியினால் இராமன் குகனை **தன் சகோதரனாய் ஏற்றான்.**

**சடாயுவின் உறவு:**

- சீதையை சிறையெடுத்துச் சென்ற **இராவணனுடன் சண்டையிட்டு காயம் அடைந்தார் சடாயு.**
- இராமனிடம் நடந்ததை கூறி **உயிர் துறந்தார் சடாயு.**
- தன் தந்தையின் நண்பரான **சடாயுவை தந்தையாக ஏற்று இறுதி சடங்கு** செய்தார் இராமன்.

**சவரியிடம் உறவு:**

- இராமனிடத்தில் அதிக **அன்பும் பக்தியும் கொண்டவள் சவரி.**
- சவரியின் உபசரிப்பு மூலம் சவரியின் **தவத்தை அறிந்து கொண்டான் இராமன்.**
- அவளிடம் இவ்வளவு காலம் **நலமாக இருந்தாய் அல்லவா** என்று கூறி நட்பு பாராட்டினான்.

**சுக்ரீவனின் உறவு:**

- கிஷ்கிந்தையில் **அனுமனால் அறிமுகம் செய்யப்பட்டவன் சுக்ரீவன்.**
- சுக்ரீவனிடம் **"உன்கிளை இனி என்கிளை", "என் சுற்றம் இனி உன் சுற்றம்"** என கூறி சகோதரனாக ஏற்றான்.

**வீடணனிடம் உறவு:**

- இராமனிடம் அடைக்கலம் தேடி வந்த **இராவணனின் தம்பி வீடணன்.**
- தன் உடன் பிறந்தவனாக எண்ணி **இலங்கையை அவனுக்கு சொந்தமாக்கினான்.**
- குகனோடு ஐவர் பின்னர் **சுக்ரிவனோடு அறுவர் ஆனோம்.**
- **உள்ளத்தில் அன்பு கொண்ட** உன்னோடு சேர்ந்து **எழுவரானோம்.**

**முடிவுரை:**

- இவ்வாறு **வேடர்கள், வானரங்கள், அரக்கர்கள்** என உயிரில் பேதம் பார்க்காமல் பழகியதால் இராமன் பண்பின் படிமமாக விளங்கினான்.

**3. உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் …… கதையை தொடர்ந்து எழுதி படிக்க.**

- ❖ முன்னுரை
- ❖ பாகப்பிரிவினை
- ❖ நம்பிக்கை கிரையம்
- ❖ முத்தையனின் கோபம்
- ❖ வெள்ளைச்சாமியின் கதறல்
- ❖ கண்ணீர்ப் பூக்கள்
- ❖ முடிவுரை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**முன்னுரை:**

- **பூ. மாணிக்கவாசகம்** அவர்களின் சிறந்த படைப்புகளில் ஒன்று **உரிமைத் தாகம்.**
- அக்கதையின் நாயகர்களான **முத்தையாவும் வெள்ளைச்சாமியும் இணையாமல் இருந்திருந்தால்** என்ன நடந்திருக்கும் என்பதை கற்பனை நயத்துடன் தொடர்வோம்.

**பாகப்பிரிவினை:**

- **முத்தையனும் வெள்ளைச்சாமியும்** சகோதரர்கள்.
- முத்தையன் மனைவி **மூக்கம்மாள்.**
- திருமணம் ஆனதும் மனைவியின் பேச்சை கேட்டு **சொத்தில் பங்கு கேட்டான் வெள்ளைச்சாமி**.
- தன் தம்பிதான் பேசினான் என நினைத்தாலும் அவன் பேசிய பேச்சு **நெஞ்சில் முள்ளாய் குத்தியது.**

**நம்பிக்கை கிரையம்:**

- வெள்ளைச்சாமி 2 வருடங்களுக்கு முன்னர் **பங்காருசாமியிடம் 200 ரூபாய் கடன்** வாங்கியிருந்தான்.
- கடனை திருப்பி கொடுக்க முடியாததால் **தன் நிலத்தை எழுதிக் கொடுத்தான் வெள்ளைச்சாமி.**

**முத்தையனின் கோபம்:**

- தன் தம்பி **நிலத்தை பங்காரு சாமிக்கு எழுதிக் கொடுத்தது** பற்றி மூக்கம்மாள் கூறியதை கேட்டு மனம் வருந்தினான்.
- வெள்ளைச்சாமி பேசிய பேச்சு **முத்தையனின் மனதில் ஆறாத வடுவாய் இருந்தது.**
- இதனால் **தன் தம்பிக்கு முத்தையன் உதவ முன் வரவில்லை.**

**வெள்ளைச்சாமியின் கதறல்:**

- வெள்ளைச்சாமி **பங்காருசாமியிடம் வாங்கிய கடனை எப்படியாவது அடைத்து விடுவதாக** கூறி கெஞ்சினான்.
- ஆனால் **பங்காருசாமி எதையும் காதில் வாங்கவில்லை.**
- **பூமித்தாயே**! **என் குடும்பத்தை காப்பற்றினாயே,** இன்று உன்னை **காப்பற்ற முடியவில்லையே! என்னை மன்னித்துவிடு!!** என கதறி அழுதான்.

**கண்ணீர்ப் பூக்கள்:**

- தன் சொந்த மண்ணைவிட்டு **ஏதிலியாய் சோகத்தை சுமந்து வெளியேறினான்** வெள்ளைச்சாமி.
- பரபரப்பான நகரின் மூலையில் **தினக்கூலி வாழ்க்கையை வாழ்ந்து வருகிறான்** வெள்ளைச்சாமி.

**முடிவுரை:**

- **பகையால் சகோதரர்கள்** ஒன்றினையாமல் போனார்கள்.
- அண்ணனின் **பேச்சை மதிக்காததால் நிலமும் கைவிட்டுப் போனது.**
- கடைசியில் வேறுவழியின்றி **ஊரைவிட்டு செல்லும் நிலை ஏற்ப்பட்டது.**

**************

**<u>இலக்கணகுறிப்பு:</u>**

1. **உளது** - இடைக்குறை
2. **மாதவம்** - உரிச்சொற்றொடர்
3. **தாழ்கடல்** - வினைத்தொகை
4. **செற்றவர்** - வினையாலணையும் பெயர்
5. **நுந்தை** - நும் தந்தை என்பதன் மரூஉ



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

## உறுப்பிலக்கணம்:

1. **தந்தனன் = தா (த) + த் (ந்) + த் + அன் + அன்**

**தா** – பகுதி; (**த** எனக் குறுகியது விகாரம்); **த்** - சந்தி; **த் ந்** - ஆனது விகாரம்;

**த்** - இறந்த கால இடைநிலை; **அன்** - சாரியை; **அன்** - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

2. **பொலிந்தான் = பொலி + த் (ந்) + த் + ஆன்**

**பொலி** – பகுதி; **த்** - சந்தி; **த் ந்** - ஆனது விகாரம்; **த்** - இறந்த கால இடைநிலை;

**ஆன்** - ஆண்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி:

1. **அருங்கானம் = அருமை + கானம்**

**விதி:** ஈறுபோதல் - அரு + கானம்.

**விதி:** இனமிகல் - அருங்கானம்.

## தமிழாக்கம் தருக:

**In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return. In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life. Educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.**

மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கான காரணிகளில் கல்வி தன்னிறைவு பெற்றது. ஆனால் முடிவற்றது. கல்வி மனிதனின் அடிப்படை உரிமை. கல்வி பொருளாதார, சமூக, அரசியல் முன்னேற்றங்களுக்கு ஆதாரமாக விளங்குகின்றது. இது வருமானத்தையும் வேலைவாய்ப்பையும் உருவாக்குகிறது. பொருளாதார வல்லுநர்கள் கல்வியின் முக்கியத்துவம் பற்றி ஆய்வு செய்யும் போது பெரும்பாலும் அது வாழ்வில் மிக நல்ல வாய்ப்புகளை உருவாக்கித் தருவதாக கூறுகின்றன. பொருளாதார வளர்ச்சியைக் கணக்கில் கொள்ளாமல் பார்த்தால் மக்களைக் கல்வி பெறச் செய்வது பயனுள்ள இலக்காகும்.

## இலக்கிய நயம் பாராட்டுக:

**பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி**
**பிறமொழி சிறப்பளித்த பிழையை நீக்க**
**உற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்**
**உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?**
**கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்**
**தெற்றெனநம் அமக்கண்ணைத் திறந்து விட்ட**
**தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.**

**- நாமக்கல் கவிஞர்**

## பா நயம் பாராட்டல்

**மையக்கருத்து:**

❖ கம்பனும் வள்ளுவனும் தலை சிறந்த கவிஞர்கள் என்ற உண்மையை நமக்கு உரைத்தவர் பாரதியார். அதனால் தமிழரின் அகக் கண்ணை திறந்து விட்ட பாரதி ஓர் ஆசான் என்று நாமக்கல் கவிஞர் கூறுகிறார்.

**மோனை நயம்:** **"முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை"**

| | | | |
|---|---|---|---|
| **பெ** | : | **பெ**ற்றெடுத்த | - **பி**றமொழிக்கு |
| **உ** | : | **உ**ற்றெடுத்தே | - **உ**லுங்க |

**எதுகை நயம்:** **"இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை"**

| | | | |
|---|---|---|---|
| **ற்** | : | பெ**ற்**றெடுத்த | - பி**ற**மொழிக்கு |
| **ற்** | : | உ**ற்**றெடுத்தே | - க**ற்**றுணர்ந்து |

**இயைபு நயம்:** **"கடைசி எழுத்து ஒன்றி வருவது இயைபு"**

இப்பாடலில் இயைபு நயம் இடம் பெறவில்லை.

**அணி நயம்:**

இப்பாடலை அணிநயத்துடன் நாமக்கல் கவிஞர் இயற்றியுள்ளார்.

**சந்த நயம்:**

இப்பாடல் சந்த நயத்துடன் பாடப்பட்டுள்ளது.

VVMS-PV www.Padasalai.Net

## வல்லின மெய்களை இட்டும் நிக்கியும் எழுதுக:

1. **என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.**

   என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய_ தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா**ப்** பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை**ப்** போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

2. **எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதியாவது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.**

   எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி**ச்** செல்வதனை**க்** கண்டு ஒன்றும் செய்வதியாவது நம்பிக்கையின்றி**த்** துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

3. **நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்துகிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.**

   நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை**ப்** பொறுத்துகிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்த_ கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை**த்** தேவையாகும்.

4. **மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்காளக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.**

   மாணவர்கள் பெற்றோர்களை**த்** தமது நண்பர்காளக**ப்** பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை**ப்** பெற்றோர்களுடன் பகிர்ந்து_ கொள்ள வேண்டும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.**

ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும்.

## பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக.

**1. குமரன் விடு பார்த்தேன்.**

குமரனை வீட்டில் பார்த்தேன்.

**2. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்**

மாறனின் பேச்சுத்திறனை யாரால் வெல்ல முடியும்.

**3. போட்டி வெற்றி பெற்றது காலைசெல்வி பாராட்டுகள் குவிந்தன.**

போட்டியில் வெற்றி பெற்றதால் கலைச்செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.

**4. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.**

காலையில் எழுந்த படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.

**5. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.**

அனைவரையும் அன்பால் அழைத்தவனுக்குத் துன்பத்தைத் தர யாருக்கு மனம் வரும்.

**6. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.**

சான்றோர்களுக்கு மதிப்பைக் கொடுத்து வாழ்ந்தால் உயரலாம்.

VVMS-PV www.Padasalai.Net

## படிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| **Lobby** | ஓய்வறை | **Mini Meals** | சிற்றுணவு |
| **Checkout** | வெளியேறுதல் | | |
| **Tips** | சிற்றீகை | | |

## அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| **கம்பர் யார்?** | வ.சுப. மாணிக்கம் |
| **சக்கரவர்த்தி திருமகன்** | இராஜாஜி |
| **வயிறுகள்** | பூமணி |
| **சிறை** | அனுராதா ரமணன் |
| **ஒரு புளிய மரத்தின் கதை** | சுந்தர ராமசாமி |
| **தமிழர் குடும்ப முறை** | பக்த்வசல பாரதி |
| **விருந்தினர் இல்லம்** | ஜலாலுத்தீன் ரூமி |
| **கம்பராமாயணம்** | கம்பர் |
| **உரிமைத்தாகம்** | பூமணி |
| **திருக்குறள்** | திருவள்ளுவர் |

*******



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

# திருக்குறள்

## கற்பவை கற்றபின்



**1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க:**

அ). அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆ). வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

**இ). சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்**

**2. கடலின் பெரியது**

அ). உற்ற காலத்தில் செய்த உதவி

**ஆ). பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

இ). திணையளவு செய்த உதவி

**3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லாக் கொன்றாகிய காரணம் - தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்**

**அ). இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.**

ஆ). நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

இ). ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று
சூழினும் தான்முந்து உறும்.

**4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளை எழுதுக:**

**உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகளை விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்
விரைகிறது மனம்
பரபரப்பும் மனவழுத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலைக் கட்டி கொள்கிறது குழந்தை
போ அந்தப் பக்கம்
உதறிச் செல்கிறேன் குழந்தையை.**

**விடை:**

செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அர்இடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்.

**5. இலக்கணக்குறிப்புத் தருக:**

1. **அன்பும் அறமும்** - எண்ணும்மை
2. **நன்கலம்** - பண்புத்தொகை
3. **மறத்தல்** - தொழிற்பெயர்
4. **உலகு** - இடவாகுபெயர்



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6. பொருள் கூறுக:**

1. **வெகுளி** – கோபம், சினம்
2. **புணை** – தெப்பம்
3. **ஏமம்** – பாதுகாப்பு
4. **திரு** – செல்வம்

**7. வையகமும் வானகமும் ஆற்றலரிது –எதற்கு?**

**அ). செய்யாமல் செய்த உதவி** ஆ). பயன் தூக்கார் செய்த உதவி

இ). திணைத்துணை நன்றி ஈ). காலத்தினால் செய்த நன்றி

**8. பகையும் உளவோ பிற, - பொருள் கூறுக.**

முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட நமக்கு வேறு பகை இல்லை.

**9. செல்லிடத்து – புணர்ச்சி விதி கூறுக?**

**செல்லிடத்து = செல் + இடத்து**

**விதி:** தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் செல் + ல் + இடத்து

**விதி:** உடல்மேல் உயிர்வந்த ஒன்றுவது இயல்பே – செல்லிடத்து.

**10. பொருத்துக:**

| | |
|---|---|
| **அ). வையதத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்** | **- 1). சேர்ந்தாரைக் கொல்லி** |
| **ஆ). பயன்தூக்கார் செய்த உதவி** | **- 2). ஞாலத்தின் மாணப் பெரிது** |
| **இ). சினம்** | **- 3). தெய்வத்துள் வைக்கப்படும்** |
| **ஈ). காலத்தினாற் செய்த நன்றி** | **- 4). நன்மை கடலின் பெரிது** |

அ). 4, 3, 2, 1 **ஆ). 3, 4, 1, 2** இ). 1, 2, 3, 4 ஈ). 2, 3, 4, 1

**குறுவினா:**

**1. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**

- அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவரை **"முயல்வாருள் எல்லாம் தலை"** என வள்ளுவர் சுட்டுகிறார்.

**2. ஞாலத்தின் பெரியது எது?**

- **துன்பத்தில் ஒருவர் செய்த உதவி** சிறியதாக இருந்தாலும், அது **செய்யப்பட்ட காலத்தை பார்க்கும் பொழுது** ஞாலத்தை விட பெரியதாகும்.

**3. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?**

- பிறர் செய்த **நன்மையை** மறத்தல் கூடாது.
- பிறர் செய்த **தீமையை** அப்பொழுதே மறத்தல் வேண்டும்.

**4. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?**

- பிறருடைய கைப்பொருளை விரும்பாமல் இருப்பதே செல்வம் குறையாமல் இருப்பதற்கான வழியென்று வள்ளுவர் உரைக்கிறார்.

**5. சினத்தை ஏன் காக்க வேண்டும்?**

- ஒருவன் தன்னை தானே காத்து கொள்ள விரும்பினால் சினம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- இல்லையென்றால் சினத்துடன் தானும் அழிய நேரிடும்.

**சிறுவினா:**

**1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**



www.Padasalai.Net



Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

- **அணிச்சுட்டல்:** இக்குறட்பாவில் **"நிரல் நிரை அணி"** பயின்று வந்துள்ளது.
- **அணி இலக்கணம்: சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி பொருள் கொள்வது** நிரல்நிரை அணி ஆகும்.
- **அணி விளக்கம்:** அன்பும் பயனும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால் **அதுவே பண்பும் பயனும் உடையதாக** ஆகும்.
  **பண்பு –பயன்** என்ற சொற்களை நிறுத்தி பொருள்கொள்வதால் இது நிரல்நிரை அணி ஆயிற்று.

**2. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.**

- இல்வாழ்க்கை **அன்பும் அறமும்** உடையதாக விளங்க வேண்டும்.
- அதுவே இல்வாழ்க்கையின் **பண்பும் பயனும்** ஆகும்.
- **அறத்தின் இயல்போடு** இல்வாழ்க்கை வாழ்பவரே **முயற்சி செய்து உயர்ந்தவர்களை காட்டிலும்** மேன்மையானவர்கள் ஆவார்.
- உலகின் நெறிமுறைகளை அறிந்து அறநெறியில் வாழ்பவர்கள் **கடவுளுக்கு நிகரானவர்கள்** ஆவார்.

**3. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது, - குறள் வழி விளக்குக.**

- **வானத்தை விட பெரியது:** நாம் ஒரு உதவியும் செய்யாத நிலையில் ஒருவர் நமக்கு செய்த உதவிக்கு இந்த **வையகம் மற்றும் வானகத்தை கொடுத்தாலும் ஈடாகாது.**
- **ஞாலத்தினை விட பெரியது:** ஆபத்துக் காலத்தில் ஒருவர் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அது செய்யப்பட்ட காலத்தை நோக்கும் பொழுது அது **ஞாலத்தை விட பெரியது.**
- **கடலினை விட பெரியது:** பயனை எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவி **கடலினை விட பெரியது** ஆகும்.

**4. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக? '**

- தீமையான விளைவுகள் யாவும் சினத்தினாலேயே ஏற்படும் என்பதினால் **"சினம் கொள்ளுதல்"** என்ற தீய பண்பை மறந்து விட வேண்டும்.
- **தம் முக மலர்ச்சியையும், அகமகிழ்ச்சியையும் அழித்திடும் சினத்தை** போன்ற பகைவன் நமக்கு வேறு யாரும் இல்லை.
- ஒருவன் தன்னை தானே காத்து கொள்ள விரும்பினால் சினம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் **சினத்துடன் தானும் அழிய நேரிடும்.**
- சினம் **தன்னை சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு.** ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்பையும் சுட்டெறிக்கும்.

**5. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.**

**சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையைச் சுடும்**

- **அணி விளக்கம்:** ஒரு பொருளை உருவகம் செய்து மற்றொரு பொருளை உருவகம் செய்யாமல் விடுவது.
- **சான்று:** சினமென்னும் சேர்ந்தரைக் கொல்லி இனமென்னும்
  ஏமப் புணையைச் சுடும்.
- **பொருத்தம்:** சினத்தை நெருப்பாகவும், இனத்தை தெப்பமாகவும் உருவகம் செய்தவர் உலக வாழ்க்கையை கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

## நெடுவினா:

**1. செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைக்கொண்டு நிறுவுக.**

- முன்னுரை
- செய்நன்றியறிதல்
- முடிவுரை

**முன்னுரை:**

- **"வள்ளுவனை பெற்றதால் பெற்றதே புகழ் வையகம்"** என்பார் பாரதிதாசன்.
- **'செய்நன்றியறிதல்'** என்னும் அதிகாரம் நன்றிக்கான இலக்கணத்தையும் நன்றி மறவா இயல்பையும் எடுத்துக் கூறுகிறது.

**செய்நன்றியறிதல்:**

> **செய்யமாற் செய்த உதவிக்கு வையகமும்**
> **வானகமும் ஆற்றல் அரிது**

- நாம் ஒரு உதவியும் செய்யாதிருக்கும் நிலையில் நமக்கு பிறர் செய்த உதவிக்கு இவ்வையகமும் வானகமும் ஒப்பாகாது.

> **காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
> **ஞலாதத்தின் மாணப் பெரிது.**

- ஆபத்து காலத்தில் ஒருவர் செய்த உதவி சிறிதெனினும் அதன் காலத்தை நோக்கும் பொழுது பெரியது ஆகும்.

> **பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
> **நன்மை கடலின் பெரிது.**

- பயனை எதிர்பாராமல் செய்த உதவி கடலினும் பெரியது.

> **திணைத்துனை நன்றி செயினும் பனைத்துணையாக்**
> **கொள்வார் பயன்தெரி வார்.**

- திணையளவு செய்த உதவியை அதன் பயன் தெரிந்தவர்கள் பணையளவு போற்றுவார்கள்.

> **நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
> **அன்றே மறப்பது நன்று**

- பிறர் செய்த நன்மையை மறத்தல் கூடாது. ஆனால் பிறர் செய்த தீமையை உடனே மறந்துவிட வேண்டும்.

> **எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
> **செய்நன்றி கொண்ட மகற்கு**

- எத்தகைய அறத்தினை அழித்தவனுக்கும் அப்பாவத்தை போக்க வழியுண்டு. ஆனால் செய்த நன்றியை மறந்தவனுக்கு வழியில்லை.

**முடிவுரை:**

- பிறர் செய்த நன்றியை மறவாது இருக்க வேண்டும் என்பதை இவ்வதிகாரம் விளக்குகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**2. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.**

- **முன்னுரை**
- **சினத்தை காப்பவர்**
- **சினத்தை மறத்தல்**
- **வேறுபகை இல்லை**
- **தன்னையே கொல்லும் சினம்**
- **உறவை அளிக்கும் நெறுப்பு**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- **திருவள்ளுவ மாலையில்** போற்றி பாடப்பட்ட நூல் திருக்குறள்.
- **இரண்டு அடிகளில் உலகையே அளந்த முப்பாலானது சினத்தை காத்தால் வாழ்வு மேம்படும்** என விளக்குகிறது.

**சினத்தை காப்பவர்:**

- தன் சினத்தை **மெலியவரிடத்தில் காட்டாமல்** காப்பவர் உண்மையில் சினம் காப்பவர் ஆவார்.

**சினத்தை மறத்தல்:**

- **தீமையான விளைவுகள்** அனைத்தும் சினத்தினாலேயே ஏற்ப்படுகிறது.
- சினம் கொள்ளுதல் என்ற **தீய பண்பை மறந்துவிட வேண்டும்.**

**வேறுபகை இல்லை:**

- **முக மலர்ச்சியையும், அக மலர்ச்சியையும்** கொள்கின்ற சினத்தை விட நமக்கு வேறு பகை இல்லை.

**தன்னையே கொல்லும் சினம்:**

- ஒருவர் **தன்னை காத்து கொள்ள விரும்பினால்** சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும்.

**உறவை அளிக்கும் நெருப்பு:**

- சினம் தன்னை சேர்ந்தவரையும் அழிக்கும் **நெருப்பு.**
- அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்பு **தெப்பத்தை அழிக்கும்.**

**முடிவுரை:**

- சினத்தால் பல கேடுகள் ஏற்ப்படுவதால் **சினம் வராமல் நம்மை காத்துக் கொள்ள வேண்டும்.**
- இல்லையேல் அது **நம்மை அழித்து விடும்.**

*******



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

# இயல் - 4
# செல்வத்துள் எல்லாம் தலை

## இலக்கணத் தேர்ச்சிகொள்:

**1. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம், பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்:**

அ). அன்பே.................................. (ஆர்வமாய் / **தகளியாய்)**

ஆ). வான்மழை ............................ **(தூறலில்** / பொழிந்திடின்)

இ). கண்ணிரண்டும் ........................ (இலாதார் / **இல்லார்)**

ஈ). வெண்ணிலவு ........................... **(காய்கிறது** / ஒளிர்கிறது)

உ). வெய்யோன் ........................... (காய்ந்திட / **ஒளிர்ந்திட)**

**2. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக:**

அ). கல்வி கரையில கற்பவர்

ஆ). கல்லாரே ஆயினும் கைப்பொருள்

இ). நல்லவை செய்யின் நலமே

ஈ). அவமதிப்பும் ஆன்ற மதிப்பும்

உ). உண்ணாது நோற்பார் பெரியார்

**3. பொருத்துக:**

அ. மாச்சீர் - 1). கருவிளம், கூவிளம்

ஆ). காய்ச்சீர் - 2). நாள், மலர்

இ). விளச்சீர் - 3). தேமாங்காய், புளிமாங்காய்

ஈ). ஓரசைச்சீர் - 4). தேமா, புளிமா

அ). 1, 2, 4, 3 **ஆ). 4, 3, 1, 2**

இ). 2, 3, 1, 4 ஈ). 3, 4, 2, 1

**4. கீழுள்ள சொற்களை ஈற்றுச் சீராகக் கொண்டு குறள் வெண்பா நேரிசை வெண்பா இன்னிசை வெண்பா எழுது முயற்சி செய்யவும். கடல், வாள், மழை, தேன், மரம்**

1. **கடல்:** கண்ணில் இனிக்கும் மகிழ்ச்சி உருவாய்
   மயக்கம் தருமே கடல்.
2. **வாள்:** பகையை ஒளிக்கும் படைவீரன் கையில்
   ஒளிருமே மின்னலாய் வாள்.
3. **மழை:** துன்பங்கள் போலத் தொடர்ந்து பெய்தாலும்
   என்றும் இனிமை மழை.
4. **தேன்:** எல்லாச் சிறப்பையும் ஈந்து உதவும்
   கல்விக்கு ஈடமோ தேன்.
5. **மரம்:** வெந்நிரைத் தந்தாலும் பன்னீராய் ஏற்று
   வளத்தில் சிறக்கும் மரம்.

**5. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?**

- இயற்சீர் வெண்டளை
- வெண்சீர் வெண்டளை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**6. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?**

- ❖ வெண்பாவின் அனைத்து அடிகளும் ஓரே எதுகையாய் வருவது **ஒரு விகற்பம்.**
- ❖ முதல் இரு அடி ஒரு எதுகையாகவும், அடுத்த இரு அடி ஒரு எதுகையாகவும் வருவது **பல விகற்பம்**.

## பயிற்சிப் பகுதி

**1. விண்ணின் மழைநிரை வீணாக்கா மல்தேக்கி**
<u>மண்ணில்</u> **சிறந்த மரம் நட்டுக் - கண்ணின்**
**மணிபோல் மொழிக்காத்து மாநிலத்து வாழ்வாய்**
**நினைவெல்லாம் ஈடேறி நீ** (மண்ணில்).

**2. முன்னாள் புரிவினைகள் முற்றும் தவறாமல்**
<u>பின்னாள்</u> **நமைவந்து பீடிக்கும் - அன்று**
**தினையிட்டால் இன்று தினைவிளையும் அன்றிப்**
<u>பனையிட்டால்</u> **வாய்க்கும் பனை.** (பின்னாள், பனையிட்டால்)

**3. உண்ணும்** <u>உணவை</u> **ஒருபோதும் கொட்டாதே**
<u>மண்ணில்</u> **பசியால் மடிபவர்கள் - விண்ணின்**
**கடவுளென உன்னைக்** <u>கருதுவர்</u> **அன்பாய்**
**இடுவதற்(கு) ஏதுவழி எண்.** (உணவை, மண்ணில், கருதுவர்)

**4. வேற்றுயிரால்** <u>தொல்லை</u> **விளையா திருப்பதற்(கு)**
**ஏற்றவண்ணம்** <u>காவல்</u> **இயற்றாமல்- ஆற்றலும்**
<u>பெண்பால்</u>, **இனவருந்தப் பேரிடர்செய் கின்றாயே**
**நண்பா!** <u>சரியோ</u> **நவில்?** (தொல்லை, காவல், பெண்பால், சரியோ)

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக:**

**1. "காவினெம் கலனே் சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் "கலன்" உணர்த்தும் பொருள்**
அ). போர்க்கருவி ஆ). தச்சுக்கருவி **<u>இ). இசைக்கருவி</u>** ஈ). வேளாண் கருவி

**2. சுரதா நடத்திய கவிதை இதழ்**
அ). இலக்கியம் **<u>ஆ). காவியம்</u>** இ). ஊர்வலம் ஈ). விண்மீன்

**3. வீண்வேறு விண்வெளியில் இயங்கு கின்ற**
**வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு - இத்தொடர் தரும் முழுமையான பொருள்**
அ). விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
ஆ). விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
இ). வெண்மதியும் முகிலும் வேறு வேறு
**<u>ஈ). விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு</u>**

**4. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.**
அ). வசம்பு ஆ). மணத்தக்காளியிலைச் சாறு
**<u>இ). கடுக்காய்</u>** ஈ). மாவிலைக்கரி

**5. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?**
அ). இலக்கியம் **<u>ஆ). கணிதம்</u>** இ). புவியியல் ஈ). வேளாண்மை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

## குறுவினா:

**1. இடையீடு – எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது.**

- இடையீடு என்ற கவிதை **எண்ணம், வெளியீடு, கேட்டல்** ஆகியவற்றைக் குறியீடாகக் குறிப்பிடப்படுகிறது.

**2. வசனம், கவிதை வேறுபாடு தருக?**

- **எதுகை மோனை** பார்க்காமல் எழுதும் வடிவம் **வசனம்.**
- **யாப்பு இலக்கண** சொற்களை சேர்ப்பது **கவிதை.**

**3. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் -யார்க்கு?**

- **கலைத்தொழில் வல்ல புலவர்களுக்கு** எத்திசையில் சென்றாலும் அத்திசையில் சோறு தட்டாது கிட்டும்.

**4. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?**

- நிகண்டு
- நன்னூல்
- காரிகை
- தண்டியலங்காரம்

## சிறுவினா:

**1. "மூன்றான காலம் போல் ஒன்று" – எவை? ஏன்? விளக்குக?**

- **எண்ணம், வெளியீடு, கேட்டல்** என்ற மூன்றும் 'மூன்றான காலம் போல் ஒன்றாகும்.
- **இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம்** என மூன்றும் வெவ்வேறு நிகழ்வுகளை குறிப்பதாக இருந்தாலும் காலம் என்ற சொல்லால் ஒன்றெனத் தோன்றுகிறது.
- அதுபோலவே **எண்ணம், வெளியீடு, கேட்டல்** என்ற மூன்றும் வெவ்வேறு பொருளை குறித்தாலும் அதன் விளைவு ஒன்றேயாகும்.
- இங்கு **எண்ணம் என்பது வேறு, வெளியீடு என்பது வேறு, கேட்டல் என்பது வேறு.** எப்பொழுதும் ஒன்றானவை அல்ல. ஒன்றென எண்ணும்போது காலத்தை போல் ஒன்றாகிறது.

**2. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?**

- நான் ஆசிரியரானால், எதையும் **பொறுமையுடன் எடுத்துச் சொல்லி புரிய வைப்பேன்.**
- மாணவர்களின் மீது உண்மையான **அன்பும் அக்கறையும் கொண்டவனாய் நடந்துகொள்வேன்.**
- **தேர்ச்சிக் குறைவு, தவறான பழக்கவழக்கம் கண்டால்** அக்கறையோடு கடிந்துகொள்வேன்.
- **பெற்றோரை அழைத்து பேசுகிறேன்** என்ற பார்வையில் மாணவரின் மதிப்பை இழக்கச் செய்யமாட்டேன்.

**3. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.**

- பழங்காலத்தில் **மணலில் எழுதிப் பழகினார்கள்.**
- ஆசிரியர்கள் **தரையில் எழுத அதன்மேல் மாணவர்கள்** எழுதிப்பழகுவார்கள்.
- எழுத்தாணி மூலம் **ஓலைச்சுவடியில் எழுதிப்பழகினார்கள்.**
- காலப்போக்கில் இவை அனைத்தும் **அழிந்து பட்டு போயின.**
- தற்பொழுது **காகிதத்தில் எழுதும் முறை** பயன்படுத்தப்படுகின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**4. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**

- **பாடாண் திணை விளக்கம்:** ஒருவனுடைய **புகழ், வலிமை, கொடை, அருள்** போன்ற நல்லியல்புகளை சிறப்பித்துக் கூறுவது **பாடாண் திணை** ஆகும்.
- **சான்று:** வாயிலோயே வாயிலோயே

வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தம் இப்பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்?

- **பொருத்தம்:** இப்பாடல் **அதியமானின் கொடைத்திறத்தைப்** புலப்படுத்தகிறது.

## நெடுவினா:

**1. கவிதை எழுத அறிய வேண்டுவனாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.**

- **முன்னுரை**
- **கவிதை எழுத அறிய வேண்டுவன**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- **கவிதை எழுதுவதற்கு** முன் அறிய வேண்டுவனவற்றை பற்றி **சுரதா** கூறுவனவற்றை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கவிதை எழுத அறிய வேண்டுவன:**

- சொற்களை அமைக்கும் பொழுது **எதுகை மோனை சேர்க்காமல்** அமைகின்ற வடிவம் **வசனம்.**
- **யாப்பு இலக்கண நெறிகளுக்கு** உட்பட்டு சொற்கள் அமைவது **கவிதையாகும்.**
- எழுத்துக்கள் தொடர்ந்து இருந்தால் **அசைகள் வரும்.**
- தளைகள் தொடர்ந்து நடந்து **அடிகள் அமையும்.**
- **தொடை நயங்கள் நன்கு** அமைத்திருந்தால் கவிதை வரும்.
- **தேமாவும் புளிமாவும்** நன்கு காணப்படும்.
- உரிய வடிவத்தில் எழுதாவிட்டால் **தளைகள் பொருந்தாது.**
- **செடியில் உள்ள பூமீது வண்டு வந்து அமர்வது போல** நல்ல புலவர்கள் பாடலில் புகழ் தங்கும்.
- **எளிய மக்களுக்கும் விளங்குகின்ற** வகையில் தமிழ்க் கவிதைகள் தர வேண்டும்.
- இவற்றையெல்லாம் அறிந்து கவிதை எழுதுவோர்க்குப் **புகழும் சிறப்பும் ஒருங்கே அமையும்.**

**முடிவுரை:**

- **அறமும் பொருளும் நிறைந்த கவிதைகளை இயற்றிவந்தால் புகழ்வந்து சேரும்** என்பதை அறிந்து கொண்டு கவிதைகள் இயற்றல் வேண்டும் என்று கவிஞர் சுரதா வலியுறுத்துகிறார்.

**2. பண்டைக்கால கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல், முறைகளைத் தொகுத்தெழுதுக.**

- **முன்னுரை**
- **கற்றல்**
- **கற்பித்தல்**
- **முடிவுரை**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**முன்னுரை:**

- **கல்வியின் நோக்கம், கற்பித்தல் முறைகளும்** மாறுபாடு அடைந்துள்ளது.
- கல்வி முறையில் நிகழ்ந்த **கற்றல் கற்பித்தல்களை** இக்கட்டுரையில் காண்போம்.

**கற்றல்:**

- மாணவனின் **ஐந்து வயது முதல்** கற்றல் தொடங்குகிறது.
- அதில் மாணவர்களின் மொழித்திறன் மற்றும் செயல்திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- **பிள்ளைகளை பள்ளியில் சேர்ப்பது** ஒரு விசேச நாளாக கொண்டாடப்படும்.
- பிள்ளைகள் முதலில் **மணலில் எழுதிப் பழகுவார்கள்.**
- **ஆசிரியர் தரையில் எழுத** அதன்மேல் பிள்ளைகள் எழுதிப் பழகுவார்கள்.

**கற்பித்தல்:**

- **ஆசிரியர்கள் மாணவர்கள்** இடையே நடைபெறும் ஒருவித கருத்து பரிமாற்றம்.
- **ஆசிரியர்க்கு மட்டுமே** அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- எதை யாருக்கு எப்பொழுது கற்பிக்க வேண்டும் என்பதை **ஆசிரியரே தீர்மானித்தார்கள்.**
- **வினா கேட்டல் மூலம் மாணவனின் திறனை** சோதித்து அறிந்து கொண்டார்கள்.

**முடிவுரை:**

- நாட்டின் முன்னேற்றம் **கல்வியுடன் நெருக்கிய தொடர்பு** உள்ளது.
- **பண்டைய கால கற்றல் கற்பித்தல்கள்** செயல்பாடுகள் அவற்றை தெளிவாக விளக்குகின்றன.

**3. சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?**

- **முன்னுரை**
- **சாலை விபத்தை தவிர்க்க நாம் கடைபிடிக்க வேண்டியவை**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- அதிக சாலை போக்குவரத்து வசதியை கொண்ட **இரண்டாவது பெரிய நாடு நம் நாடு.**
- ஏறக்குறைய **55 இலட்சம் கி.மீ சாலைகள்** உள்ளன.
- **21 கோடிக்கும் மேற்ப்பட்ட ஊர்திகள்** உள்ளன.
- தமிழ்நாடு தான் **இந்தியாவிலேயே சாலை விபத்து** அதிகமாக நடக்கும் மாநிலமாக உள்ளது.

**சாலை விபத்தை தவிர்க்க நாம் கடைபிடிக்க வேண்டியவை:**

- **18-வயது நிறைந்தவர்கள்** மட்டுமே ஓட்டுநர் உரிமம் பெற்று கவனத்துடன் இயக்க வேண்டும்.
- இருசக்கர வாகனத்தில் **இருவர் மட்டுமே** பயணிக்க வேண்டும்.
- இருசக்கர வாகனம் ஓட்டுபவர் **தலைக்கவசம் கட்டாயம்** அணிய வேண்டும்.
- **நான்கு சக்கர வாகன ஓட்டிகள்** இருக்கை பட்டையும் கட்டாயம் அணிய வேண்டும்.
- **தொலைபேசியை பேசிக்கொண்டு** வாகனம் ஓட்டக் கூடாது.
- **மது அருந்திவிட்டு வாகனம்** ஓட்டக்கூடாது.
- **தொடர்வண்டி பாதைகளை** கவனத்துடன் கடக்க வேண்டும்.
- **சாலையை கடப்பவர்களை** அச்சுறுத்தாமல் வாகனம் ஓட்ட வேண்டும்.
- எதிரில் வரும் மற்றும் கடந்து செல்லும் **வாகனங்களுக்கு வழிவிட வேண்டும்.**
- சாலை விதிகளை **சரியாக பின்பற்ற வேண்டும்.**
- சாலை பாதுகாப்பு **உயிரின் பாதுகாப்பு.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

❖ சாலை வாகனம் **ஓட்டுவது ஓட்டபந்தயம் அல்ல. பயணம் மட்டுமே.**

முடிவுரை:

❖ **சாலை பாதுகாப்பிற்கான விழிப்புணர்வை பெறுவதன் மூலம்** எதிர்காலத்தில் சாலை வீபத்துக்கள் இல்லா தமிழகத்தை உருவாக்க முடியும்.

**இலக்கணகுறிப்பு தருக:**

1. **வயங்குமொழி** - வினைத்தொகை
2. **அடையா** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
3. **அறிவும் புகழும்** - எண்ணும்மை
4. **சிறா அர்** - இசைநிறை அளபெடை

**புணர்ச்சி விதி:**

1. **எத்திசை = எ+ திசை**

**விதி:** இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும். .

**எ + த் + திசை = எத்திசை**

**தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:**

1. **நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.**

நம் மா**நி**லம் இந்த ஆண்டு வ**ற**ட்சியால் பாதிக்கப்பட்டுது.

2. **எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதக்கியது.**

எங்கள் ஊரில் நூலகக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.

3. **ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.**

**இ**ரங்கன் வெ**ண்**கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

4. **மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.**

**வா**னம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

5. **அப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.**

**ஐ**ப்பசி அடைமழையில் ஊரு**ணி** நிறைந்தது.

**பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக:**

**1. யானைக்கும் அடி சறுக்கும்:**

**பழமொழி விளக்கம்:**

- **பெருவலிமை பெற்றவரும்** சில நேரம் தோல்வி அடைவார்.
- தம் வலிமையின் மீது கொண்ட **நம்பிக்கையே தோல்வியைத் தரும்**.

**வாழ்க்கை நிகழ்வு:**

- நான் **6-ம் வகுப்பு** படிக்க தொடங்கியது முதலே பேச்சுப் போட்டிகளில் பேச தொடங்கிவிட்டேன். இப்பொழுது **12-ம் வகுப்பு** படித்து வருகிறேன்.
- எங்கு **பள்ளி, மாவட்ட, மாநில அளவில்** பேச்சுப்போட்டிகள் நடந்தாலும் அனைத்திலும் முதல் பரிசை வென்று என் பள்ளிக்கு பெருமை சேர்த்ததேன்.
- கடந்த ஜனவரி மாதம் எங்கள் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற நிறைவு விழாவில் **"ஒரு நாள் போதுமா"** என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டி நடந்தது.
- அதில் நானும் பங்கு பெற்று பேசினேன்.ஆனால் எனக்கே புரிந்து விட்டது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

- நான் சரியாக பேசவில்லை என்று, எனினும் எனக்கு பரிசு கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் பரிசு அறிவிப்பிற்க்காக காத்திருந்தேன். ஆனால் எனக்கு பரிசு கிடைக்கவில்லை.
- அப்பொழுது என் பள்ளி தலைமையாசிரியர் என்னை அழைத்து **"ஏன் இன்று நீ சரியாக பேசவில்லை.**
- தலைப்பை சரியாக புரிந்து கொள்ளவில்லையா என்று கூறி **யானைக்கும் அடி சறுக்கும்** என்பது இதுதான். கவலைப்படாதே! **தொடர்ந்து முயற்சி செய்! வெல்வாய்!**! என்றார்.

## 2. தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்:

**பழமொழி விளக்கம்:**

- நாம் **பிறருக்கு நன்மை செய்தால் நன்மையே கிடைக்கும்**. தீமை செய்தால் தீமையே கிடைக்கும்.
- ஆம் **ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர்வினை** உண்டு.

**வாழ்க்கை நிகழ்வு:**

- நான் 11-ம் வகுப்பு படிக்கும் பொழுது ராம் என்பவன் என் வகுப்பு தோழன். அவன் நன்றாகப் படிக்க கூடியவன்.
- ஆனால் **தன்னைவிட யாரும் அதிக மதிப்பெண் எடுத்துவிடக்கூடாது** என்று எண்ணுபவன்.
- ஆண்டுத் தேர்வு சமயத்தில் பள்ளியில் நடைபெற்ற **சிறப்பு வகுப்பில் அனைத்து மாணவர்களும் விறுவிறுப்பாக** படித்துக் கொண்டிருந்தனர்.
- அப்போது **பதினோராம் வகுப்பு மதிப்பெண்** எதற்கும் பயன்படுவதில்லை.
- அதனால் நாம் இப்படி விழுந்து விழுந்து **படிக்க வேண்டியதில்லை** என்று சக மாணவர்களிடம் சொல்லிக் கொண்டு **பள்ளயில் அவன் படிக்கவே இல்லை.**
- ஆனால் வீட்டிற்கு சென்று **இரவு முழுக்க கண்விழித்துப் படித்தான்.**
- ராமின் குணத்தை தெரிந்த நாங்கள் அவனிடம் **பேசுவதை தவிர்த்து படிப்பதில் கவனம்** செலுத்தினோம்.
- ஒவ்வொரு தேர்விலும் முருகன் **தூக்கமில்லாததால் சோர்வுடன்** காணப்பட்டான். மற்ற மாணவர்கள் அனைவரும் **சுறுசுறுப்புடனும் ஆர்வத்துடனும் தேர்வெழுதினர்.**
- தேர்வு முடிவும் வந்தது.
- எப்போதும் பள்ளியில் **முதல் மூன்று இடங்களில் வரும்** ராம் இந்த முறை **17-வது இடத்தையே** பிடிக்க முடிந்தது.
- அப்பொழுது ஒரு மாணவன் "**வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்" என்று ராமின் காதில் விழுமாறு கூறினான்.**

## 3. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை:

**பழமொழி விளக்கம்:**

- பிறருடைய **குற்றம் குறைகளையே** பார்த்துக் கொண்டிருந்தால் **நமக்கு உறவினர்களே** இருக்க மாட்டார்கள்.
- ஆம்! **நன்றல்லதை அன்றே மறப்பது நன்று.**

**வாழ்க்கை நிகழ்வு:**

- எங்கள் குடும்பம் **கூட்டுக்குடும்பம். அம்மா, அப்பா, தம்பி, சித்தப்பா அவர்கள் குழந்தைகள்** என அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தோம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

- ❖ நான் **பத்தாம் வகுப்பு படிக்**கும்பொழுது ஒரு **நிலத்தை விற்பது தொடர்பாக** என் **தந்தைக்கும் சித்தப்பாவிற்கும்** பிரச்சனை எற்ப்பட்டது.
- ❖ உடனே நிலத்தை இரண்டாகப் பிரித்து, **கூட்டுக்குடும்பம் தனிக்குடும்பம்** ஆனது.
- ❖ அன்று முதல் எங்கள் குடும்பத்தில் **சின்ன சின்ன சண்டைகள்** அவ்வப்போது வந்து செல்லும்.
- ❖ ஒருநாள் என் சித்தப்பா **சாலை விபத்தில் படுகாயம்** அடைந்தார்.
- ❖ அவருக்கு யாரேனும் **இரத்தம் குடுத்தால்** காப்பாற்றிவிடலாம் என்று **மருத்தவர்கள்** கூறினார்.
- ❖ இதை அறிந்த என் தந்தை உடனே **மருத்துவமனை சென்று இரத்தம் கொடுத்து** என் சிற்றப்பாவை காப்பற்றினார்.
- ❖ அன்று இரவு என் வீட்டிற்கு வந்த ஏன அத்தை **"நம்மிடம் எப்படியெல்லாம் பேசினான்"** அவனுக்கு ஏன் இரத்தம் கொடுத்தாய் என்று சண்டை போட்டார்.
- ❖ ஆனால் என் தந்தையோ **"குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை"** என்றார்.

## 4. எறும்பு ஊரக் கல்லும் தேயும்:

**பழமொழி விளக்கம்:**

- சிறிது சிறிதாக தொடர்ந்து **முயன்றால் பெரிய இலக்கையும் அடைய முடியும்.**
- ஆம் **முயன்றால் முடியாதது இல்லை.**

**வாழ்க்கை நிகழ்வு:**

- நான் படிக்கும் 12-ம் வகுப்பில் படிக்கும் மாணவன் **கவின்ராஜன்.**
- அவன் எப்பொழுதும் **ஆசிரியர் சொல் பேச்சு** கேட்கமாட்டான்.
- எந்த ஆசிரியருக்கும் அவனை பிடிக்காது. **"நீ எங்கே உருப்பட போகிறாய"** என்று சொல்லி அனைவரும் அவனை திட்டுவார்கள்.
- ஆனால் **வணிகவியல் ஆசிரியர்** மட்டும் அவன்மீது **அன்பு செலுத்தி அறிவுரை** வழங்குவார்.
- ஆனால் அவர் சொல்வதை **ஏற்காமல் அவரையும் கேலி** செய்வான் கவின்ராஜன்.
- இவ்வாறு **ஆறு மாதம்** கடந்தது.
- எல்லாத் தேர்வுகளிலும் **தோல்வி அடையும்** கவின்ராஜன் **அரையாண்டுத் தேர்வில்** அனைத்துப் பாடத்திலும் **தேர்ச்சி பெற்றுவிட்டான்.**
- அவன் நடவடிக்கையிலும் **மாற்றம் தெரிந்தது.** நான் அவனிடம் கேட்டேன்.
- வணிகவியல் ஆசிரியர் **என்னை மனிதனாக்கி விட்டார்.**
- இனிமேல் **அனைவரிடமும் அன்பாக நடந்து கொண்டு நன்றாக படிப்பேன்** என்று கூறியது ஆச்சரியமாக இருந்தது.
- **எறும்பு ஊரக் கல்லும் தேயும்"** என்பது கவினராஜனின் செயலில் உண்மையாயிற்று.

## 5. ஊழி பெயரினும் தாம் பெயரார்:

**பழமொழி விளக்கம்:**

- இந்த **உலகமே அழியும் நிலை ஏற்ப்பட்டாலும்,** சான்றோர் தாம் கொண்ட கொள்கையில் மாறமாட்டார்.
- ஆம் **கொள்கை உயிரினும் மேலானது.**

**வாழ்க்கை நிகழ்வு:**

- என் அம்மா அனைவரிடமும் **அன்பாக பழகுவார்.**
- அவர் **வருவாய் ஆய்வாளராக** பணியாற்றுகிறார்.
- அவர் தம் பணியை **நேர்மையாகவும் தூய்மையாகவும்** செய்ய விரும்புவார்.

- அதனால் தனக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்களிடம் **“யாரிடமும் கையூட்டுப் பெறக்கூடாது” நேர்மையாக இருக்க வேண்டும்** என்று அனைவரிடமும் வலியுறுத்துவர்.
- அவருடைய **நேர்மையும் தூய்மையும்** அவருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் **துன்பத்தையே தந்தது**.
- நான் 6-ம்வகுப்பு படித்தது முதல் இன்று வரை என் அம்மா **ஆறுமுறை இடமாறுதல் ஆகிவிட்டார்.**
- நான்கும் **நான்கு பள்ளிகள்** மாறிவிட்டேன்.
- ஒருநாள் என் அம்மாவிடம் அம்மா **நீயும் மற்றவரைப் போல் இருந்துவிட்டால்** நமக்கு இந்த துன்பங்கள் இல்லையே, என்று கேட்டேன்.
- அதற்கு அவர் **“நமக்கு ஏற்படும் துன்பங்களுக்காக கொண்ட கொள்கையிலிருந்து மாறுபடக்கூடாது**” என்று கூறினார்.
- **“ஊழி பெயரினும் தாம்பெயரார்”** என்ற பழமொழிக்கு இலக்கணமாக வாழும் என் அம்மாவை நினைத்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## சொல்லை பிரித்தும் சேர்த்தும் பொருள் கொள்க:

1. **பலகை** : **பலகை**யில் அமர்ந்தேன்
   **பல கைகள்** ஒன்றிணைந்தால் வெற்றி நிச்சயம்.
2. **தாமரை** : குளத்தில் **தாமரை**யை பார்த்தேன்.
   காட்டில் **தா மரை**யை பார்த்தேன்.
3. **கோவில்** : யாழினி **கோவிலுக்குச்** சென்றாள்
   **கோ வில்** சிறந்தவன் ராசராசன்.
4. **வெங்காயம் : சிறிய வெங்காயம் உடலுக்கு நல்லது.**
   போரில் சில வீரர்கள் மட்டும், **வெங் (ம்) காயம்** பட்டார்கள்.
5. **தலைமை** : **தலைமை** பொறுப்பில் உள்ளவர்கள் நேர்மையாக இருத்தல் வேண்டும்.
   **தலை**(க்கு)**மை** பூசி நரைமுடியை மறைப்பார்கள் சிலர்.

## படிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| **Arrival** | வருகை | **Passport** | கடவுச்சீட்டு |
| **Departure** | புறப்பாடு | **Visa** | நுழைவு இசைவு |
| **Conveyor Belt** | ஊர்திப்பட்டை | **Domestic Flight** | உள்நாட்டு வானூர்தி |
| **Take off** | வானூர்தி கிளம்புதல் | | |

## அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| **நீங்களும் கவிபாடலாம்** | கி.வா.ஜகந்நாதன் |
| **படைப்புக்கலை** | மு.சுதந்திரமுத்து |
| **துறைமுகம்** | சுரதா |
| **இதுவரை** | சி.மணி |
| **கவிஞராக** | அ.கி.பரமானந்தர் |
| **பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்** | உ.வே. சாமிநாதர் |



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| **இதில் வெற்றி பெற** | சுரதா |
| **இடையீடு** | சி.மணி |
| **புறநானூறு** | ஔவையார் |

## தெரிந்து தெளிவோம்

| | |
|---|---|
| **வித்தியாரம்பம்** | கல்வித் தொடக்கம் |
| **வித்தியாப்பியாசம்** | கல்விப் பயிற்சி |
| **உபாத்தியார்** | ஆசிரியர் |
| **அஷராப்பியம்** | எழுத்துப்பயிற்சி |
| **கீழ்வாயிலக்கம்** | பின்ன எண்ணின் கீழ்த்தொகை |
| **மேல்வாயிலக்கம்** | பின்ன எண்ணின் மேல்த்தொகை |
| **குழிமாற்று** | பெருக்கல் வாய்ப்பாடு |
| **சீதாள பத்திரம்** | தாழை மடல் |
| **நவத்வீபம்** | வங்காளத்தில் உள்ள ஓர் ஊர் |

*******

VVMS-PV www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

# இயல் - 5
# நாடென்ப நாட்டின் தலை

## இலக்கணத் தேர்ச்சிகொள்:

**1. படிமம் என்பதன் பொருள்**

அ). சொல் ஆ). செயல் **இ). காட்சி** ஈ). ஒலி

**2. காலை இளம் வெயில் நன்றாக மேய தும்புறுத்துத் துள்ளிவரும் புதுவெயில் இக்கவிதையில் பயின்று வந்தள்ளது.**

அ). பயன் படிமம் **ஆ). வினைப்படிமம்** இ). மெய்ப்படிமம் ஈ). உருப்படிமம்

**3. கூற்று: உவமை உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.**

**காரணம்: எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியெ கருத்தினை விளக்குவதிலலை**

**அ). கூற்று சரி, காரணம் தவறு** ஆ). கூற்று தவறு, காரணம் சரி

இ). கூற்றும் சரி, காரணமும் சரி ஈ). கூற்றும் தவறு, காரணமும் தவறு

**4. மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க**

அ). நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு

ஆ). கட்டில் நிணக்கும் இழிசினன் கையது...

**இ). பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்...**

ஈ). வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப...

**5. மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது – இதில் எவ்வகை படிமம் வெளிப்படுகிறது?**

வினைப்படிமம்

## நம்மை அளப்போம்

## பலவுள் தெரிக:

**1). சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம் -**

அ). நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ). மென்பொருள், வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு

இ). மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

**ஈ). அ, ஆ, இ - அனைத்தும்**

**2. கூற்று: இந்தியாவில் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.**

**காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.**

அ). கூற்று சரி, காரணம் தவறு ஆ). கூற்று தவறு, காரணம் சரி

இ). கூற்றும் தவறு, காரணமும் தவறு ' **ஈ). கூற்றும் சரி, காரணமும் சரி**

**3. பொருத்துக:**

**அ). திருவல்லிக்கேணி ஆறு - 1). மாவலிபுரச் செலவு**

**ஆ), பக்கிங்காம் கால்வாய் - 2). கல் கோடாரி**

**இ). பல்லாவரம் - 3). அருங்காட்சியகம்**

**ஈ). எழும்பூர் - 4). கூவம்**

அ). 1, 2, 4, 3 ஆ). 4, 2, 1, 3 **இ). 4, 1, 2, 3** ஈ). 2, 4, 3, 1

**4. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் - இத்தொடர் உணர்த்தும் பண்பு**

அ). நேர்மறைப் பண்பு ஆ). எதிர்மறைப் பண்பு **இ). முரண்பண்பு** ஈ). இவை அனைத்தும்



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**5. விளியிற ஞமலி - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?**

அ). எருது ஆ). குதிரை **இ). நாய்** ஈ). யாழி

**குறுவினா:**

**1. கலிவிழா, ஒலிவிழா – விளக்கம் தருக?**

- **கலிவிழா:** எழுச்சிமிக்க விழாக்கள் நிறைந்த ஊர் **திருமயிலை.**
- **ஒலிவிழா:** மயிலைக் கோவிலில் **பங்குனி உத்திரம்** ஆரவாரமாகக் கொண்டாடப்படும்.

**2. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித:து எழுதுக?**

- **காலின் மெக்கன்சி** அவர்களின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு **1869-ல் சென்னையில்** தொடங்கப்பட்டதே **கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்** ஆகும்.
- இலக்கணம் இலக்கியம் **வரலாறு, தத்துவம், அறிவியல், மற்றும் வானியல்** சார்ந்த அரிய ஓலைச்சுவடிகளும், தாள்சுவடிகளும் புத்தகங்களும் பெரிய பெரிய தொகுப்புகளாக காணப்படுகின்றன.

**3. தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே – தொடருக்குப் பதவுரை எழுதுக?**

- **தருமமிகு சென்னையில்:** அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையில்
- **கந்த கோட்டத்துள்வளர் தலம்:** வளர்தலமாகிய கந்த கோட்டத்து கோவிலில்
- **ஓங்கு கந்தவேளே:** எழுந்தருளிய கந்தவேளே.

**4. பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் - தொடரில் உள்ள முரண் நயத்தை குறிப்பிடுக?**

- **பெருங்கடல் பரபரப்பில் வாழும் சிறுகுடிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்** என்பது இத்தொடரின் பொருளாகும்.
- எதிர்ச்சொல்லாக அமைவது **முரண்.**
- இத்தொடரில் அமைந்துள்ள முரண் - **பெருங்கடல் x சிறுகுடி.**

**சிறுவினா:**

**1. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றை குறிப்பிடுக?**

- இந்திய-சாரசனிக் கட்டிட கலையில் கட்டப்பட்ட **மத்திய தொடர்வண்டி நிலையம், உயர்நீதிமன்றம், சென்னைப் பல்கலைகழகம், ரிப்பன் கட்டடம்** மற்றும் **விக்டோரியா அரங்கம்** போன்றவை சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக இன்றும் நிலைத்து இருக்கின்றன.
- மேலும் **தமிழ்நாடு ஆவணக் காப்பகம், எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம் கன்னிமாரா நூலகம்** போன்றவை சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக திகழ்கின்றன.

**2. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்.**

- அறம் செய்வார் நிறைந்துள்ள சென்னையில் **எழுந்தருளி உள்ள கந்தவேளே!**
- **பெருமை சான்ற உனது புகழையே** நான் பேச வேண்டும்.
- **பொய் பேசாமல்** இருக்க வேண்டும்.
- என்றும் **உன்னை மறவாதிருக்க** வேண்டும்.
- உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் **வஞ்சகர் தம் உறவு** என்னை பற்றாதிருக்க வேண்டும்.
- **ஆறுமுகங்களை கொண்ட தெய்வமே** இத்தகைய சிறப்பை நீ எனக்கு அருள்வாயாக.

**3. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?**

- இளம் பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் விழாக்களை உடைய ஊர் **திருமயிலை.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- அங்குள்ள **கபாலீச்சரம் கோவில் பங்குனி உத்திர திருவிழா** ஆரவாரமாக நடைபெறும்.
- கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு **ஆரவார விழாவாக பங்குனி உத்திரதிருவிழா** நடைபெறும்.
- **பூசை செய்தலும் நடக்கும்** என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார்.

**4. நெல்லின் நேரே வெண்கல் உப்பு - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.**

- பண்டைய கால மக்கள் தாங்கள் வாழும் **நிலத்தின் இயல்புக்கு** ஏற்றவாறு தொழிலை செய்துவந்தார்கள்.
- நெய்தல் நிலத்தில் **வாழுந்துவந்த பரதவர்கள், உப்பங்கழிகளில் வெண்கல உப்பினை விளைவித்து,** பின் அந்த உப்பினை வண்டிகளில் ஏற்றிச் சென்று ஊர் ஊராய் விற்பார்கள்.
- மருத நிலத்தில் விளைந்த நெல்லினைக் கொடுத்து, **தாங்கள் கொண்டுவரும் உப்பினை வாங்க வரீரோ** என்று மக்களை அழைத்தாள் உமணர் மகள்.
- இதன் மூலம் **உப்பை நெல்லுக்கு மாற்றாக கொடுத்தார்கள்** என்பதை அறிய முடிகிறது.

## நெடுவினா:

**1. ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக?**

- **முன்னுரை**
- **மதுரை நகரின் தொன்மை**
- **நகரின் அமைப்பு**
- **சங்ககால அமைப்பு**
- **பண்பாடும் பழக்க வழக்கங்களும்**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- வரலாற்று சிறப்புமிக்க நகரங்களுள் **முதன்மையானது மதுரை.**
- அம்மதுரை நான் **பார்த்து வளர்ந்த நகரங்களுள்** ஒன்று.
- அதன் சிறப்புகளை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மதுரை நகரின் தொன்மை:**

- **வைகை நதிக்கரையின்** அமைந்த சிறப்பான நகரம்.
- சங்கம் வைத்து தமிழ் வளர்த்த **பாண்டிய மன்னர்களின் தலைநகரம்.**
- தென்னிந்திய வரலாற்றில் குறிப்பிடதக்க இடம் **மதுரை மாநகருக்கும்** உண்டு.

**நகரின் அமைப்பு:**

- மதுரை நகரின் நடுநாயகமாக **மீனாட்சி அம்மன் கோவில்** அமைந்துள்ளது.
- நான்கு **புறமும் ஆடி வீதிகள்** உள்ளன.
- நான்கு பக்கமும் **ஆயுதக் கிடங்கும் கோட்டை அகழியும்** உள்ளன.
- சிறப்பான நகர அமைப்போடு **அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.**

**சங்ககால மதுரை:**

- தமிழ் இலக்கியங்களின் **பொற்காலம் மதுரை தமிழ்ச் சங்கத்திற்கு உரிய காலமே.**
- **பரிபாடல், மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், மணிமேகலை** போன்ற நூல்களின் பாடுபொருளாக மதுரை இருந்துள்ளது.

**பண்பாடும் பழக்க வழக்கங்களும்:**

- **பண்பாட்டு** சிறப்பு வாய்ந்த நகரம் - **மதுரை.**
- **நட்பு, விருந்து, உபசரிப்பு** என்னும் பராம்பரிய சிறப்புகளை பெற்றது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

- **தென்னிந்திய உணவு** வகைகளுக்கும் **மல்லிகைப் பூவுக்கும்** சிறப்பு வாய்ந்தது மதுரை.
- இந்நகரம் **தூங்கா நகரம்** என்னும் சிறப்பினை பெற்றது.

**முடிவுரை:**

- **மீனாட்சியம்மன் ஆலயம், வண்டியூர் மாரியம்மன் கோவில் தெப்பக்குளம், தமுக்க மைதானம், மாட்டுத்தாவணி** என வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் உள்ளன.
- எனவே **மதுரைக்கென்று தனியிடம் உண்டு.**

**2. கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.**

- **என்னுரை**
- **வேளாண்மை பொய்த்தது**
- **வேலையில்லா திண்டாட்டம்**
- **நகரமயமாதல்**
- **முடிவுரை**

**என்னுரை:**

- இயற்கை எழில் கொஞ்சும் **அமைதியான சூழலை** உடையவை கிராமங்கள்.
- கிராமங்கள் தங்கள் **பசுமையை கொஞ்சம் கொஞ்சமாக** இழந்து வருகின்றன.
- அதற்கான காரணங்களை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**வேளாண்மை பொய்த்தது:**

- கிராமங்களின் அடையாளம் **வேளாண்மை** ஆகும்.
- உற்பத்தியை அதிகரிக்க **செயற்கை உரங்களை கிட்டோம்.**
- அதனால் **மண் தன் தன்மையை இழந்தது.**
- **பொருட்கள் உற்பத்தி** குறைந்தது.

**வேலையில்லா திண்டாட்டம்:**

- கிராமங்களில் **முதன்மை தொழில் வேளாண்மை.**
- வேளாண்மை இல்லாததால் **பலரும் வேலையில்லா நிலைக்கு தள்ளப்பட்டனர்.**
- வேலை தேடி கிராமங்களை விட்டு **நகரங்களை நோக்கி செல்லும் சூழல்** ஏற்ப்பட்டுள்ளது.

**நகரமயமாதல்:**

- விளை நிலங்கள் யாவும் **வீட்டு மனைகள்** ஆகி வருகின்றன.
- கிராமங்கள் **நகரங்களாக மாறி** வருகின்றன.

**முடிவுரை:**

- கிராமங்கள் வெறும் **வாழ்விடங்கள் அல்ல.**
- நம் பண்பாட்டின் அடையாளம்.
- ***"இந்தியாவில் வளர்ச்சி பல லட்ச கிராமங்களின் வளர்ச்சி".***

**- காந்தியடிகள்.**

**3. சென்னையில் உள்ள மயிலாப்பூர் கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?**

- **முன்னுரை**
- **மயிலாப்பூர் கபாலீச்சரம்**
- **கந்த கோட்டம்**
- **முடிவுரை**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**முன்னுரை:**

- **"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"** என்பது முதுமொழி.
- பண்டைய வரலாற்றின் **முழு அடையாளமாக கோவில்கள்** உள்ளன.
- அதைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மயிலாப்பூர் கபாலீச்சரம்:**

- விழாக்கள் நிறைந்த ஊர் **திருமயிலை.**
- **திருமயிலை** என்று அழைக்கப்படும் ஊர் **மயிலாப்பூர்** ஆகும்.
- சென்னை மாநகரின் ஒரு பகுதி மயிலாப்பூர்.
- **இளம் பெண்கள் ஆரவாரத்தோடு** கொண்டாடும் விழாக்களை உடைய ஊர் திருமயிலை.
- அங்குள்ள **கபாலீச்சரம் கோவில் பங்குனி உத்திர திருவிழா** ஆரவாரமாக நடைபெறும்.

**கந்த கோட்டம்:**

- **அறம் செய்வார் நிறைந்துள்ள** சென்னையில் எழுந்தருளி உள்ள கந்தவேளே!
- **பெருமை சான்ற உனது புகழையே** நான் பேச வேண்டும்.
- **பொய் பேசாமல்** இருக்க வேண்டும்.
- **மதமான பேய்** என்னை அணுகாதிருக்க வேண்டும்.
- என்றும் **உன்னை மறவாதிருக்க** வேண்டும்.
- **ஆறுமுகங்களை கொண்ட தெய்வமே** இத்தகைய சிறப்பை நீ எனக்கு அருள்வாயாக.

**முடிவுரை:**

- **சென்னையின் மயிலாப்பூரும், கந்தகோட்டமும் இறைவனின் அருளும் நல்அறமும் நிறைந்த ஊர்கள்** என்பதை இதிலிருந்து அறிய முடிகிறது.

**************

VVMS-PV www.Padasalai.Net

**இலக்கணகுறிப்பு:**

| | | |
|---|---|---|
| 1. | **மலரடி** | - உவமைத்தொகை |
| 2. | **வளர்தலம்** | - வினைத்தொகை |
| 3. | **மாமயிலை** | - உரிச்சொற்சொடர் |
| 4. | **பெருங்கடல்** | - பண்புத்தொகை |
| 5. | **உழாஅது** | - செய்யுளிசை அளபெடை |
| 6. | **வெரீஇய** | – சொல்லிசை அளபெடை |

**உறுப்பிலக்கணம்:**

1. **நினைக்கின்ற = நினை + க் + கின்று + அ**

 **நினை** – பகுதி; **க்** - சந்தி; **கின்று** – நிகழ் கால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி

2. **வைத்து = வை + த் + த் + உ**

 **வை** – பகுதி; **த்** - சந்தி; **த்** - இறந்த கால இடைநிலை; **உ** – வினையெச்ச விகுதி.

3. **பேசுவார் = பேசு + வ் + ஆர்**

 **பேசு** – பகுதி; **வ்** - எதிர் கால இடைநிலை; **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

4. **கண்டான் = காண் (கண்) + ட் + ஆன்**

 **காண்** – பகுதி (கண் - எனக் குறுகியது விகாரம்); **ட்** - இறந்த கால இடைநிலை; **ஆன்** – ஆண்பால் வினைமுற்று விகுதி.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

5. **அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்**

**அமர்** – பகுதி; **த்** - சந்தி; (**ந்** - ஆனது விகாரம்)

**த்** - இறந்த கால இடைநிலை; **ஆன்** – ஆண்பால் வினைமுற்று விகுதி.

6. **செய்த = செய் + த் + அ**

**செய்** – பகுதி; **த்** - இறந்த கால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி

7. **சாற்றி = சாற்று + இ**

**சாற்று** – பகுதி; **இ** – வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி:**

1. **உள்ளொன்று = உள் + ஒன்று**

**விதி:** தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் - உள்ள் + ஒன்று.

**விதி:** உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – **உள்ளொன்று.**

2. **ஒருமையுடன் = ஒருமை + உடன்**

**விதி:** 'இ ஈ ஐ வழி யவ்வும்' - ஒருமை + ய் + உடன்.

**விதி:** உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – **ஒருமையுடன்.**

3. **பூம்பாவாய் = பூ + பாவாய்**

**விதி:** 'பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்' – **பூம்பாவாய்.**

4. **பெருங்கடல் = பெருமை + கடல்**

**விதி:** ஈறுபோதல் - பெரு + கடல்.

**விதி:** இனமிகல் – **பெருங்கடல்.**

**இலக்கியநயம் பாராட்டுக:**

**பிறப்பினால் எவர்க்கும் - உலகில்**
**பெருமை வாராதப்பா!**
**சிறப்பு வேண்டுமெனில் - நல்ல**
**செய்கை வேண்டுமப்பா!**
**நன்மை செய்பவரே – உலகம்**
**நாடும் மேற்குலத்தார்!**
**தின்மை செய்பவரே – அண்டித்**
**தீண்ட ஒண்ணாதார்!**

**- கவிமணி தேசிக விநாயகம்**

**பா நயம் பாராட்டல்**

**மையக்கருத்து:**

❖ பிறப்பின் காரணமாக யாருக்கும் பெருமை உண்டாவது இல்லை. சிறப்பான செயல்களை செய்தால் மட்டுமே மதிக்கப்படுவார் என்று நாமக்கல் கவிஞர் கூறுகிறார்.

**மோனை நயம்:** **"முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை"**

| | | | |
|---|---|---|---|
| **பி** | : | **பி**றப்பினால் | - **பெ**ருமை |
| **ந** | : | **ந**ன்மை | - **நா**டும் |



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எதுகை நயம்:** **"இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை"**

**ற** : பி**ற**ப்பினால் - சி**ற**ப்பு

**ன்** : ந**ன்**மை - தி**ன்**மை

**இயைபு நயம்:** **"கடைசி எழுத்து ஒன்றி வருவது இயைபு"**

**பா** : வேண்டுமப்**பா** – வாராதப்**பா**

**அணி நயம்:**

இப்பாடலை அணிநயத்துடன் நாமக்கல் கவிஞர் இயற்றியுள்ளார்.

**சந்த நயம்:**

இப்பாடல் சந்த நயத்துடன் பாடப்பட்டுள்ளது.

**பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

**1. இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ.**

இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.

**2. நிலத்தை கௌறணும்டா அப்பத்தான் வகுறு நிறையும்.**

நிலத்தைக் கிளர வேண்டுமடா! அப்போதுதான் வயிறு நிறையும்.

**3. அண்ணைக்கு அவனுக்கு பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.**

அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதயிருக்க வேண்டியது தானே.

**4. வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.**

வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கே இழுத்துச் சென்றார்.

**5. புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.**

குழந்தை உடல்நலக் குறைவால் மூன்று நாட்களாக சிரமப்படுகிறது.

**6. ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.**

இரவில் சித்தப்பாவைக் காவல் காக்கச் செல்லுமாறு சொல்.

**கீழ்க்காணும் பத்தியை படித்து பார்த்து பிறமொழிச் சொற்களை கண்டறிந்து தமிழ்ப்படுத்துக:**

**சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்குப் போதுமா? அதற்குள் நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் மாயை உள்ளுர நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்த பிரபஞ்சத்தை ஆட்டிவைக்கும் சக்தியின் ஒரு அம்சம் என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால் அவரது ஆத்ம விசாரத்தைச் சோதனை போட:டுக் பார்க்க இதுவரை தெய்வத்துக்கோ மனுஷனுக்கோ அவகாசம் கிடைத்ததில்லை. மனுஷ வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை ஸபுடம் போட்டுப் பார்ப்பது போல தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டிருந்தது.**

| பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| **சர்க்கார்** | அரசாங்கம் | **ஆத்ம விசாரத்தை** | உயிர் பற்றிய கவலை |
| **சம்பளம்** | ஊதியம் | **மனுஷனுக்கோ** | மனிதனுக்கோ |
| **ஜீவனத்துக்கு** | வாழ்க்கைக்கு | **மனுஷ வர்க்கம்** | மனித இனம் |
| **ஜீவனம்** | வாழ்வு | **ஸ்புடம் போட்டு** | நெருப்பில் இட்டு |
| **பிரபஞ்சம்** | பெருவெளி | **அம்சம்** | தன்மை |
| **மாயை** | இருப்பதுபோல் தோன்றுவது | **ஆத்மா** | உயிர் |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

## ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.

1. பூட்டிய வீட்டிலும் பூத்துச் சிரிக்கிறது முல்லை.
2. விழும் மரங்கள் அழியும் காடு பசுமை வனக் குடியிருப்பு.
3. அப்படியென்ன சொல்லியது காற்று குதித்தாடுகிறது மேகம் மலை முகடுகளில்.
4. பூத்த மலரொன்று பறக்கிறது வண்ணத்துப்பூச்சி.
5. வானம் அழுகிறது பூமி சிரிக்கிறது கவிதைகளில்

## கருத்துப்படத்தை புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.




| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |
| | | |

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

- சங்க இலக்கியங்கள் இரு வகைப்படும். அவை எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு என்பனவாகும்.
- எட்டுத்தொகை நூலில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநுறூறு, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்தும் அகப்பொருள் சார்ந்த நூல்கள் ஆகும்.
- புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டு நூல்களும் புறப்பொருள் பற்றியனவாகும்.
- பரிபாடல் என்ற நூல் மட்டும் அகம், புறம் இரண்டும் சார்ந்த நூலாகும்.
- பத்துப்பாட்டு நூல்களுள் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை என்ற நான்கு நூல்களும் அகப்பொருள் பற்றியனவாகும்.
- மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய ஆறு நூல்களுள் புறப்பொருள் பற்றியனவாகும்.

## படிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| **Affidavit** | ஆணையுறுதி ஆவணம் | **Jurisdiction** | அதிகார எல்லை |
| **Allegation** | சாட்டுரை | **Plaintiff** | வாதி |
| **Conviction** | தண்டனை | | |

## அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| **தெய்வமணிமாலை** | இராமலிங்க அடிகளார் |
| **தேவாரம்** | திருஞான சம்பந்தர் |
| **அகநானூறு** | அம்மூவனார் |
| **தலைக்குளம்** | தோப்பில் முகமது மீரான் |
| **திருக்குறள்** | திருவள்ளுவர் |
| **ஒரு குட்டி தீவின் வரைபடம்** | தோப்பில் முகமது மீரான் |
| **ஒரு பார்வையில் சென்னை நகரம்** | அசோகமித்ரன் |
| **சென்னைப் பட்டணம்** | ராமச்சந்திர வைத்தியநாத் |
| **இராமலிங்க அடிகள் வரலாறு** | ஊரன் அடிகள் |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

# இயல் - 6
## சிறுகை அளாவிய கூழ்

**இலக்கணத் தேர்ச்சிக்கொள்:**

1. **ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத்தம் உரையில் குறிப்பிட்டவர்**

அ). சிவஞான முனிவர் **ஆ). மயிலைநாதர்**

இ). ஆறுமுகநாவலர் ஈ). இளம்பூரணர்

2. **கூற்று 1: காப்பியம் என்னும் சொல் காப்பு இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமால் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.**

**கூற்று 2: ஐப்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி.**

**அ). கூற்று 1 சரி, கூற்று 2 தவறு** ஆ). கூற்று 2 சரி, கூற்று 1 தவறு

இ). இரண்டும் சரி ஈ). இரண்டும் தவறு

3. **சரியானவற்றைப் பொருத்தித் தேர்க:**

**அ). காதை - 1). கந்தபுராணம்**

**ஆ). சருக்கம் - 2). சீவகசிந்தாமணி**

**இ). இலம்பகம் - 3). சூளாமணி**

**ஈ). படலம் - 4). சிலப்பதிகாரம்**

**அ). 4, 3, 2, 1** ஆ). 3, 4, 1, 2 இ). 3, 4. 2. 1 ஈ). 4, 3, 1, 2

4. **தவறான இணையைத் தேர்க:**

| பாவகை | இலக்கியம் |
|---|---|
| அ). விருத்தப்பா - | நாலடியார் |
| ஆ). ஆசிரியப்பா - | அகநானூறு |
| இ). கலிவெண்பா - | தூது |
| ஈ). குறள் வெண்பா - | திருக்குறள் |

**விடை:** அ). விருத்தப்பா - நாலடியார்

**குறுவினா:**

5. **காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

காப்பியம் இரண்டு வகைப்படும்.

- பெருங்காப்பியம்
- சிறுகாப்பியம்

6. **காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?**

- அகலக்கவி
- சரிதம்
- மாக்கதை
- மகாகாவியம்
- புராணம்
- கதைச்செய்யுள்

7. **காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக?**

- காதை
- இலம்பகம்
- சருக்கம்
- படலம்

8. **பாவிகம் - விளக்குக?**

- பாவிகம் என்பதே **காப்பியப் பண்பே – தண்டி.**
- காப்பியத்தில் **கவிஞன் குறிப்பிட விரும்பும் அடிப்படைக் கருத்தே** "பாவிகம்" எனலாம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக:**

**1). ஆர்ப்பரிக்கும் கடல்**

**அதன் அடித்தளம் மௌனம்; மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது**

அ). இரைச்சல் ஆ). குறைகுடம் கூத்தாடும்

இ). நிறைகுடம் நிர்த்தழும்பல் இல் **ஈ). புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது**

**2. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ….. தொடர்களில் வெளிப்படும் செய்திகள்**

**1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்**

**2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்**

அ). 1 சரி 2 தவறு ஆ). 1 தவறு 2 சரி இ). 1 தவறு 2 தவறு **ஈ). 1 சரி 2 சரி**

**3. பொருத்துக:**

**அ). ஆமந்திரிகை - 1). பட்டத்து யானை**

**ஆ). அரசு உவா - 2). மூங்கில்**

**இ). கழஞ்சு - 3). இடக்கை வாத்தியம்**

**ஈ). குழை - 4). எடை அளவு**

**அ). 3, 1, 4, 2** ஆ). 4, 2, 1, 3 இ). 1, 2, 3, 4 ஈ). 4, 3, 2, 1

**4. வேறுபட்டதைக் குறிப்பிடுக :**

அ). அண்மைக் காட்சித் துணிப்பு ஆ). சேய்மைக் காட்சித் துணிப்பு

இ). நடுக் காட்சித் துணிப்பு **ஈ). காட்சி மறைவு**

**குறுவினா:**

**1. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

- நகை
- வெகுளி
- அழுகை
- உவகை
- அச்சம்
- இளிவரல்
- பெருமிதம்
- மருட்கை

**2. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும், சான்று தருக?**

- ஒரு கதா பாத்திரத்தின் **கவலை, அலைகழிப்பு, மகிழ்ச்சி** போன்றவற்றை வெளிக்கொணரும் எதிரொலிப் பிண்ணணி இசை.
- **எ.கா:** கதாநாயகி சன்னல் வழியாக **ஒரு காட்சியை வெறித்துப் பார்க்கிறாள்.**
- அவள் **தெருவை பார்ப்பதை** மட்டுமே காட்டப்படுகிறது.
- இதில் **அவளை பார்க்க வந்தவர் அவள் விருப்பத்திற்கு மாறாக அங்கிருந்து செல்கிறார்** என்ற கதை அப்பெண்ணின் முகபாவனை மூலம் சொல்லப்படுகிறது.

**3. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக?**

- **ஒருமுக எழினி:** மேடையின் **ஒருபுறத்தில் தொடங்கி மறுபுறம் செல்ல** அமைக்கப்படும் **திரைச்சீலை.**
- **பொருமுக எழினி: மேடையின் நடுவில்** அமைக்கப்படும் திரைச்சீலை.

**4. “மூச்சு நின்று விட்டால் பேச்சும் அடங்கும்” – கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக?**

- எரிவதைப் பிடுங்கினால், கொதிப்பது அடங்கி விடும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

**சிறுவினா:**

**1. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக?**

- மலைகளில் நீண்டு வளர்ந்த **மூங்கில்களில் ஒரு சாண் அளவு கணுக்களை** கொண்ட மூங்கிலை கொண்டு வந்தனர்.
- தம் கைப்பெருவிரலில் **இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாக** அம்மூங்கிலை வெட்டினர்.
- **எழுகோல் அகலமும், எட்டுகோல் நீளமும், ஒருகோல் உயரமும்** உடையதாக நாட்டிய அரங்கை அமைத்தனர்.
- அரங்கின் **உள்ளே செல்லவும் வெளியே செல்லவும்** வாயில்கள் அழகாக அமைக்கப்பட்டிருந்தன.
- சிறந்த **முத்துமாலைகளை** அரங்கம் முழுவதும் தொங்கவிட்டனர்.

**2. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான கற்கபனையாகப் படைக்க.**

- **அச்சம்:** வார இறுதி நாட்களில் வழங்கப்பட்ட **வீட்டுப்பாடத்தினை முடிக்காமல் திங்களன்று பள்ளிக்குச்** சென்றால் **ஆசிரியர் தண்டிப்பார்** என அச்சம் கொண்டு **உடல்நிலை சரியில்லை** என பெற்றோரிடம் பொய்கூறுதல்.
- **பெருமிதம்: பள்ளியளவில் முதலிடம் பிடித்திடுவான்** என்ற எண்ணத்தில் தனது மகனுக்கு **பாராட்டு விழா** எடுக்க முற்படுகிறார் **தந்தை.** ஆனால் மகனோ **மாநிலத்தில் முதலிடம் பிடித்து** அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிடுகிறான்.

**3. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்தக்காட்டுடன் புலப்படுத்துக.**

- காட்சி என்பது **கதை நகர்விற்கு உதவுவது**.
- திரைப்படத்தின் **காட்சிகள் சிறப்பாக அமைந்தால்** வசனத்திற்கே **இரண்டாம் இடம்தான்**.
- **மூன்று மணி நேரக் கதையை மூன்றே நிமிடங்களில்** காட்சிப்படுத்த முடியும்.
- ஒருவரின் கட்டுப்படுத்த முடியாத கோபத்தை காட்சிபடுத்த அவர் **கத்தி கூச்சல் போடுவதை** காட்ட வேண்டிய அவசியமில்லை.
- மாறாக, அவர் கையில் உள்ள **கண்ணாடி குவளையை** இறுகப்பிடித்து உடைப்பதைக் காட்டினால் போதும்.
- இதைத்தான் **காட்சியின் ஆற்றல்** என்பர்.

**4. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையே மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையை கொண்டு நிறுவுக.**

- மனதில் தாக்கத்தை ஏறப்படுத்தும் நிகழ்வுகளை **சொல்லில் வடிப்பதே கவிதை.**
- அதில் **சொல் புதிது, பொருள் புதிது.** இங்கு **கவிஞர் நகுலன்** அவர்கள் தன் கண்முன் நிகழும் சாதராண நிகழ்வுகளை மன நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி கவிதையாக படைத்துள்ளார்.
- வாழ்வின் அங்கமாக போன இறப்பினை **"மூச்சு நின்றுவிட்டால் பேச்சு அடங்கும்"** என்ற எளிய சொற்களால் கவிதையாக்குகிறார்.
- மேலும் **'இருப்பதற்கென்றுதான் வருகிறோம் - இல்லாமல் போகிறோம்'** என வாழ்வியல் தத்துவத்தை எளிதாக உரைக்கிறார்.
- **உண்மையை சொல்லாமல் இருப்பதற்கு – பல உண்மைகளை சொல்கிறார்** என ஓரிரு வரிகளில் கவிதை படைத்துள்ளார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

## நெடுவினா:

**1. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பற்றும் தொழிலா, அல்லது கலைகளின் சங்கமமா, உங்கள் பார்வையை கட்டுரையாக்குக.**

- ❖ முன்னுரை
- ❖ காப்பாற்றும் தொழில்
- ❖ கலைகளின் சங்கமம்
- ❖ என் கருத்து
- ❖ முடிவுரை

**முன்னுரை:**

- **தனி ஒருவரின் முயற்சியால்** உண்டாவது அல்ல திரைப்படம்.
- இலட்சக்கணக்கான **மக்களை வாழ வைத்துக் கொண்டிருக்கும்** தொழில் திரைப்படம்.
- அதன் சிறப்பை இக்கட்டுரையில் காண்போம்.

**காப்பாற்றும் தொழில்:**

- ஒரு திரைப்படம் தயாரிக்க **பலநூறு நபர்கள் வேண்டும்**.
- மூன்று மணி நேர திரைப்படம் உருவாக பல்லாயிரக்கணக்கான நபர்கள் வேண்டும்.
- **கிளாப் அடிக்கும் மனிதன் முதல் போஸ்டர் ஒட்டும் மனிதன்** வரை பல நபர்களின் தொழில் இத்திரைப்படத்துறை ஆகும்.
- இலட்சக்கணக்கான **மக்களின் வாழ்வாதராமாக** செயல்பட்டு வருகிறது.

**கலைகளின் சங்கமம்:**

- எத்தனையோ திரைப்படங்கள் வந்தாலும் **ஒரு சில படங்களே பேசப்படுகின்றன.**
- சில படங்கள் காலத்தை வென்றும் **வாழ்கின்றன.**
- அது ஏன் என்று சிந்தித்தால் நமக்கு தெரியும்.
- அதுதான் **கலைகளின் சங்கமம்.**
- சாதராண படங்கள் **காணாமால் போய்விடும்.**
- ஆனால் **கலைகளின் சங்கமாக இருந்தால்** பாராட்டை பெற்றே தீரும்.

**என் கருத்து:**

- திரைப்படத்துறை **ஆயிரம் பேரை காப்பாற்றும் தொழில்தான்.**
- அதில் சந்தேகமில்லை.
- ஆனால் **திரைப்படம் வாழவேண்டுமானால்** அது **கலைகளின் சங்கமாக** இருக்க வேண்டும்.

**முடிவுரை:**

- சிறப்பு **தொழிலில் இல்லை.**
- **சங்கமத்தில்** தான் உள்ளது.
- எனவே திரைப்படத்துறை **கலைகளின் சங்கமாக** வேண்டும் என்பதே என் பதிவு.

**2. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக?**

- ❖ முன்னுரை
- ❖ பிறப்பும் வளர்ப்பும்
- ❖ நாயகர்களின் உருவம்
- ❖ பிறவிக் கலைஞன்
- ❖ வசனம் மறவா மன்னன்
- ❖ வழியனுப்பும் பண்பு
- ❖ முடிவுரை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**முன்னுரை:**

- **நடிப்புலகின் சக்கரவர்த்தி** என எல்லோரும் வியக்கின்ற மகத்தான **நடிகர் சிவாஜி கணேசன்.**
- தன் **கதாபத்திரத்திற்கு உயிர் அளித்து** காண்பவர்களை கட்டிப் போடுகின்ற **கலைஞர்.**
- **நவரச உணர்வுகளை** வெளிப்படுத்தி நடித்த **மகாநடிகரை கண்ட பாலசந்திரனின்** மனவோட்டத்தை பற்றி காண்போம்.

**பிறப்பும் வளர்ப்பும்:**

- சிவாஜி கணேசன் **விழுப்புரத்தில்** பிறந்தவர்.
- **விழுப்புரம் சின்னையா கணேசன்** என்பதே அவரின் இயற்பெயர்.
- குடும்ப வறுமையின் காரணமாக தன் **ஐந்தாவது வயதில் நாடகக் கம்பெனியில்** பணிக்கு சேர்ந்தார்.

**நாயகர்களின் உருவம்:**

- **அறிஞர் அண்ணாத்துரை** அவர்களின் நாடகத்தில் **சத்ரபதி சிவாஜியாக** வேடமேற்று நடித்தார்.
- அந்நடிப்பை கண்டு வியந்த **தந்தை பெரியார்** அவர்கள் **'சிவாஜி கணேசன்'** என்று பெயரிட்டார்.
- **கர்ணன், காளிதாசன், கவி பாரதி, வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன்** என எண்ணற்ற நாயகர்களின் கதாபாத்திரத்தின் உருவமாகவே அவர் காட்சியளித்தார்.
- அப்படி பட்ட **கலைஞனின் வீட்டிற்கு விருந்தினராக பாலசந்திரன்** அவர்கள் சென்றார்.

**பிறவிக் கலைஞன்:**

- மெல்ல மெல்ல **சிங்க நடையிட்டு** வந்த அந்த மகாநடிகரை கண்டதையும் **இராஜராஜ சோழனின் வருகையை** கண்டதாகவே உணர்ந்தார் பாலசந்திரர்.
- **புதிய படத்திற்கான கதையை கூறத்தொடங்கியதும்** அதை ரசித்துக் கொண்டிருந்தார் சிவாஜிகணேசன்.
- அதை ரசித்துப் பார்த்த பாலசந்திரன் சிவாஜி அவர்கள் **'ஓர் பிறவி கலைஞன்'** என்பதை உணர்ந்து கொண்டார்.

**வசனம் மறவா மன்னன்:**

- இடையில் ராஜீவ் அவர்கள் சிவாஜி அவர்களிடம் **வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில்** நீங்கள் பேசிய **வசனம் நினைவிருக்கிறதா?** என விளையாட்டாய் கேட்டார்.
- சிவாஜி மெதுவாக நிமிர்ந்து **"கிஸ்தி – வரி- வட்டி, வானம் பொழிகிறது பூமி விளைகிறது – உனக்கு எதுக்கு கிஸ்தி கொடுப்பது. எங்களோடு வயலுக்கு வந்தாயா? ஏற்றம் இறைத்தாயா? நீர்ப்பாய்ச்சி – நெடுவயல் நிறைய கண்டாயா? நாற்று நட்டாயா? களை பறித்தாயா?...** என ஒரு மூச்சில் பேசி மெய்மறக்க வைத்தார்.

**வழியனுப்பும் பண்பு:**

- திரைப்படம் சார்ந்த அனைத்தும் பேசி முடித்த பிறகு **அறுசுவை உணவு உண்டார்கள்.**
- பிறகு கிளம்பும் போது **வாசல் வரை வழியனுப்பிய சிவாஜி அவர்களின் பண்பை** எண்ணி வியந்தார் பாலசந்திரன்.

**முடிவுரை:**

- **பத்மஸ்ரீ, பத்ம பூஷன், கலைமாமணி, செவாலியர், கெய்ரோ விருது, தாதாசாகிப் பால்கே விருது** போன்ற பல விருதுகளை பெற்றுள்ளார் சிவாஜி கணேசன்.
- இத்தகைய பெருமை மிக்கவரின் சந்திப்பால் தான் பாலசந்தர் அவர்களால் சுள்ளிக்காடு என்ற இந்நாவல் உருவாக காரணமாயிற்று.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

**3. உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.**

**கலைஞர் திரு இராஜகோபால்:**

- எங்கள் ஊரான கோவையில் நான் வாழும் வீட்டிற்கு அருகில் வாழ்ந்து வருபவர் **திரு. இராஜகோபால் அவர்கள்.**
- அவர் ஒரு மிகச்சிறந்த **சிற்பக்கலைஞர் மற்றும் ஓவியக் கலைஞரும்** ஆவார்.
- அவருடன் நான் சந்தித்த அனுபவத்தை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கலைஞரின் கைவண்ணங்கள்:**

- அவர் வீட்டின் முன்பகுதியில் **மான், குரங்கு, நாய் சிலைகள்** தத்ரூபமாக இருந்தன.
- நீளமான அறையில் **கலைநயம் மிக்க நிறைய வண்ணப் படங்கள்** மாட்டப்பட்டிருந்தன.
- ஒவ்வொன்றாக பார்த்து கொண்டே அவரின் **கலைநயத்தை பார்த்து மெய்மறந்து நின்றேன்.**

**கலைஞருடனான சந்திப்பு:**

- அவர் என்னை பார்த்து **தம்பி நலமாக உள்ளீர்களா?** என்று கேட்கவும் என் கவனம் அவர் பக்கம் சென்றது.
- அவரை **நலம் விசாரித்து விட்டு** அவரிடம் என் சந்தேகத்தை கேட்டேன்.
- ஐயா! எப்படி உங்களால் இப்படி செய்ய முடிகிறது? **ஓவியம், சிலை, சிற்பம்** என அனைத்தையும் இவ்வளவு தத்ரூபமாக செய்ய முடிகிறது?
- இந்த **கலையை எங்கு சென்று கற்றீர்கள்? எவ்வளவு காலம் ஆயிற்று**? என்று அவரிடம் கேட்டேன்.

**வாழ்க்கை பாடம்:**

- அதற்கு அவர் என்னிடம் **என் அப்பா இந்த தொழில் தான் செய்தார்.**
- நானும் அவரை பின்பற்றி **இந்தப் புனித தொழிலை செய்து வருகிறேன்.**
- இதற்கு என்று தனியாக சென்று **எங்கும் படிக்கவில்லை, வாழ்க்கையை படிக்கிறேன்** என்றார்.
- மேலும் எந்த பொருளையும் **சாதரணமாக பார்க்கமாட்டேன்.** ஒவ்வொன்றையும் உற்றுப் பார்த்து ஆராய்வேன் என்றார்.

**கலை ஒரு சேவை:**

- **உற்று நோக்கல், ஈடுபாடு, முழுமையாக தெரிந்து கொள்ளுதல்** இந்த மூன்றுமே என்னை முன்னேற வைத்தள்ளது.
- இதை **தொழிலாகச் செய்யாமல் சேவையாக** செய்து வருகிறேன்.
- **பணம் மட்டுமே வாழ்க்கையல்ல** என்பதை புரிந்து கொண்டுள்ளேன்.
- என் **மகிழ்ச்சி தான் எனக்கு முக்கியம்** என்று அவர் கூறியது எனக்கு நன்றாக புரிந்தது.
- வணக்கம் சொல்லி அங்கிருந்து புறப்பட்டேன்.

*******

**இலக்கணகுறிப்பு:**

| | | |
|---|---|---|
| 1. ஆடலும் பாடலும் | - | எண்ணும்மை |
| 2. தொல்நெறி | - | பண்புத்தொகை |
| 3. நகை | - | தொழிற்பெயர் |
| 4. அழுகை | - | தொழிற்பெயர் |
| 5. இளிவரல் | - | தொழிற்பெயர் |



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6. மருட்கை** - தொழிற்பெயர்
7. அச்சம் - தொழிற்பெயர்
8. பெருமிதம் - தொழிற்பெயர்
9. வெகுளி - தொழிற்பெயர்
10. உவகை - தொழிற்பெயர்

**உறுப்பிலக்கணம்:**

**1. தொழுதனர் = தொழு + த் + அன் + அர்**

**தொழு** – பகுதி; **த்** - இறந்த கால இடைநிலை; **அன்** - சாரியை;
**அர்** - படர்க்கைப் பாலர்பால் வினைமுற்று விகுதி.

**2. நகை = நகு + ஐ**

**நகு** – பகுதி; (நகு 'நகை' ஆனது விகாரம்) ஐ – தொழிற்பெயர் விகுதி.

**3. மருட்கை = மருள் + கை**

**மருள்** – பகுதி; **(ள், ட் - ஆனது விகாரம்); கை** - தொழிற்பெயர் விகுதி.

**4. வெகுளி = வெகுள் + இ**

**வெகுள்** – பகுதி; **இ** - தொழிற்பெயர் விகுதி.

**புணர்ச்சி விதி:**

1. **தலைக்கோல் = தலை + கோல்**

**விதி:** இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க, ச, த, ப மிகும்.
தலை + க் + கோல் - தலைக்கோல்.

**கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக?**

**1. கபிலன் திறமையானவர் என்று ………………… (குமரன்) தெரியும்.**

கபிலன் திறமையானவர் என்று **குமரனுக்குத்** தெரியும்.

**2. நேற்று முதல் …………………………… (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.**

நேற்று முதல் **அணையின்** நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

**3. உங்களுக்கு …………………… (யார்) நன்மை என நினைக்கிறார்கள்**

உங்களுக்கு **யாரால்** நன்மை என நினைக்கிறார்கள்

**4. முருகன் ………………… (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.**

முருகன் **வேகமாகச்** சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

**5. நம்முடைய ………………… (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.**

**நம்முடைய** தேவையின் **அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.**

**பொருள் வேறுபாட்டினை அறிந்து தொடர் அமைக்க:**

**1. கலம் - களம்**

போர்க்**களத்தில்** புண்பட்ட விரர்களுக்கு **கலத்தில்** நீர் தரப்பட்டது.

**2. வலம் - வளம்**

நதியின் **வலப்**புறத்திலுள்ள வயல்கள் நீர்**வள**த்தால் செழித்திருந்தன.

**3. உழை - உளை**

வேகமாக ஓடிய **உழை, உளை**யில் சிக்கியது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

**4. கான் - காண்**

**கான**கத்திலுள்ள காட்சிகளைக் **காண்**பது மனதிற்கு மகிழ்ச்சியளிக்கும்.

**5. புல் - புள்**

புல்லில், புள் இரையைத் தேடியது

**6. ஊண் - ஊன்**

பலர், **ஊன் ஊணினை** விரும்பி உண்பார்கள்.

**7. தின்மை – திண்மை**

பிறருக்கு **தின்மை** செய்தல் கூடாது என்பதில் **திண்மை**யாக இரு.

**இலக்கியநயம் பாராட்டுக:**

**அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்**
**அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்**
**பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?**
**பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்**
**சிந்தாமல் சிதறாமால் அழகை யெல்லாம்**
**சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி**
**இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்**
**எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?**
**- பாரதிதாசன்**

**பா நயம் பாராட்டல்**

**மையக்கருத்து:**

- இயற்கை அன்னை குளிரேற்றி ஒளியூட்டி நிலவை அழகு படுத்தினாள் என்று கவிஞர் பாரதிதாசன் கூறுகிறார்.

**மோனை நயம்:** **"முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை"**

**அ** : **அ**ந்தயிருளாற் - **அ**வ்வாறே
**பி** : **பி**ந்தியந்தக் - **பெ**ருஞ்சிரிப்பின்

**எதுகை நயம்:** **"இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை"**

**ந்** : அ**ந்**திருளாற் - பி**ந்**தியந்தக்
**ந்** : சி**ந்**தாமல் - இ**ந்**தாவென்

**இயைபு நயம்:** **"கடைசி எழுத்து ஒன்றி வருவது இயைபு"**

கண்டே**ன்** - கண்டே**ன்**

**அணி நயம்:**

இப்பாடலை அணிநயத்துடன் பாரதிதாசன் இயற்றியுள்ளார்.

**சந்த நயம்:**

இப்பாடல் சந்த நயத்துடன் பாடப்பட்டுள்ளது.

**அன்மையில் நீங்கள் பார்த்த சமூகக் கருத்துள்ள திரைப்படம் ஒன்றின் திரைவிமர்சனத்தை அப்படத்தின் இயக்குநருக்கு கடிதமாக எழுதுக.**

மதிப்பிற்குரிய இயக்குநர் **திரு.ராம்** அவர்களுக்கு உங்கள் பிரியமான வாசகன் எழுதிக் கொள்ளும் மடல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

Scanned with OKEN Scanner

தங்களின் தங்கமான படைப்பு **"பேரன்பு"** படம் பார்த்தேன். **"தங்க மீன்கள்"** இதற்கு முன் நீங்கள் கொடுத்த அற்புதமான விருந்து. மீண்டும் அதே தரத்தில் பேரன்பு படம். **முடக்குவாத நோயால்** பாதிக்கப்பட்ட **மகளுக்கும்** அவரின் **தந்தைக்கும் உள்ள பாசப்பிணைப்பால் மலர்ந்துள்ளது பேரன்பு படம்.** இதில் தந்தையாக நடித்த மலையாள **நடிகர் மமுட்டியின் நடிப்பு மிகச்சிறப்பு.**

**திருநங்கையின்** கபடமில்லாத அன்பை அழகாக காட்சிப்படுத்தியுள்ளீர்கள். மனித மனங்களில் மறைந்து இருக்கும் **வன்மம், கோபம், வஞ்சகம் சிறப்பாக** வெளிப்பட்டுள்ளது.

**தேனி ஈஸ்வரனின் ஒளிப்பதிவு, யுவன்சங்கர் ராஜாவின் பிண்ணனி இசை** படத்திற்கு பெருமை சேர்த்துள்ளது. **இயற்கை பேரன்பு உடையது** என்பதை உணர்த்தியுள்ள உங்கள் படம் எங்கள் மனதில் மகிழ்வை ஊட்டியுள்ளது. மீண்டும் சந்திப்போம்.

**அன்பு வாசகர்**

கவின்ராஜன்

## கீழ்க்காணும் நான்கு சொற்களை கொண்டு தொடர் அமைக்க:

1. **வானம், பற, நிலவு, தொடு**

   வானத்தில் பறப்போம். பறந்து நிலவைத் தொடுவோம்.
2. **சருகு, விழு, மண், அலை**

   சருகு விழுந்தது. மண் அதை அலைகழித்தது.
3. **விண்மீன், ஒளிர், எரி, தாவு**

   விண்மீன் ஒளிர்ந்தது. அதனால் இருள் எரிந்து விழுந்தது.
4. **குதிரை, வேகம், ஓடு, தாவு**

   குதிரை வேகமாக ஓடும். அதன்மேல் வேகமாகத் தாவு.
5. **குழந்தை, நட, துளிர்நடை, விழு**

   குழந்தை விழுந்தது. எழுந்து தளிர்நடை நடந்தது.
6. **திரை, காண், கைதட்டல், மக்கள்**

   திரையில் காண்கின்ற காட்சிகளைக் கண்டு மக்கள் கைத்தட்டல் செய்து மகிழ்ந்தனர்.

## படிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| **Artist** | கலைஞர் | **Cinematography** | ஒளிப்பதிவு |
| **Ammation** | இயங்குபடம் | **Sound effect** | ஒலிவிளைவு |
| **Newsreel** | செய்திப்படம் | **Multiplex complex** | ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம் |

## அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| **கவிதைகள்** | நகுலன் |
| **சிலப்பதிகாரம்** | இளங்கோவடிகள் |
| **மெய்ப்பாட்டியல்** | தொல்காப்பியர் |
| **நடிகர் திலகம்** | பாலசந்திரன் சுள்ளிக்காடு |
| **எனது சுயசரிதை** | சிவாஜி கணேசன் |
| **மெய்ப்பாடு** | தமிழண்ணல் |
| **காப்பியத்தமிழ்** | இரா. காசிராஸன் |
| சினிமா இரசனை | அம்ஷன் குமார் |
| **உலகத் திரைபட வரலாறு I, II, III** | அஜயன் பாலா |
| **உலக சினிமா I, II பேசும் படம்** | செழியன் |
| **கடவுளும் கந்தசாமி பிள்ளையும்** | புதுமைப்பித்தன் |




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# திருக்குறள்

**1. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை கண்டுபிடிக்க.**



அ). எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

**ஆ). உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.**

இ). வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

**2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளை கண்டறிக.**

**மனமோ மாட்டுவண்டி
பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரம்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு அதுவே தெளிவு.**

**அ). எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.**

ஆ). சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரிஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

இ). அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

**3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்கும் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்தாம் - மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட
சிறந்தக்கால் சீரியர் நட்பு.**

அ). பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

ஆ). எதிராகக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

**இ). நல்லினக்கத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.**

**4. அல்லல் படுப்பதூ உம் - எவரோடு பழகினால்?**

அ). வாள்போல் பகைவர் ஆ). மெய்ப்பொருள் காண்பவர்
இ). எண்ணியாங்கு எய்துபவர் **ஈ). தீயினத்தார்**

**5. திண்ணியர் என்பதன் பொருள்**

அ). அறிவுடையார் **ஆ). மன உறுதியுடையார்** இ). தீக்காய்வார் ஈ). அறிவினார்

**6. ஆராய்ந்து சொல்கிறவர் ண**

அ). அரசர் ஆ). சொல்லியபடி செய்பவர் **இ). தூதுவர்** ஈ). உறவினர்

**7. பொருத்தக:**

**அ). பாம்போடு உடன் உறைந்தற்று - 1). தீக்காய்வார்
ஆ). செத்தார் - 2). சீர் அழிக்கும் சூது
இ). வறுமை தருவது - 3). கள் உண்பவர்
ஈ). இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4). உடம்பாடு இலாதவர்**

அ). 1, 2, 3. 4 ஆ). 2, 3, 4, 1 இ). 4, 1, 3, 2 **ஈ). 4, 3, 2, 1**

**8. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்?**

**அ). வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ள கூடியவர்** ஆ). மனதிட்பம் உடையவர்
இ). அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர் ஈ). சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவா



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

9. **எளியது, அரியன என்பன**

அ). தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை

**ஆ). சொல்வது – சொல்லியபடி செய்வது**

இ). சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு

ஈ). மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது

**குறுவினா:**

1. **மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?**

- மனத்தை தீயவற்றிலிருந்து விலக்கி, **நல்வழியில் செலுத்துவதே அறிவுடைமை.**
- எனவே மனத்தை அதன் **போக்கில் செல்லவிடக் கூடாது** என்று வள்ளுவம் கூறுகிறது.

2. **உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

**உவமை:** உருவுகண்டு எள்ளாமை

**உவமேயம்:** உருள்பெருந்தேர்க்கு அச்சாணி

**விளக்கம் -பொருளோடு பொருந்துதல்:**

- பெரிய தேரினைச் செலுத்தும் வல்லமை **சிறிய அச்சாணிக்கே உண்டு.**
- அதுபோன்று உருவில் **சிறியவரும் அரிய பல செயல்களைச்** செய்ய வல்லவர்கள்.
- எனவே **உருவுகண்டு எள்ளாமை** வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

3. **மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?**

- **நல்ல செயல்பாட்டிற்கும், எண்ணிய செயலை செய்து முடிக்கவும் மன உறுதி தேவை** என்கிறது திருக்குறள்.

4. **நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?**

- **கள்ளுண்பவரை, நஞ்சுண்பவர்** என வள்ளுவர் இடித்துரைக்கிறார்.

5. **அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை?**

- அரசரோடு நட்பு கொள்ளும் போது அந்நட்பினை அடிப்படையாக கொண்டு எல்லைமீறி பாராட்டுதல் கூடாது. அது **நற்பலனைத் தராது கேட்டினையே தரும்.**

6. **பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?**

- அறிவுடைமை

7. **அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?**

- உறவு போல் நடித்து உட்பகை கொண்டவரிடம் **அச்சம் கொள்ள வேண்டும்.**
- வாளைப்போல் வெளிப்படையாகத் **துன்பம் செய்யும் பகைவரைக்கண்டு** அச்சம் கொள்ள வேண்டாம்.

8. **வறுமையும் சிறுமையும் தருவது எது?**

- வறுமையும் சிறுமையும் தருவது சூது.

9. **நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்?**

- **படித்ததில் பிடித்த குறள்:** எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
  மெய்ப்பொருள் காண்பது அறிவு.
- **காரணம்:** யார் எதைச் சொன்னாலும் நம்பவிடாமல் உண்மை எதுவென ஆராய்ந்து செயலாற்றிட வேண்டும் என அறிவுரை கூறும்படியாக அக்குறள் அமைந்துள்ளதால் எனக்கு மிகவும் பிடிக்கும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**10. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

- ❖ நல்ல இனத்தைவிட **சிறந்த துணை உலகத்தில் வேறில்லை.**
- ❖ தீய இனத்தை விட **துன்பத்தை தரும் பகையும் இல்லை.**

**11. இலக்கணக் குறிப்பு தருக.** **ஒரீஇ, படுப்பதூஉம், சொல்லுதல்.**

**அ). ஒரீஇ** - சொல்லிசை அளபெடை

**ஆ). படுப்பதூஉம்** - இன்னிசை அளபெடை

**இ). சொல்லுதல்** - தொழிற்பெயர்

**12. கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று – பொருள் கூறுக?**

- ❖ **கள்ளுண்டு மயங்கியவனிடம் நல்லனவற்றைச் சொல்லி திருத்த முயல்வது** நீரில் மூழ்கிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது.

**13. பெருந்தேர் - புணர்ச்சி விதி கூறுக?**

- பெருந்தேர் = பெருமை + தேர்.
- விதி 1: ஈறுபோதல் (பெரு + தேர்)
- விதி 1: இனமிகல் (பெருமை + ந் + தேர்)

**குறுவினா:**

**1. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக?**

- **அணிச் சுட்டல்:** மேற்காண் குறட்பாவில் பயின்று வருவது தொழில் உவமையணி ஆகும்.
- **அணி விளக்கம்:** ஒரு பொருளின் தொழில் அல்லது செயலின் காரணமாக அமையும் உவமை தொழில் உவமை எனப்படும்.
- **அணிப்பொருத்தம்:** குளிர்காய்பவர்கள் தீயினை அணுகாது அகலாது இருப்பது போல அரசனை சார்ந்து வாழ்பவர்களும் அவ்வரசானை அணுகாது அகலாது வாழ்தல் வேண்டும். இதில் அணுகாது, அகலாது என்ற இரு தொழில் உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதால் இது தொழில் உவமை அணி ஆகும்.

**2. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?**

**அறிவின் சிறப்பு:**

- **அறிவு, அழிவு நேராமல்** முன்னறிந்து காக்கும் கருவியாகும்.
- மேலும் அது **பகைவராலும் அழிக்க முடியாத அரண்** ஆகும்.

**அறிவின் இலக்கணம்:**

- **மனதை தீய வழியில்** இருந்து விலக்கி **நல்ல வழியில் செலுத்துவதே** அறிவாகும்.
- **எந்த செய்தியை எவர் கூறக்கேட்டாலும்** அச்செய்தியின் உண்மையை ஆராய்ந்து காண உதவுவதே அறிவாகும்.
- உலகத்தார் எவ்வழியில் **நடக்கின்றாரோ அவ்வழியில் தானும் நடப்பதே** சிறந்த அறிவாகும்.

**அறிவுடையார்க்குத் துன்பமில்லை:**

- பின்னர் வரக்கூடிய துன்பத்தை முன்னரே அறிந்து தன்னைக் காத்துக்கொள்ளும் **அறிவுடையவர்க்கு நடுக்கம் தரும் துன்பம்** என்றுமே இல்லை.



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3. எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக?**

**துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**

**நஞ்சு உண்பார் கள்உண்பவர்.**

**அணி இலக்கணம்:**

**உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும், உவம உருபு** மறைந்து வருவது.

**சான்று:** துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்

நஞ்சு உண்பார் கள்உண்பவர்.

**உவமை:** துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர்

**உவமேயம்:** நஞ்சு உண்பார் கள்உண்பவர்.

**உவமஉருபு:** போல- மறைந்து வந்துள்ளது.

**அணிப்பொருத்தம்:**

- **உறங்கியவர், இறந்தவரை** விட வேறுபட்டவர் அல்லர். அவ்வாறே கள்ளுண்பவரும் நஞ்சு உண்பவரே ஆவார்.
- இங்கு போல என்ற **உவம உருபு** மறைந்து வந்துள்ளதால் இது **எடுத்துக்காட்டு உவமையணி** ஆகும்.

**4. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக?**

- நல்ல செயல்பாட்டிற்கு **மன உறுதியே வேண்டும்.**
- **ஒரு செயலை செய்து முடிக்கலாம்** என்று சொல்லுவது எளிது.
- ஆனால் அதன்படி **நடத்தல் அரியது.**
- எண்ணியவர் **மனவுறுதி அடையவராக இருந்தால்** அவர் எண்ணியவாறே அடைவர்.
- ஒருவரின் **தோற்றத்தைக் கண்டு** இகழக்கூடாது.

**5. சிற்றினம் சேராமையும், நல்லினத்தின் துணையுமாக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக?**

- பொதுவாக மக்களுக்கு **இயற்கை அறிவு** என்பது அவரவரின் மனத்திறனால் ஏற்ப்படும்.
- ஆனால் அவர் அப்படிபட்டவர் இவர் அப்படிபட்டவர் என்று உலகில் உள்ளோரால் கூறப்படும் **போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும்** உரிய சொல்லானது அவரவர் சார்ந்த இனத்தினால் மட்டுமே ஏற்படும்.
- நல்ல இனத்தை விட **சிறந்த துணை உலகில் வேறில்லை.**
- அது போன்றே தீய இனத்தை விட **துன்பம் தரும் பகையும் வேறில்லை.**

**6. வாளையும் பாம்பையும் எவ்வகைப் பகைக்குச் சான்றாக வள்ளுவர் கூறுகிறார்?**

**வாள்:**

- வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவரைக் கண்டு அஞ்ச வேண்டாம்.
- ஆனால் உறவுபோல் நடித்து உட்பகை கொண்டவரை கண்டு அஞ்சுதல் வேண்டும்.
  - **வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக**
    **கேள்போல் பகைவர் தொடர்பு.**

**பாம்பு:**

- உள்ளத்தில் உடன்பாடு இல்லாதவர்களுடன் கூடி வாழும் வாழ்க்கை என்பது ஒரே குடிசையில் பாம்புகளுடன் வாழ்வது போன்றது.
  - **உடன்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்**
    **பாம்போடு உடன்உறைத் தற்று.**



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**7. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.**

**சூது:**

- **புகழினை கெடுத்து துன்பத்தினை ஏற்படுத்தும் சூதினை** போன்ற கேடு வேறில்லை.
- ஒருவரின் காலம் **சூதாடுமிடத்தில் கழியுமே** ஆனால் அவனது செல்வமும் பண்பும் கெட்டழியும்.

**கள்:**

- **உறங்கியவரும் இறந்தவரும்** வேறுபட்டவர்கள் அல்லர்.
- அதேபோல் **கள்ளுண்பவரும் நஞ்சுண்பவரும்** வேறுபட்டவர் அல்லர்.
- **கள்ளுண்டு மயங்கியவர்களை திருத்த முயல்வது** என்பது நீரில் மூழ்கியவர்களை தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது.

## நெடுவினா:

**1. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.**

- **முன்னுரை**
- **அறிவின் சிறப்பு**
- **அறிவின் இலக்கணம்**
- **அறிவுடையார்க்கு துன்பமில்லை**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- அறிவுடைமை என்பது ஒருவன் கல்வியினாலும் கேள்வியினாலும் சேகரித்துக் கொண்ட அறிவை ஆராய்ந்து தன் வாழ்க்கைக்கு பயன்படுத்திக் கொள்வது.

**அறிவின் சிறப்பு:**

- அறிவு அழிவு நேராமல் முன்னறிந்து காக்கும் கருவியாகும்.
- மேலும் அது பகைவராலும் அழிக்க முடியாத அரணுமாகும்.

**அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்அழிக்கல் ஆகா அரண்.**

**அறிவின் இலக்கணம்:**

- மனதை தீய வழியில் இருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

**சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

- எந்த செய்தியை எவர் கூறக் கேட்டாலும் அச்செய்தியின் உண்மையை ஆராய்ந்து காண உதவுவதே அறிவாகும்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

- உலகத்தார் எவ்வழியில் நடக்கின்றனரோ அவ்வழியில் தானும் நடப்பதே சிறந்த அறிவாகும்.

**எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு.**

**அறிவுடையார்க்கு துன்பமில்லை:**

- பின்னர் வரக்கூடிய துன்பத்தை முன்னரே அறிந்து தன்னைக் காத்துக்கொள்ளும் அறிவுடையார்க்கு நடுக்கம் தரும் துன்பம் என்றுமே இல்லை.

**எதிராக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்**



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**முடிவுரை:**

- **அறிவுடையவர்** ஒரு பொருளும் இல்லாவிட்டாலும் எல்லாம் உடையவராகவே மதிக்கப்படுவர்.
- **அறிவில்லாதவர்** எல்லாம் உடையவராக இருந்தாலும் ஒன்றும் இல்லாதவராகவே கருதப்படுவர்

**2. திருக்குறள் ஒரு வாழ்வியல் - நிறுவுக.**

- **முன்னுரை**
- **திருக்கறள் ஒரு வாழ்வியல்**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- மனிதன் மனிதனாக வாழ என்ன செய்ய வேண்டும் என்று மனிதனுக்கு சொன்ன இலக்கியம் திருக்குறள்.
- திருக்குறள் ஒரு **வாழ்வியல் இலக்கியம்** ஆகும்.
- மனிதன் **அறிவோடு வாழ** வேண்டும்.

**திருக்குறள் ஒரு வாழ்வியல்:**

- எப்பொருளை யார் யார் சொல்ல கேட்டாலும் அப்பொருளின் **மெய்யான பொருளை** காண்பதே அறிவாகும் என்கிறார் வள்ளுவர்.
- சிற்றினம் சேராமல் வாழ வேண்டும். ஏனென்றால் நல்ல இனத்தைவிட சிறந்ததாகிய **துணையும் உலகத்தில்** இல்லை.
- தீய இனத்தை விட துன்பத்தை தரும் **பகையும் இல்லை.**
- எந்த செயலை செய்தாலும் **மன உறுதியுடன்** செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் சிறப்பாக அமையாது.
- வாழ்க்கையில் **அச்சம் இருக்கலாம்.** ஆனால் **அச்சமே வாழ்க்கையாக** அமைதல் கூடாது.
- **வாழ்வு நல்வாழ்வாக** மாற இதுதான் வழி. **கள்ளும் சூதும் கேடு விளைவிக்கும்** என்கிறார் வள்ளுவர்.
- உறங்கியவர் இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர். அவ்வாறே கள்ளுண்பவரும் நஞ்சுண்பவரே ஆவார்.
- ஒருவருக்கு துன்பம் பலவற்றையும் உண்டாக்கி அவருடைய **புகழையும் கெடுக்கும் சூதைப்போல வறுமை தருவது வேறொன்றும் இல்லை.**
- ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டிய **வாழ்க்கை உண்மைகள்.**

**முடிவுரை:**

- திருக்குறள் ஒரு **வாழ்வியல் இலக்கியம்** என்றால் அது **பொருத்தமே! சாலப் பொருத்தமே**!!

**********



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

# இயல் - 7
# அருமை உடைய செயல்

## இலக்கணத் தேர்ச்சிக்கொள்:

**1. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.**

அ). கர்ணன் தோற்றான் போ **ஆ). வயதில் சிறியவள் ஆனாலும் தலைவி**

இ). இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ). இந்தா போறான் தருமன்

**2. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றை தேர்க.**

அ). உருவாக்கப்பட்டு இறுதி விட்ட வடிவங்கள்

ஆ). பழங்கதையை கொண்டு கருத்தை விளக்குவது

இ). நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்

**ஈ). விளங்காத கருத்தகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது**

**3. சாபவிமோனம், அகலிகை கதைகளில் தொன்மங்களை பயன்படுத்தியவர்**

அ). கு. அழகிரிசாமி **ஆ). புதுமைப்பித்தன்** இ). ஜெயமோகன் ஈ). எஸ். இராமகிருஷ்ணன்

**4. பண்புக் குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக?**

**அ). அறம் - 1). கர்ணன்**

**ஆ). வலிமை - 2). மனுநீதிச் சோழன்**

**இ). நீதி - 3. பீமன்**

**ஈ). வள்ளல் - 4). தருமன்**

அ). 3, 2, 1, 4 **ஆ). 4, 3, 2, 1** இ). 2, 4, 3, 1 ஈ). 4, 3, 1, 2

**5. தொன்மம் - விளக்கம் தருக.**

- படித்தால் நம்ப முடியாதது போல் தோன்றுகின்ற செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு இயங்குகின்ற பழமையான கதைகளையே தொன்மம் என்று கூறுவர்.

**6. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இருதொடர்கள் எழுதுக?**

- கிழித்த கோட்டை தாண்டமாட்டான்
- இந்தா போறான் சகுனி.

**7. உன்மனம் ஒரு பாற்கடல்**
**அதைக் கடைந்தால்**
**அமுதம் மட்டுமல்ல**
**ஆலகாலமும் வெளிப்படும் என்பதை**
**நீ அறிவாய் அல்லவா? - இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?**

**கவிதையில் வெளிப்படும் தொன்மம்:**

பாற்கடல், அமுதம், ஆலகாலம்

## நம்மை அளப்போம்

## பலவுள் தெரிக:

**1. 'பலர் துஞ்சும் தாம் துஞ்சான் - விழித்திருத்தவரும் அவரைப் பாடிய வரும்.**

அ). சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்

**ஆ). சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்**

இ). கணைக்கால் இரும்பொறையை கபிலர்

ஈ). கரிகாலனை, உருத்திரங்கண்ணார்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**2. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது**

**அ). கடந்தகாலத் துயரங்களை** ஆ). ஆட்களற்ற பொழுதை

இ). பச்சையம் இழந்த நிலத்தை ஈ). அனைத்தையும்

**3. முச்சந்தி இலக்கியம் என்பது**

**கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது**

**கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது**

அ). கூற்று 1 சரி, கூற்று 2 தவறு **ஆ). கூற்று 1, 2 சரி**

இ). கூற்று 1, 2 தவறு ஈ). கூற்று 1 தவறு கூற்று 2 சரி

**4. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்**

அ). உண்டு ஆ). பிறந்து **இ). வளர்ந்த** ஈ). இடந்தனில்

**5. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்**

அ). தனக்கும் பயன்படும், பிறருக்குப் பயன்படாது

**ஆ). தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது**

இ). பிறருக்கும் பயன்படாது, தனக்கும் பயன்படாது

ஈ). தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

## குறுவினா:

**1. பருவத்தே பயிர் செய் -நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக?**

- திட்டமிடுவதை ஒவ்வொரு **நாளும் செய்ய வேண்டும்.**
- அன்றைய பணிகளை **மனதில் முன்கூட்டியே திட்டமிட்டுக்** கொள்ள வேண்டும்.
- அந்தந்த நேரத்தில் அந்தப் **பணியை செய்து** முடிக்க வேண்டும்.

**2. எந்தவொரு பொருளை பயன்படத்தும் போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பைச் நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும் போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக?**

- நாம் பருகும் தேநீர் சுவையானது.
- இந்தச் சுவைக்கு காரணம் அதிலுள்ள **தேயிலை, சர்க்கரை, பால், தண்ணீர்** போன்றவையே.
- தேயிலை பறிப்போரைச் சிந்திக்கிறோமோ? கரும்பிலிருந்து சர்க்கரை தயாரிப்பதற்கு எத்தனைபேர் உழைத்துள்ளனர், பால் எங்கிருந்து எப்படி வருகிறது?
- இப்படி ஒரு **தேநீரை நாம் சுவைப்பதற்கு எத்தனை பேர் உழைத்துள்ளனர்** என எண்ணிப்பார்த்தால் புரியும்.
- நாம் அனுபவிக்கும் **ஒவ்வொரு பொருளின் பின்பும் எத்தனைபேர் உழைப்பு மறைந்துள்ளது** என எண்ணிப்பார்த்தால் உழைப்பின் உயர்வு புலப்படும்.

**3. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?**

- அறிவுடை **வேந்தனின் மக்களிடம்** வரிதிரட்டும் நெறிமுறையினை அறிந்து **வரியைத் திரட்டினால்** நாடு பெருஞ்செல்வத்தைப் பெற்று செழிப்படைவதோடு அவன் எண்ணமும் நிறைவேறும் என **பிசிராந்தையார்** கூறுகிறார்.

**4. செவியறிவுறூஉ துறையை விளக்குக?**

- அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அறிவுறுத்துவது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## சிறுவினா:

**1. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக?**

- வேளாண்மைகுள்ளும் மேலாண்மையின் கூறுகள் உண்டு.
- மேலாண்மை நெறிகளை பின்பற்றினால் வேளாண்மை செழிக்கும்.
- சரியான **பயிரை தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்தல், அறுடைக்குப்பின் பாதுகாத்தல், உரிய விலை வரும் வரை இருப்பு வைத்தல்** என்று ஒவ்வொரு நிலையிலும் விழிப்புணர்வோடு மேலாண்மை செய்தால் மேலாண்மை செழிக்கும்.

**2. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?**

- ♣ போரில் குண்டு மழையால் **ஈழநிலமும் மரமும் செடியும் கொடியும் முற்றிலும்** அழித்தொழிக்கப்பட்டது.
- ♣ அந்நிலத்தில் மனித நடமாட்டம் இல்லாத நேரத்தல் **உலவித்திரிந்த யானையின்** எச்சத்திருந்த விதையின் மூலமாக இப்பூச்செடி முளைத்திருக்கலாம் என்கிறார் தமிழநதி

**3. எங்கிருந்து வருகிறது**
**வண்ணத்துப்பூச்சியொன்று**
**பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

- **இடம்:** அதன் பிறகும் எஞ்சும் என்னும் கவிதையில் அதிசய மலர் என்னும் தலைப்பில் உள்ளது.
- **பொருள்:** மலரைத் தேடி வண்ணத்துப்பூச்சி வருகிறது. நாளை பறவைகளும் வரக்கூடும்.
- **விளக்கம்:** பசுமையான வளம்மிக்க பகுதி போரினால் சாம்பலாகிறது. **அதிசய மலர்** ஒன்று முளைத்திருக்கிறது. அந்த **மலரைத் தேடி வண்ணத்துப்பூச்சிகள்** வருகின்றன. நாளை **பறவைகளும்** வரலாம்.

**4. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

- **உவமை:** யானை வயலில் புகுந்தால் அது **வாயில் சாப்பிடுவதைக் காட்டிலும்** அதிகமாக **காலல் மிதிபட்டு அழியும்.**
- **பொருள்:** அரசன் அதிகமாக **குடிமக்களிடம் வரி பெற்றால்** அவனும் பயனடையாமல் நாட்டு மக்களும் துன்புறுவார்.
- **பொருத்தம்:** யானை – அரசன்.

## நெடுவினா:

**1. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன?**

- **முன்னுரை**
- **நாட்டுப்புற கதைகள்**
- **பழமொழிகள்**
- **விடுகதைகள்**
- **ஒப்பாரிபாடல்கள்**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- ☻ மனித சமுதாயம் **எதை அனுபவித்ததோ எதைக் கற்றதோ** அதை குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையே நாட்டுப்புற இலக்கியங்கள்.
- ☻ அவை எளிய **மக்களின் வலிகளை** முழுமையாக பிரதிபலிக்கின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

- அதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நாட்டுப்புற கதைகள்:**

- **மக்களிடையே கதை கூறுதல்** என்பது ஓர் பொதுவான பண்பாகும்.
- மக்கள் **தங்களது வாழ்வில் எதிர்கொள்ளும் அனுபவங்களை எடுத்துக் கூறுவதற்காகவும்** பொழுதுபோக்கிற்காகவும் கதைகளை கூறத் தொடங்கினார்கள்.
- தன்னுடைய **இயல்பான வாழ்க்கை நிலைகளையும் தன் குறைகளையும்** அதிலிருந்து விடுபட்டு சாதித்ததையும் அக்கதைகள் வெளிப்படுத்தி வருகின்றன.

**பழமொழிகள்:**

- அறிவின் சுருக்கமே **பழமொழி.** இவை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் கொண்டவை.
- பழமொழிகள் என்பது **பலரது அறிவை வெளிப்படுத்துபவை.**
- அது **ஆழமான சிந்தனையை தூண்டிடும் அனுபவ ஊற்று.**

**விடுகதைகள்:**

- ஒரு கருத்தை தன்னிடம் மறைத்துக் கொண்டு கூறுவது.
- இவற்றை **அறிவு ஊட்டும் செயல்** என்று கூறலாம்.

**ஒப்பாரிப்பாடல்கள்:**

- இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல்களை **ஒப்பாரி** என்பர்.
- **குடும்ப நிலமை, தன் நிலைமை, தன்னுடைய கஷ்டம்** என அனைத்தையும் சேர்த்து பாடுவர்கள்.
- இறந்தவருக்கும் தனக்குமான **உறவு இழப்பை** அது குறிக்கும்.

**நாட்டுப்புற கதைகள்:**

- நாட்டுப்புற இலக்கியங்கள் மனிதனின் வாழ்வியலை மிக அழகாக படம்பிடித்துக் காட்டுகின்றன.
- **பழமொழி, விடுகதை, கதைப்பாடல்கள், கதைகள்** போன்றவை மனிதனின் நிலைகள் பற்றி முழுமையாக பிரதிபலிக்கின்றன.

**2. சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? –விளக்குக.**

- **முன்னுரை**
- **புகளூர் கல்வெட்டுக்கள்**
- **கல்வெட்டுச் செய்தி**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- தொல்லியல் கடந்த காலத்தை காட்டும் **கண்ணாடி.**
- கல்வெட்டுக்கள் கடந்த **காலத்தின் பக்கங்கள்.**
- இவைகள் சங்ககால இலக்கண இலக்கியங்களை அறிந்து கொள்ள உதவுகின்றன.
- அத்தகைய சிறப்பு வாய்ந்த **புகளூர் கல்வெட்டுகளை** கண்டறிந்து வெளிக்கொணர்ந்தவர் **ஐராவதம் மகாதேவன்** ஆவார்.

**புகளூர் கல்வெட்டுகள்:**

- சங்ககால தமிழ் மன்னர்களை பற்றி அறிந்து கொள்ள கிடைத்தவையே **புகளூர் கல்வெட்டுகள்.**
- **1927-1928 –ஆம்** ஆண்டகளில் புகளூர் கல்வெட்டுகளை பற்றிய செய்திகள் கிடைத்தன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

- ஆறுநாட்டான் குன்றில் உள்ள குகையில் நான்கு வரிகளில் எழுதப்பட்ட **பிராமிக் கல்வெட்டில் "ஆதன்"** என்ற சொல் காணப்படுகிறது.
- இது **சேர மன்னர்களை** பற்றியதாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.
- இதை **ஐராவதம் மகாதேவன்** கல்வெட்டை எழுத்துக்கூட்டி வாசித்துப் படியெடுத்துக் கொண்டார்.

**கல்வெட்டுச் செய்தி:**

- புகளூர் கல்வெட்டுகள் **நான்கு வரி கல்வெட்டுகள்**.
- **40 ஆண்டுகளாக படிக்க முடியாமல்** விட்டுவிட்ட கல்வெட்டாகும்.
- சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள உதவுகிறது.
- கல்வெட்டுக்களில் **'கோ'** என்ற முதல் சொல்லே இது சங்ககால தமிழ் மன்னனின் கல்வெட்டுகள் என்று உணர்த்துகின்றன.
- பண்டைய **தமிழ் மன்னர்களின் பெயர்கள்** முதன் முறையாக புகளூர் கல்வெட்டில் காணப்படுகின்றன.
- இக்கல்வெட்டுகள் **கருவூரில்** ஆட்சிசெய்த **சேரல் இரும்பொறை மன்னர்கள்** பொறித்தது.
- இக்கல்வெட்டுகள் கி.பி **2-ம் நூற்றாண்டைச்** சார்ந்தது.

**முடிவுரை:**

- சேர அரசர்களின் பெயர்கள் புகளூர் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளதை **ஐராவதம் மகாதேவன்** கண்டுபிடித்தார்.
- சங்ககால இலக்கியத்தை அறிய **இலக்கியங்கள் மட்டுமே** துணை என்று இருந்தன.
- ஆனால் தற்பொழுது **கல்வெட்டுகளும் துணையாக** இருப்பதை **புகளூர் கல்வெட்டுகள்** மூலம் அறிய முடிகிறது.

**3. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக?**

- **முன்னுரை**
- **நிருவாக மேலாண்மை**
- **ஷேக்ஸ்பியரின் நிர்வாக மேலாண்மை**
- **நிருவாக நெறி**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- **மனித இனம் தோன்றிய முதலே** மேலாண்மையும் துளிர்க்க தொடங்கிவிட்டது.
- **இயற்கையோடு இணைந்து வாழவும் இடர்களை களைந்திடவும்** மேலாண்மை அவசியமான ஒன்று.
- மேலாண்மை வகைகளில் ஒன்றான **நிருவாக மேலாண்மை** பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நிருவாக மேலாண்மை:**

- உயர்பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் **நிபுணத்துவம் பெற்றவர்களாக** இருப்பது இல்லை.
- ஆனால் **யார் திறமைசாலிகள்** என்று அறிந்து அவர்களை அறிந்து வைத்துக் கொண்டால் போதும்.
- **தெரிந்திருப்பது ஒரு அறிவு** என்றால், **யாருக்கு தெரியும்** என்பதை தெரிந்து வைத்திருப்பது மற்றொரு அறிவு.
- நிர்வாகத்தில் **வரவே செலவை** தீர்மானிக்க வேண்டும்.
- வரவை தாண்டி **நிறைய செலவு செய்பவன்** அடுத்தவர்களிடம் கையேந்தும் நிலைக்கு தள்ளப்படுவான்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**ஷேக்ஸ்பியரின் நிர்வாக மேலாண்மை**

- **டைமன்** என்பவன் **ஏதென்ஸ்** நகரில் இருந்தான்
- அவன் **வரவு குறைந்தாலும் செலவு நீடித்தது.**
- அவனின் **உதவியாளரின் நிதி நிலைமை** பற்றிய கருத்தை கேட்க அவன் விரும்பவில்லை.
- கடன் கொடுத்தவர்கள் **கழுத்தை நெறிக்கவும்** தான் அளித்த **விருந்தை உண்டவர்கள் உதவுவார்கள்** என்று எண்ணினான்.
- ஆனால் அவனுக்கு **உதவ யாரும் முன்வரவில்லை**.
- மனித இனத்தையே **வெறுத்து அவன் ஊருக்கு ஒதுக்குப்புறமாக** சென்றான்.

**நிருவாக நெறி:**

- அடுத்தவர் நலனுக்காக வாழ்பவரே **தலைமைப்பண்பு மிக்கவர்.**
- **அமுதமே கிடைத்தாலும்** அதை பிறர் நலனுக்காகவும் பயன்படுத்துபவரே உண்மையான மனிதர்.
- அப்படித்தான் **ஔவைக்கு அதியமான்** நெல்லிக்கனியை தந்தான்.

**முடிவுரை:**

- **நாட்டின் முன்னேற்றம்** மேலாண்மையில் இருந்து தொடங்குகிறது.
- நிருவாகத்தில் **வரவே செலவை** தீர்மானிக்க வேண்டும்.
- அதுவே **வெற்றியின் அடிப்படையாக அமையும்** என்று நிருவாக மேலாண்மை என்று **வெ.இறையன்பு** கூறுகிறார்.

********

**இலக்கணகுறிப்பு:**

1. **காய்நெல்** - வினைத்தொகை
2. **புக்க** – பெயரெச்சம்
3. **அறியா** - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

**உறுப்பிலக்கணம்:**

1. **அறிந்து = அறி + த் (ந்) + த் + உ**

**அறி** – பகுதி; **த்** - சந்தி; த் 'ந்' ஆனது விகாரம் ; **த்** -இறந்த கால இடைநிலை;

**உ** – வினையெச்ச விகுதி;

2. **அறுத்து = அறு + த் + த் + உ**

**அறு**– பகுதி; **த்** - சந்தி; **த்** -இறந்த கால இடைநிலை; **உ** – வினையெச்ச விகுதி;

**மரபுச் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக:**

1. **ஆற அமர**

ஆற அமர சாட்சிகளை விசாரித்தப்பின்னே தீர்ப்பினை வழங்கினார் நீதிபதி.

2. **ஆணி அடித்தாற் போல**

திருக்குறளில் உள்ள கருத்துகள் யாவும் ஆணி அடித்தாற் போல மாணவர்களின் மனதில் பதிய வேண்டும்.

3. **அகலக்கால்**

முதலறிந்து அகலக்கால் வைக்காமல் தொழில் நடத்துவதே சிறந்தது.

4. **வழிவழியாக**

எங்கள் குடும்பம் வழிவழியாக விவசாயம் செய்துவருகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

**5. கண்துடைப்பு**

அரசியல்வாதிகள் கண்துடைப்புக்காக வெற்று வாக்குறுதிகளை கொடுப்பார்கள்.

**இலக்கியம் நயம் பாராட்டுக:**

**பூமிச்சருகாம் பாலையை**
**முத்துபூத்த கடலகாளக்குவேன்**
**புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்**
**புதிய தென்றலாக்குவேன்**
**இரவில் விண்மீன் காசினை – செலுத்தி**
**இரவலரோடு பேசுவேன்**
**இரவெரிக்கும் பரிதியை – ஏழை**
**விறகெரிக்க வீசுவேன்**
**- நா. காமராசன்**

**பா நயம் பாராட்டல்**

**மையக்கருத்து:**

❖ எழிலமிகு இயற்கையை மனித வாழ்விற்கு உதவும் வகையில் மாற்றுவேன் என்று கவிஞர் நா. காமராசன் கூறுகிறார்.

**மோனை நயம்:** **“முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை”**

| | | | |
|---|---|---|---|
| **பு** | : | **பூ**மிச்சருகாம் | - **பு**யலைக் |
| **இ** | : | **இ**ரவலரோடு | - **இ**ரவெரிக்கும் |

**எதுகை நயம்:** **“இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை”**

| | | | |
|---|---|---|---|
| **ர** | : | இரவில் | - இரவெரிக்கும் |
| **ர** | : | இரவலரோடு | - விறகெரிக்க |

**இயைபு நயம்:** **“கடைசி எழுத்து ஒன்றி வருவது இயைபு”**

கடலகாளக்கு**வேன்** - தென்றலாக்கு**வேன்** - வீசு**வேன்**

**அணி நயம்:**

இப்பாடலை அணிநயத்துடன் பாரதிதாசன் இயற்றியுள்ளார்.

**சந்த நயம்:**

இப்பாடல் சந்த நயத்துடன் பாடப்பட்டுள்ளது.

**பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.**

**இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் எனறீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.**

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம், “முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே! அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக?” எனக் கேட்டார்.

*****



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

## படிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| **Debit card** | பற்று அட்டை | **Teller** | விரைவுக் காசாளர் |
| **Demand Draft** | கேட்பு வரைவோலை | **Mobile banking** | அலைபேசி வழி வங்கி முறை |
| **Withdrawl Slip** | திரும்பப் பெறல் வடிவம் | **Interent Banking** | இணையவங்கி முறை |

## அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| **இலக்கியத்தில் மேலாண்மை** | வெ.இறையண்பு |
| **அதிசய மலர்** | தமிழ்நதி |
| **தேயிலைத் தோட்டப்பாட்டு** | முகம்மது இராவத்தர் |
| **புறநானூறு** | பிசிராந்தையார் |
| **சங்ககால கல்வெட்டும் என் நினைவுகளும்** | ஐராவதம் மகாதேவன் |
| **தொல்தமிழ் எழுத்துக்கள் ஓர் அறிமுகம்** | செந்தி நடராஜன் |
| **முச்சந்தி இலக்கியம்** | ஆ.இரா. வேங்கடாசலபதி |
| **கல்வெட்டு** | இதழ் |
| **கல்வெட்டுகள் சொல்லும் கோயில் கதைகள்** | குடவாயில் பாலசுப்ரமணியன் |
| **நீர்க்குமிழி** | கே. பாலசந்தர் |
| **வெள்ளை இருட்டு** | இன்குலாப் |
| **முள்ளும் மலரும்** | உமா சந்திரன் |

VVMS-PV
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

# இயல் - 8
# எல்லா உயிரும் தொழும்

## இலக்கணத் தேர்ச்சிக்கொள்:

**1. குறியீடுகளைப் பொருத்துக**

**அ). பெண் - சமாதனம்**

**ஆ). புறா - வீரம்**

**இ). தராசு - விளக்கு**

**ஈ). சிங்கம் - நீதி**

அ). 2, 4, 1, 3 ஆ). 2, 4, 3, 1 **இ). 3, 1, 4, 2** ஈ). 3, 1, 2, 4

**2. கூற்று: 19 ம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.**

**காரணம்: பொதலேர், ரைம்பொ, வெர்லேன், மல்லர்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்**

**அ). கூற்று சரி, காரணம் தவறு** ஆ). கூற்று சரி, காரணம் சரி

இ). கூற்று தவறு, காரணம் தவறு ஈ). கூற்று தவறு, காரணம் சரி

**3. சங்க இலக்கியத்தில் அகத்திரண மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளை குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்.**

அ).உவமை ஆ). உவமேயம் இ). உத்தி **ஈ). உள்ளுறை உவமை**

**4. திட்டம் என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் வரம் குறியீடாகிறது?**

அ). அமுதசுரபி ஆ). ஆதிரைப் பருகு **இ). திட்டம்** ஈ). பயனற்ற விளைவு

**5. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?**

**அ). குறியீடு** ஆ). படிமம் இ). அங்கதம் ஈ). தொன்மம்

## குறுவினா:

**1.). குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.**

இன்னும்
சாவித்ரி சாத்தியவானை
மீட்கச் செல்கிறாள்
மதுபானக் கடைக்கு

**2). வியர்வை கவிதையில் வெளிப்படும் குறியீடுகளை குறிப்பிடுக**

- **வியர்வைத்துளி** - ஆதிரைப்பருக்கை
- **செழிப்பு** - அமுதசுரபி

**3). குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக?**

- சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.
- சுட்டும் பொருளானாது அனைவரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்.
- குறியீட்டுப் பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

## நம்மை அளப்போம்

## பலவுள் தெரிக:

**1. சிறுபாணற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி**

அ). உதகமண்டலம் ஆ). விழுப்புரம் **இ). திண்டிவனம்** ஈ). தருமபுரி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**2. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.**

**அ). தனித்தமிழ்த் தந்தை - 1. மு.வரதராசனார்**

ஆ). ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை சீனி. வேங்கடசாமி

இ). தமிழ்த் தென்றல் - 3. திரு.வி.க

ஈ). மொழி ஞாயிறு - 4. தேவநேயப் பாவாணர்

**3). ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்**

அ). பௌத்தமும் தமிழும் ஆ). இசுலாமும் தமிழும்

இ). சமணமும் தமிழும் **ஈ). கிறித்துவமும் தமிழும்**

**4). நான் வெற்றுவெளியில அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது**

அ). தமது வீட்டு முகவரியை ஆ). தமது குடும்பத்தை

**இ). தமது அடையாளத்தை** ஈ). தமது படைப்புகளை

**5). கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்**

அ). ஆய் அண்டிரனும் அதிகனும் **ஆ). நல்லியக்கோடனும் குமணனும்**

இ). நள்ளியும் ஓரியும் ஈ). பாரியும் காரியும்

**குறுவினாக்கள்:**

**1. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் நூல் பற்றிக் குறிப்பு வரைக.**

- கவின் கலைகள் பற்றி தமிழில் வெளிவந்த முதல்நூல் **தமிழர் வளர்த்த அழகுகலைகள்**.
- இதன் ஆசிரியர் **சீனி.வேங்கடசாமி** ஆவார்.
- தமிழ்ச் சமுதாயம் தனது **பழைய கலைச் செல்வங்களை மறந்து** தற்பெருமை அறியாதிருந்தன.
- அதை **நினைவூட்டும் வகையில்** படைக்கப்பட்ட நூல் இந்நூல் ஆகும்.

**2. விரிபெரு தமிழர் மேன்மை**
**ஓங்கிடச் செய்வ தொன்றே**
**உயிர்ப்பணியாகக் கொண்டோன் - யார் யாரைப் பற்றி எதற்காக கூறுகிறார்?**

- பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் **மயிலை சீனி.வேங்கடசாமி** பற்றி கூறியது.
- **தமிழ் இனத்துக்கு தேவையான பல்வேறு கலை சார்ந்த ஆய்வினை** மேற்கொண்டதால் சீனி.வேங்கடசாமியை பற்றி கூறுகிறார்.

**3. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக?**

- ஒருவரின் தனித்திறமை அடையாளம் காணப்படுகையில் **எழுச்சியும் ஊக்கமும் உடன் இணைகிறது**.
- அத்தகைய அடையாளத்தை தொலைத்தால் **முகம் முகவரியற்று போனது** என்கிறார் **சுப்பிரமணியன்.**

**4. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?**

- உலகம் **பிளந்து** வெடிக்கவில்லையே
- வானம் **இடிந்து** விழவில்லையே
- கடல்நீர் **வற்றவில்லையே** என மக்கள் புலம்பினர்.

**சிறுவினாக்கள்:**

**1. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக?**

- **தமையன் தமிழாசிரியராகவும், தந்தை மருத்துவராகவும்** இருந்ததால் இவர் தமிழ்மொழி மீது அதிக பற்றுமிக்கவராக காணப்பட்டார்.
- **பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும்** ஆகிய நூல்களை எழுதினார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- **சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, கலை வரலாறு, மொழி ஆய்வு** முதலான பல துறைகளிலும் இவர் கவனம் செலுத்தினார்.
- திருமணமே செய்து கொள்ளாமல் **இல்லறத் துறவியாக வாழ்ந்து** நமது அடையாளங்களை மீட்டுத் தந்த மாபெரும் மனிதராவார்.

**2. கடையெழு வள்ளலகளையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.**

| வ. எண் | கடையேழு வள்ளல்கள் | ஆண்டநாடு | செய்த செயல் |
|---|---|---|---|
| 1 | **பேகன்** | பொதினி மலை | குளிரால் நடுங்கிய மயிலுக்கு தன் போர்வையைக் கொடுத்தவன் |
| 2 | **பாரி** | பறம்பு நாடு | முல்லைக்கு பற்று கொம்பாக தேரினைக் கொடுத்தவன் |
| 3 | **குாரி** | மாலையமான் நாடு | இரவலருக்கு தன் குதிரையும் பெருஞ்செல்வத்தையும் கொடுத்தவன் |
| 4 | **ஆய்** | பொதியமலை | நீலக்கல்லினையும் நாகம் கொடுத்த ஆடையினையும் இறைவனுக்கே கொடுத்தவன். |
| 5 | **அதியமான்** | தகடூர் | அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு கொடுத்தவன் |
| 6 | **நள்ளி** | நுளிமலை | தன்னை நாடியவர்களும் நண்பர்களும் பிறரிடம் இரவாது உள்ளம் மகிழும்படி குறிப்பறிந்து கொடுப்பவன். |
| 7 | **ஓரி** | கொல்லிமலை | தன் நாட்டின் சிறிய மலைப்பகுதியை கூத்தருக்கு கொடுத்தவன். |

**3. ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:** எச்.எ. கிருட்டிணனார் இயற்றிய **'இரட்சணிய யாத்திரிகம்'** என்னும் நூலில் இவ்வரிகள் இடம் பெற்றுள்ளது.

**பொருள்:** பகைவர்கள் கயிற்றைக் கொண்டு கட்டும்பொழுது ஓர் ஏழையினைப் போன்று உடன்பட்டு நின்றார் **இயேசு.**

**விளக்கம்:** யூதர்கள் **இறைமகனார் மீது பகைகொண்டு இழிசொற்களை கூறி** கயிற்றினால் கட்டினார்கள். அவ்வாறு கட்டும்பொழுது **எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல்** வறுமைக்காலத்தில் உதவிகள் கிடைக்கப்பெறாத ஏழையினைப் போன்று, **அன்பு என்ற கட்டிலிருந்து விடுபடாமல்** உடன்பட்டு நின்றார் அவர். இது சாதாரண **அன்புச் செயல்** அன்று. பகைகொண்ட மனிதர்கள் வாழ்நாள் முழுவதும் **துன்பத்தில் இருப்பார்களோ** என்றெண்ணிய இறைமகனாரின் இரக்கச்செயல் இது.

**4. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக?**

- தன்னை நாடி வந்தவர்களுக்கு எவ்வித எதிர்பார்ப்புமின்றி வாரி வழங்கிடும் **வள்ளல்தன்மையே கொடை.**
- வறியவர்களின் குறிப்பறிந்து **தேவையானவற்றை போதுமென்ற அளவிற்கு வழங்குதல்.**
- **முதலில் வந்தவர் கடைசியில் வந்தவர்** என்ற வேறுபாடு இன்றி உதவிகளைச் செய்தல்.
- பொருளாக மட்டுமின்றி நடைமுறை வாழ்க்கையில் **சிக்கலை எதிர்கொள்பவர்களுக்கு** அவர்களின் தேவையறிந்து உதவிகளைச் செய்தல்.

## நெடுவினாக்கள்:

**1. மயிலையார் ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர் என்னும் கூற்றினை சான்றுகளுடன் கட்டுரையாக்குக.**

- **முன்னுரை**
- **அறிவின் ஆய்வுமுறை**
- **தொடக்ககால ஆய்வு**
- **வரலாற்று ஆய்வு**
- **கலையில் ஆய்வு**
- **கல்வெட்டுகளில் ஆய்வு**
- **முடிவுரை**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**முன்னுரை:**

- ஒவ்வொரு இனமும் கடந்தகால வரலாற்றை அறிந்திருந்தால் **எதிர்கால இலக்குகளை** அடைய முயலும்.
- அத்தகைய வரலாற்றை **தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு** என்று ஆராய்ந்து எழுதியவர் **மயிலை. சீனி வேங்கடசாமி.**

**அறிவின் ஆய்வுமுறை :**

- **அறிவின் வாயில்களை** நோக்கியே அவர் கால்கள் நடந்தன.
- **புதியசெய்தி தருதல், புது விளக்கமளித்தல், உண்மையை எடுத்துரைத்தல்** என்ற ஆய்வு அணுகுமுறை கொண்டவர்.

**தொடக்ககால ஆய்வு:**

- தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் **கிறித்துவமும் தமிழும்** என்று உரையாற்றினார்.
- இதுவே அவர் எழுதிய முதல் நூல் ஆகும்.
- **சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும்** ஆய்வுநூலை எழுதினார்.

**வரலாற்று ஆய்வு:**

- **1950 – ம் நூற்றாண்டு** காலத்தில் ஆட்சிபுரிந்த மன்னர்களை பற்றி ஆய்வு நடத்தினார்.
- **மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன்** போன்றவர்களை பற்றி நூல் எழுதினார்.

**கலையில் ஆய்வு:**

- **கட்டடம், சிற்பம், ஓவியம்** தொடர்பான ஆய்வுகள் சமூக வரலாற்றுக்கு புதியதாக அமைந்தன.
- **தமிழ் வளர்த்த அழகுகலைகள்** என்னும் நூல் இவர் எழுதிய முதல் நூல்.

**கல்வெட்டு ஆய்வுகள்:**

- ஒவ்வொரு இனமும் கடந்தகால வரலாற்றை அறிந்திருந்தால் **எதிர்கால இலக்குகளை அடைய முயலும்.**
- **துளு** மற்றும் **தமிழ்மொழியை** ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்.
- மறைந்து போன தமிழ்நூல்கள் என்னும் நூல் **333 மறைந்த நூல்களை** பற்றி வெளிக்கொணர்ந்தவர்.
- சென்னை கோகலே மண்டபத்தில் “**ஆராய்ச்சி பேறறிஞர்**” என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

**முடிவுரை:**

- தாம் **வாழ்வு முழுவதையும்** தமிழ் ஆராய்ச்சிக்கு ஒதுக்கியவர்.
- நமது பெருமைகளை **ஆய்வு நோக்கில்** எடுத்து வழங்கியவர்.
- இதனால்தான் ‘**மயிலையார் ஓர் ஆராய்ச்சி பேறறிஞர்**’ என்கிறோம்.

**2. எச்.ஏ.கிருட்டிணனார் ‘கிறித்தவக் கம்பரே’ என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.**

- **முன்னுரை**
- **கிறித்தவ கம்பர்**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- எச்.எ.கிருட்டிணப்பிள்ளை ‘**கிறித்தவ கம்பர்**’ என்று அழைக்கப்படுவதற்கான காரணத்தை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கிருத்துவ கம்பர்:**

- **வடமொழியில்** எழுதிய இரமயணத்தை தமிழில் **இராமவதாரம்** என்று மொழிபெயர்த்தவர் **கம்பர்.**



Scanned with OKEN Scanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- அதுபோல **"பிலிகிரிம்ஸ் புரோகிரஸ்"** என்னும் ஆங்கில நூலை தமிழில் **இரட்ணிய யாத்திரிகம்** என்று எழுதினார் **கிருட்டிணப்பிள்ளை.**
- இரண்டுமே முதல் நூலாக போற்றப்பட்டது.
- **கம்பராமாயணம் கம்பராலும், இரட்ணிய யாத்திரிகம் கிருட்டிணப்பிள்ளையாலும்** பெருமை பெற்றது.
- எனவே கம்பரும் கிருட்டிணப்பிள்ளையும் **ஒரு தன்மையராக** மதிக்கப்படுகின்றனர்.
- அதனால் தான் **கிறித்தவக் கம்பரானார்** கிருட்டிணப்பிள்ளை.
- கம்பரை போலவே இவரும் **படலத்தை பயன்படுத்தினார்**.
- **சந்தப்பாடல்கள்** கம்பருக்கு சொந்தம். அதேபோல் **கிருட்டிணப்பிள்ளைக்கும் சொந்தம்.**
- **கருத்தான உவமைகளை கையாளுவதில்** கம்பர் வல்லவர். அதேபோல் கிருட்டிணப்பிள்ளையும் கையாண்டுள்ளார்.

**முடிவுரை:**

- **கம்ப இராமயணம்** போன்றே **இராட்ணிய யாத்திரிகம் அமைந்து இருக்கிறது**.
- எனவே எச்.எ.கிருட்டிணப்பிள்ளை **கிறித்தவக் கம்பரே.**

**3. கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.**

- **முன்னுரை**
- **பாசப்பிணைப்பு**
- **பாபுவின் மனிதநேயம்**
- **தத்தெடுத்த தம்பதியரின் பண்புநலம்**
- **முடிவுரை**

**முன்னுரை:**

- **பெற்றோரை இழந்து** தவிக்கும் குழந்தை.
- குழந்தைக்காகவே வாழ்ந்துவரும் **பெரியவர்.**
- குழந்தையுடன் சேர்த்து பெரியவரையும் **தத்தெடுக்கும் தம்பதி** என மனிதநேயப் பண்புகளை படரவிட்டுள்ளார் படைப்பாளர் **சாந்தா தத் அவர்கள்**.

**பாசப்பிணைப்பு:**

- **பெரியவர் ஆறுமுகம்** மனைவியை இழந்தவர்.
- சில மதங்களுக்கு முன்தான் **தன் மகனையும் இழந்தவர்.**
- **பிஞ்சுக் குழந்தையை** பார்த்துக்கொள்ள வேண்டிய மகன், **மனைவியின் பிரிவை** தாங்க முடியாமல் **விஷம் குடித்து இறந்துபோனான்**.
- யாருமற்ற நிலையில் **பேரனின் எதிர்காலத்திற்காகவே** வாழ்ந்தாக வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார் **பெரியவர் ஆறுமுகம்.**

**பாபுவின் மனிதநேயம்:**

- **ஆறுமாத கைக்குழந்தையை** வைத்துக்கொண்டு **பெரியவர் படும் கஷ்டத்தை** பார்த்தார் **மருந்துக்கடைக்காரரான பாபு.**
- அவரின் கஷ்டத்தை போக்க **குழந்தையை தத்துக்கொடுத்துவிடலாம்** என்று வழிக்காட்டினார் பாபு.
- பெரியவர் முதலில் ஏற்றுக்கொள்ளவில்லை எனினும் **குழந்தையின் எதிர்காலத்தை** எண்ணி **தத்துக்கொடுக்க சம்மதிக்கிறார்**.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**தத்தெடுத்த தம்பதியரின் பண்புநலம்:**

- பாபு கூறிய **தம்பதியர்கள் குழந்தையை தத்து எடுத்துக்கொண்டனர்.**
- குழந்தையை விட்டுவிட்டு பெரியவர் தானே வருந்துவர் என்று எண்ணிய அத்தம்பதியர்கள் **பெரியவரையும் தன்னுடன் வருமாறு வேண்டிக்கொண்டார்கள்.**
- இதைக்கேட்ட பெரியவர் **கண்கலங்கி கைகூப்பி வணங்கினார்.**

**முடிவுரை:**

- **ஏதிலி குழந்தைகளையும், ஏதிலிக் குழந்தையைப் போல இருக்கும் பெற்றோர்களை** கவனிப்பது மிக நன்று.
- இந்த இரண்டு செயல்களையும் செய்த தம்பதிகளுக்கு **சமுதாயம் சொல்கிறது நன்றி.**
- **"மனித நேயத்தை வடித்து காட்டும் கோடை மழை இதயத்தில் கொட்டும் மழை".**

*****

**<u>இலக்கணகுறிப்பு:</u>**

1. **கருந்தடம்** - பண்புத்தொகை
2. **வெங்குருதி** - பண்புத்தொகை
3. **வெந்து** - வினையெச்சம்
4. **சினந்து** - வினையெச்சம்
5. **போந்து** - வினையெச்சம்
6. **உன்னலிர்** - முன்னிலைப் பன்மை வினைமுற்று
7. **ஓர்மீன்** - ஏவல் பன்மை வினைமுற்று
8. **சொற்ற** - பெயரெச்சம்
9. **திருந்திய** - பெயரெச்சம்
10. **பாதகர்** - வினையலானையும் பெயர்
11. **ஊன்ற ஊன்ற** - அடுக்குத்தொடர்
12. **வாய்த்த** - பெயரெச்சம்
13. **உவப்ப** - பெயரெச்சம்
14. **கொடுத்த** - பெயரெச்சம்
15. **ஈந்த** - பெயரெச்சம்
16. **கவாஅன்** - செய்யுளிசை அளபெடை
17. **தடக்கை** - உரிச்சொல்தொடர்
18. **நீலம்** - ஆகுபெயர்
19. **அருந்திறல்** - பண்புத்தொகை
20. **நெடுவழி** - பண்புத்தொகை
21. **வெள்ளருவி** - பண்புத்தொகை
22. **நெடுவேல்** - பண்புத்தொகை
23. **நன்மொழி** - பண்புத்தொகை
24. **நன்னாடு** - பண்புத்தொகை
25. **கடல்தானை** - உவமைத்தொகை
26. **அரவக்கடல்** - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
27. **மலைதல்** - தொழிற்பெயர்
28. **விரிகடல்** - வினைத்தொகை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

## உறுப்பிலக்கணம்:

1. **பகைத்த = பகை + த் + த் + அ**

**பகை** – பகுதி; **த்** - சந்தி; **த்** - இறந்த கால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி;

2. **களைந்து = களை + த்(ந்) + த் + உ**

**களை** – பகுதி; **த்** - சந்தி; **த்** '**ந்** ஆனது விகாரம் ; **த்** - இறந்த கால இடைநிலை;

**உ** – வினையெச்ச விகுதி;

3. **பழித்தனர் = பழி + த் + த் + அன் + அர்**

**பழி** – பகுதி; **த்** - சந்தி; **த்** - இறந்த கால இடைநிலை; **அன்** - சாரியை

**அர்** – பலர்பால் வினைமுற்று விகுதி;

4. **இடிந்து = இடி + த் (ந்) + த் + உ**

**இடி** – பகுதி; **த்** - சந்தி; **த்** '**ந்** ஆனது விகாரம் ; **த்** - இறந்த கால இடைநிலை;

**உ** – வினையெச்ச விகுதி;

5. **ஈந்த = ஈ + த் (ந்) + த் + அ**

**ஈ** – பகுதி; **த்** - சந்தி; **த்** '**ந்** ஆனது விகாரம்; **த்** - இறந்த கால இடைநிலை;

**அ** – பெயரெச்ச விகுதி;

6. **அமர்ந்தனன் = அமர் + த் (ந்) + த் + அன் + அன்**

**அமர்** – பகுதி; **த்** - சந்தி; '**ந்** ஆனது விகாரம்; **த்** - இறந்த கால இடைநிலை; **அன்** - சாரியை

**அன்** – ஆண்பால் வினைமுற்று விகுதி;

7. **தாங்கிய = தாங்கு + இ (ன்) + ய் + அ**

**தாங்கு** – பகுதி; **இ (ன்)** - இடைநிலை; '**ய்** - உடம்படுமெய்; **அ** – பெயரெச்ச விகுதி;

## புணர்ச்சி விதி:

1. **முன்னுடை = முன் + உடை**

**விதி:** தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் - முன்ன் + உடை.

**விதி:** உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – முன்னுடை.

2. **ஏழையென = ஏழை + என**

**விதி:** 'இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனைய உயிர் வழி வவ்வும் - ஏழை + ய் என.

**விதி:** உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – ஏழையென.

3. **நன்மொழி = நன்மை + மொழி**

**விதி:** ஈறுபோதல் - நன்மொழி.

4. **உரனுடை = உரன் + உடை**

**விதி:** உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – உரனுடை.

## விடைக்கேற்ற வினா அமைக்க:

1. **குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.**

குடும்பம் என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

**2. நடுவண் அரசு 2006-ம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.**

நடுவண் அரசு எப்பொழுது பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது?

**3. சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யும் பாதுகாப்பாக பயணிக்கவும் உதவுகின்றன.**

சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் எவற்றிற்கு உதவுகின்றன?

**4. 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.**

தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் எங்கு எப்பொழுது அமைக்கப்பட்டது?

**5. "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியேர்சன்.**

எதனை, ஆவணப்படம் என்கிறார் கிரியோர்சன்?

## இலக்கியம் நயம் பாராட்டுக:

**வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**
**கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்**
**கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்**
**தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்**
**செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்**
**கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்**
**குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே**

**- திரிகூட. ராசப்பக் கவிராயர்**

## பா நயம் பாராட்டல்

**மையக்கருத்து:**

⁂ பல்வேறு சிறப்புகாளல் பெருமை வாய்ந்தது திரிகூடமலை என்று கவிஞர் **திரிகூட. ராசப்பக் கவிராயர்** போற்றி புகழ்ந்துள்ளார்.

**மோனை நயம்:** **"முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை"**

**க** : **கா**னவர்கள் - **க**மனசித்தர்

**எதுகை நயம்:** **"இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை"**

**ன** : வானரங்கள் - கானவர்கள்

**ன** : தேனருவி - கூனலினம்

**இயைபு நயம்:** **"கடைசி எழுத்து ஒன்றி வருவது இயைபு"**

அழைப்**பார்** - விளைப்**பார்**

கொஞ்**சும்** - கெஞ்**சும்**

**அணி நயம்:**

இப்பாடலை அணிநயத்துடன் திரிகூட.ராசப்பக் கவிராயர் பாடியுள்ளார்.

**சந்த நயம்:**

இப்பாடல் சந்த நயத்துடன் பாடப்பட்டுள்ளது.

*****



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

## படிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| **Stamp pad** | மை பொதி | **File** | கோப்பு |
| **Stapler** | கம்பி தைப்புக் கருவி | **Rubber stamp** | இழுவை முத்திரை |
| **Folder** | மடிப்புத்தாள் | **Eraser** | அழிப்பான் |

## அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| **தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்** | மயிலை சீனி வெங்கடசாமி |
| **மாறுபட்டுச் சிந்திக்கலாமா** | சிபி. கே. சாலமன் |
| **எழு பெருவள்ளல்கள்** | கி.வ. ஜகந்நாதன் |
| **இரட்சணிய யாத்திரிகம்** | புலவர் சே. சுந்தரராசன் |
| **இயேசு காவியம்** | கண்ணதாசன் |
| **கோபல்ல கிராமம்** | கி. இராஜநாராயணன் |
| **பால்வீதி** | அப்துல் ரகுமான் |
| **வீரபாண்டிய கட்டபொம்மன்** | அரு. ராமநாதன் |

******

VVMS-PV
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# மனப்பாடப்பகுதி

## 1. தண்டியலங்காரம்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரென்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்

**- உரை மேற்கோள் பாடல்**

## 2. நெடுநல்வாடை

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொ் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளயர் கவுள்புடையூஉ நடுங்க

**- நக்கீரர்**

## 3. கம்பராமாயணம்

துன்பு உளது எனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல் '
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள இனி நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

**- கம்பர்**

## 4. கம்பராமாயணம்

குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்
எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய
நின்னொடும் எழுவர் ஆனேம்
புகழ்அருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

**- கம்பர்**

## 5. இதில் வெற்றி பெற

விண்வேறு விண்வெளியில் இயங்க கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு
மண்வேறு மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு பனித்துளியும் மழையும் வேறு
புண்வேறு வீரர்களின் விழுப்புண் வேறு
புகழ்வேறு செல்வாக்கு வேறு காணும்
கண்வேறு கல்விக்கண் வேறு கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறுவேறு

**- சுரதா**

## 6. புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே அதனால்
காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறா அர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.

**- ஔவையார்**

## 7. தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியா திருக்க வேண்டும்.

**- இராமலிங்க அடிகள்**

## 8. சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவோடு
கூடிநின்று இசைத்தது ஆமந்திரிகை

**- இளங்கோவடிகள்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

## 9. புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பல்நாட்கு ஆகும்
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்

- பிசிராந்தையார்

## 10. இரட்சணிய யாத்திரிகம்

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி

- எச்.எ. கிருட்டிணப்பிள்ளை

## 11. சிறுபாணாற்றுப்படை

எழுசமங் கடந்த கவளம் கொளினே
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்

- நத்தத்தனார்.

## 12. திருக்குறள்

- திருவள்ளுவர்

| | |
|---|---|
| 1. | அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்கை<br>பண்பும் பயனும் அது. |
| 2. | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்<br>தெய்வத்துள் வைக்கப் படும். |
| 3. | செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்<br>வானகமும் ஆற்றல் அரிது. |
| 4. | நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது<br>அன்றே மறப்பது நன்று. |
| 5. | எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை<br>செய்நன்றி கொன்ற மகற்கு. |
| 6. | அ.·.காமை செல்வத்திற்கு யாதெனின் வெ.·.காமை<br>வேண்டும் பிறன்கைப் பொருள் |
| 7. | மறத்தல் வெகுளியை யார்மட்டும் தீய<br>பிறத்தல் அதனான் வரும். |
| 8. | தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கல்<br>தன்னையே கொல்லும் சினம். |
| 9. | சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்<br>ஏமப் புணையைச் சுடும். |
| 10. | நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்<br>உண்மை அறிவே மிகும். |

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 13. திருக்குறள்

- திருவள்ளுவர்

| | |
|---|---|
| 1. | அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்<br>உள்ளழிக்க லாகா அரண். |
| 2. | எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்பது அறிவு. |
| 3. | எதிராகக் காக்கும் அறிவினார்க்கு இல்லை<br>அதிர வருவதோர் நோய். |
| 4. | நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின்<br>அல்லல் படுப்பதூஉம் இல் |
| 5. | வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்<br>மற்றைய எல்லாம் பிற. |
| 6. | சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்<br>சொல்லிய வண்ணம் செயல். |
| 7. | உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு<br>அச்சாணி அன்னார் உடைத்து. |
| 8. | கடன்அறிந்து காலம் கருதி இடன் அறிந்து<br>எண்ணி உரைப்பான் தலை. |
| 9. | வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக<br>கேள்போல் பகைவர் தொடர்பு. |
| 10. | பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்<br>கழகத்து காலை புகின். |

********

## அணி இலக்கணம்

### 1. பொருள் வேற்றுமை அணி:

**அணி விளக்கம்:** இரு பொருள்களுக்கு இடையெ உள்ள ஒற்றுமையை கூறி அதை வேறுபடுத்துவது.

**சான்று:**

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னே ரில்லாத தமிழ்.

**பொருத்தம்:**

**ஒற்றுமை:** கதிரவனும் தமிழும் இருளை போற்றுகின்றன.

**வேற்றுமை:** கதிரவன் புற இருளையும், தமிழ் அக இருளையும் போக்குகிறது. எனவே கதிரவனை விட தமிழே சிறந்நது.

### 2. ஏகதேச உருவக அணி:

**அணி விளக்கம்:** ஒரு பொருளை உருவகம் செய்து மற்றொரு பொருளை உருவகம் செய்யாமல் விடுவது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**சான்று:**

சினமென்னும் சேர்ந்தரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**பொருத்தம்:** சினத்தை நெருப்பாகவும், இனத்தை தெப்பமாகவும் உருவகம் செய்தவர் உலக வாழ்க்கையை கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார்.

**3. உவமை அணி:**

**அணி விளக்கம்:** உவமை ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் அமைத்து உவம உருபு வெளிப்படையாக வருவது.

**சான்று:**

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.

**பொருத்தம்:**

**உவமை:** குடங்கருள் பாம்போடு உடனுறைதல்

**உவமேயம்:** உடம்பாடு இலாதவர் வாழ்க்கை

**உவம உருபு:** அற்று

**4. சொல் பொருள் பின்வரு நிலை அணி:**

**அணி விளக்கம்:** செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தருவது.

**சான்று:**

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

**பொருத்தம்:** இக்குறளில் பொருள் என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து கருத்து எனத் தந்த பொருளையே தருகிறது.

**5. நிரல் நிறை அணி:**

**அணி விளக்கம்:** சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி பொருள் கொள்ள செய்வது

**சான்று:**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**பொருத்தம்:** அன்பும் அறனும் உடைய இல்வாழ்கை பண்பும் பயனும் உடையதாகவும் அமையும் என வரிசை முறைப்படி பொருள் கொள்கிறது.

## திணை

**1. பாடாண் திணை:**

**திணை விளக்கம்:** ஒருவருடைய புகழ், வலிமை, கொடை அருள் போன்ற நல்லியல்புகளை சிறப்பித்துக் கூறுவது.

**சான்று:** வாயிலோயே வாயிலோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தம் இப்பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்?

**பொருத்தம்:** இப்பாடல் அதியமானின் கொடைத்திறத்தைப் புலப்படுத்தகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner

**2. பரிசில் துறை:**

**துறை விளக்கம்:** பரிசு வேண்டி வாயிலில் நிற்பது பரிசில் துறை.

**சான்று:** வாயிலோயே வாயிலோயே

வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தம் இப்பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்?

**பொருத்தம்:** பரிசு கிடைக்க சற்றுத் தாமதமாகவே வாயிற்க் காவலனிடம் ஔவையார் வாதம் செய்கிறார்.

*************

VVMS-PV
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com
Scanned with OKEN Scanner